Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

சிலோன் எலக்றிக்கல்ஸ்

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, வைகாசி 9-ஆம் நாள். (23-5-59) சனிக்கிழமை இதழ் 16.

# எம். ஈ. பி. ஆட்சி அரோகரா! பார்லிமெண்டில்

## "மெஜாரிட்டி" இல்லை!

## ஆனுலும் கடைசிவரை நீடிக்கலாமென்று பிரதமர் நம்புகிருர்

### இடதுசாரிகள் ஒற்றுமை: தமிழ் எம். பி.க்கள் நிலைமை இனி என்ன? பொதுமக்கள் கவலை

— நமது அரசியல் நிருபர் —

இலங்கை மந்திரி சபையில் ஏற்பட்ட நெருக்கடியை பிரதமர் பண்டாரநாயக்கா வலதுசாரிகள் பக்கம் சேர்ந்து ஒருவிதமாகத் தீர்த்துவிட்டார்.

ஆனுல் அரசாங்கக்கட்சிக்குப் பார்லிமெண்டில் இப்பொழுது பெரும்பான்மையோரின் ஆதரவில்லை. அக்கட்சிக்கு சுமார் 47 பேரின் ஆதரவும் எதிர்க்கட்சிக்கு 52 பேரின் ஆதரவுமுள்ளது. எதிர்க்கட்சியிலிருந்து சில எதிரிகள் அரசாங்கக் கட்சியில் சேரக்கூடும்.

இந்த ஆட்சியை பார்லிமெண்ட் ஆயுட் காலம் வரை அதாவது இன்னும் 23 மாதங்களுக்கு நடத்தலாமென்று பிரதமர் உறுதியாக நம்புகிருர்.

இதற்கிடையே இடது சாரிகள் ஒன்றுபட்டு இந்த அரசாங்கத்தை நீக்க முற்பட்டுள்ளன. வருகிற 26-ந் திகதி பார்லிமெண்ட் கூடுகையில் பல அதிர்வேட்டுகள் கேட்கலாம். நாட்டில் இனி வேலை நிறுத்தங்களும் குழப்பங்களும் ஏற்படுமோ என்று பொதுமக்கள் அஞ்சுகின்றனர்.

பிலிப் குணவர்த்தன மந்திரி சபையிலிருந்து விலகலாமென்றும், இதுவிஷயமாக அரசியல் வட்டாரங்களில் பலத்த வதந்தி உலவுவதாகவும் 'ஈழநாடு' 9-5-59 இதழில் எழுதியிருந்தேன். இப்போது அது மெய்யாகிவிட்டது.

கூட்டுறவு வங்கி மசோதா பொறுப்பை அவரிடமிருந்து பறித்த போதே பிலிப் அப்பதவியை விட்டு விலகி இருக்க வேண்டும். ஆனுல் கூடுமான வரை விட்டுக்கொடுத்து மந்திரி சபை நெருக்கடி ஏற்படாமல் தடுக்க வேண்டுமென்ருே, பதவி ஆசை காரணமாகவோ அவர் பதவியில் ஒட்டிக்கொண்டிருந்தார்.

என்றுலும் மந்திரிசபையிலுள்ள வலது சாரிகள் திருப்தியடையவில்லை. அவரை மந்திரி சபையிலிருந்து விரட்டி விட வேண்டுமென்றும், இன்றேல் தாங்கள் மந்திரி சபைக்கூட்டத்துக்கு வரமுடியாதென்றும் இரண்டுவார காலமாகப் பிடிவாதம்செய்து பெரிய நெருக்கடியை ஏற்படுத்தினர்.

பதவியிலிருந்து பிலிப்பை நேரடியாக நீக்கக்கூடிய துணிச்சலோ அல்லது காரணமோ பிரதமர் பண்டாரநாயக்காவுக்கு இல்லை. எனினும் வலது சாரியினரைத் திருப்தி செய்யாவிட்டால் மந்திரி சபை முறிந்து விடலாமென்பதைக் கண்டார். அதனுல் பிலிப்பிடமிருந்து உணவு கூட்டுறவு இலாகாக்களை மாற்றி அவற்றிற்குத் தாமே பொறுப்பேற்ருர். மந்திரி வில்லியம் ஸில்வாவிடமிருந்து கடற்தொழில் இலாகாவைப் பறித்து மாற்றினுர்.

### ஏன்கலந்தாலோசிக்கவில்லை?

இந்த இலாகாக்களை மாற்றுமுன் சம்பந்தப்பட்ட இரு மந்திரிகளையும் பிரதமர் சாதாரணமாகக் கலந்தாலோசித்திருக்க வேண்டும். ஆனுல் அவர் அவ்விதம் செய்யவில்லை. அவர் கலந்து கொள்ளாத காரணமென்ன? அவர்களை அவமதிக்க வேண்டும் என்ற எண்ணம் தமக்கு இல்லை என்று பிரதமர் கூறினும் பிலிப் இதை ஒப்பவில்லை. ஒருவேளை முன் கூட்டியேபிரதமர் கலந்தாலோசித்திருந்தால், தமது மனதை அவர்கள் மாற்றிவிடுவார்களென்ற சந்தேகமா? காரணம் எதுவாயினும்வலதுசாரிகளின் சம்மதத்தைப் பற்றி மட்டும் கேட்டுப்பிரதமர் இந்தநடவடிக்கையை எடுத்துக்கொண்டார். இதிலிருந்து இடது சாரிக்காரர்களைக் கை விட்டு, வலது சாரிகளையே ஆதரிப்பதென்று பிரதமர் தமக்குள் ஒரு பெரிய முடிவுசெய்து விட்டாரென்பது தெளிவு.

[9-ம் பக்கம் பார்க்க]

### அரசாங்கக் கட்சியை ஆதரிப்பவர்கள்.

| | | |
|---|---|---|
| தெரிவு செய்யப்பட்டவர்கள் | — | 41 |
| நியமன மெம்பர்கள் | — | 6 |
| மொத்தம் | — | 47 |

### எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

| | | |
|---|---|---|
| சமசமாஜக் கட்சி | — | 14 |
| சமஷ்டிக் கட்சி | — | 8 |
| யு. என். பி. கட்சி | — | 6 |
| வி. எல். எஸ். எஸ். பி. கட்சி | — | 5 |
| கம்யுனிஸ்ட் கட்சி | — | 3 |
| மற்றவர்கள் | — | 16 |
| மொத்தம் | — | 52 |

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலஎதிரிகள் அரசாங்கத்தை ஆதரிப்பின், அரசாங்கத்துக்கு மேலதிகபலம் (மெஜாரிட்டி) கிடைக்கக்கூடும்.

### சொந்த நாட்டின் வரலாறு மாணவர்களுக்கு ஆர்வம் ஊட்டும்

யாழ்ப்பாணம்

பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கப்படும் சரித்திர நூல்களில் சொந்த நாட்டின் வரலாறு முக்கிய இடம் பெறல் வேண்டும். அப்போதுதான் மாணவர்களுக்குச் சரித்திர பாடத்தில் நாட்டம் ஏற்படுவதுடன் சொந்த நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்ளவேண்டுமென்ற ஆர்வமும் உற்சாகமும் ஏற்படுமென ஈழத்தமிழர் சரித்திர ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு. எஸ். யு. சோமசேகரம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சென்ற புதன் கிழமை நடைபெற்ற கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசும்போது குறிப்பிட்டார்.

ஈழத் தமிழர் சரித்திர ஆராய்ச்சிக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அசைஸ் கமிஷனர் டக்டர் எச். டபிள்யூ. தம்பையா 'ஆரியச் சக்கரவர்த்திகாலம்' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் யாழ்ப்பாணத்தின் வரலாற்றினைச் சரித்திரச் சான்றுகளுடன் சுருக்கமாக எடுத்துரைத்தார். யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்களைப் பற்றிய விபரங்களை அவர் தக்க ஆதாரங்களுடன் விரிவாக எடுத்துரைத்தார். சங்கிலி மன்னன் பற்றி அவர் தெரிவித்தவிபரங்கள்சரித்திர மாணவர்களுக்கு மிகவும் உபயோகமானதாக அமைந்திருந்தன.

ஒரு ரூபாவுக்கு மிகுதியான

மைல்கள்

பிரிட்ஜ்ஸ்டோன்

டையர்கள்

BRIDGESTONE TYRES

*Distributors*

TUCKERS AUTODROME

ஏகவிநியோகஸ்தர்கள்

ஒட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன்: 496 தந்தி: "ஒட்டோஸ்"

# நாட்டுக் கூத்துக்கு ஆதரவு

## மட்டக்களப்பில் சிங்கள 'ஸ்ரீ' பஸ் அதிகரிக்கின்றது

மட்டக்களப்பு

கிழக்கு மாகாணத்தின் அருங் கலைகளில் ஒன்ருன நாட்டுக் கூத்துக்குப் புத்துயிரளிக்கும் நோக்கத்துடன், கல்வி, கலாச்சாரப் பகுதியினர், கிழக்கு மாகாணப் பாடசாலைகளின் கூத்துப் போட்டியொன்றை சென்றவாரம் மட்டக்களப்பில் நடாத்தினர்.

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலைத் திறந்தவெளி அரங்கில், சென்ற 16-5-59ல் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பின்வரும் பாடசாலைகள் கலந்து கொண்டன: வாழைச்சேனை வட்டாரம்... கிரான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அக்கரைப்பற்று வட்டாரம்—காரைதீவு இ. கி. மி. த. க. பாடசாலை, மட்டக்களப்பு பட்டின வட்டாரம்—சந்திவெளி மெதடிஸ்ற் மி. த. க. பாடசாலை, திருகோணமலை வட்டாரம்—தம்பலகாமம் அரசினர் த. க. பாடசாலை, பட்டிருப்பு வட்டாரம்—எருவில் அ. த. க. பாடசாலை, கல்முனை வட்டாரம்—குருக்கள்மடம் மெ. த. க. பாடசாலை.

அகில இலங்கை கலைக் கழகத் தலைவரும் சர்வகலாசாலை விரிவுரையாளருமான கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையிற் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

முதலிடம் பெற்ற குருக்கள் மடம் மெதடிஸ்ற் த. க. பாடசாலைத் தலைமை ஆசிரியருக்குத் தலைவர் வெற்றிக் கேடயத்தை வழங்கினுர். கல்விப் பகுதியினருக்காகப் போட்டிகளை ஒழுங்கு செய்த திரு. எஸ். ஆறுமுகவடிவேல் கலைக்கழகத்தின் முயற்சிகளைப் பாராட்டிப் பேசினுர்.

### 'ஸ்ரீ' பஸ் நடமாட்டம்

மட்டக்களப்பில் இப்போதெல்லாம் சிங்கள 'ஸ்ரீ' பஸ்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டமொன்றை ஆரம்பித்து, சிங்கள ஸ்ரீ இலக்க பஸ்களுக்கு முடிவு காணவேண்டுமென்று, தமிழரசுத் தொண்டர்கள் மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரையைக் கேட்டுவரும் அதே நேரத்தில், கம்யூனிஸ்ட் ஆதரவு கொண்ட மட்டக்களப்பு மோட்டார் தொழிலாளர் சங்கத்தினர் புதிய ஸ்ரீ இலக்க பஸ்களை மட்டக்களப்புப் பகுதிக்கு அனுப்பவேண்டுமென்று, மட்டக்களப்பு யூனிட் இ. போ. ச. அதிகாரிகளை வேண்டியுள்ளனர்.

இந்நிலையில், ஸ்ரீ பஸ்கள் நடமாட்டம் மட்டக்களப்பில் அதிகரித்து வருகின்றது. ஒரு ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்திலோ, அல்லது நிரந்தர ஸ்ரீ பஸ் சேவையிலோ போய் முடியலாமென்பது தெளிவாகத் தெரிகின்றது.

### வித்துவானும் பாரியாரும்

சமீபத்தில் இலங்கைக்கு வந்திருந்த தவப்பெருந்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் அழைப்பை ஏற்று, மட்டக்களப்பு விபுலாநந்த கழகச் செயலாளரான வித்துவான் பண்டித வி. சீ. கந்தையாவும், அவரது பாரியாரும் மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றச் செயலாளருமான திருமதி கங்கேஸ்வரி கந்தையாவும் இம் மாதம் 18ம் திகதி தமிழ் நாட்டுக்குப் பயணமானுர்கள்.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

# அன்றும் இன்றும்

வகுப்புக் கலவரங்கள் நடந்து ஏறத்தாழ ஓராண்டு கழிந்துவிட்டது. ஆனல் அன்று நடந்தவை என்றுமே எம்மனதை விட்டகலாது.

கருணையே போதித்த புத்தர் அன்று; அவர்வழி வந்த புத்த பக்தர் இனவெறியுடன் இன்று! அசோகனின் மதவளர்ச்சி மாண்பு அன்று; அவரின் அடியார்களின் இனவெறி வளர்ச்சி இன்று! "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பரந்த உள்ளம் அன்று; இலங்கை பௌத்த சிங்களருக்கு மட்டும் சொந்தம் என்ற இனவெறி ஆராய்ச்சி இன்று!

புத்தனின் புனிதமே போற்றிய மணிமேகலை அன்று; அப்புனிதன் சரிதத்தையே எடுத்துரைத்த நற்றமிழ் மொழிக்கு ஆபத்து இன்று! தந்தை இறந்தும் மைந்தனைப் போர்க்களத்துக்கு அனுப்பிய வெற்றிப் பண்பு அன்று; சில காடையர் கூட்டங்களை எதிர்க்கும் திறனற்றுத் தந்நலத்துடன் பொலீஸ் நிலையங்களில் தஞ்சமடைந்த கண்ருவிக் காட்சி இன்று! மதபோதகர்கள் மன்னரிலும் பெரியாரால் மதிக்கப் பெற்றமை அன்று; அன்னோர் பெற்றேரல் ஊற்றப்பெற்று கண்முன் கொழுத்தப்பட்ட கொடூரக் காட்சி இன்று!

கடலெல்லாம் கடந்து கப்பலோட்டி வாணிபஞ் செய்து பெரும் பொருள் சம்பாதித்த வீரப் பண்பு அன்று; கொழும்பிலே, அனுராதபுரத்திலே உள்ள மக்கள் நிலையை எண்ணி ஏங்கி உயிரிழந்த தாயின் சோக வரலாறு இன்று!

தமிழனின் மேன்மையை இகழ்ந்ததனல் கனகவிஜயர்கள் கல் சுமறறப்பெற்ற காட்சி அன்று; தமிழ் தாரினல் மூடப்படவும் பார்த்து வாழாவிருந்த பேதையர் கூட்டம் இன்று!

பிறனுக்கு மனதாலும் தீங்கு ஒண்ணுத பெருந்தன்மைஅன்று; பிறன் அழிந்தொழிதலேயே இலட்சியமாய் கொண்டுழைத்த சேடர்கள் கூட்டம் இன்று!

கூட்டம் கூட்டமாய் சென்று தமிழின் வெற்றி வாகை சூடிய முத்தமிழ் வேந்தர் அன்று; கூட்டம் கூட்டமாய் கப்பலிலும், ரெயிலிலும் ஆற்ருது ஓடி ஒழிந்து கொண்ட நம்மவரின் கண்ருவிக் காட்சி இன்று!

கற்பைக் கண்ணெனப்போற்றிய கண்ணியம் அன்று; நடு ரோட்டில் கதறக் கதறக் கற்பைச் சூறையாடிய கண்ருவிக் காட்சி இன்று! பிறன் மனையை ஏறெடுத்தும் பார்க்காத பெற்றி அன்று: கண்டவனைக் கண்டவிடத்துக் கட்டி வைத்துக் கற்பழித்த காடைச் செயல் இன்று!

அன்பு, அறம், வீரம் முதலிய நற்பண்புகள் சரித்திரங்களில் உண்டு அன்று! இனவெறி, மதவெறி, கொலை, கொள்ளை முதலியன நிரம்ப நிரம்பச் சரித்திரங்களில் உண்டு இன்று!

நல்லவை அன்று; தீயவை இன்று!! அறம் அன்று; மறம் இன்று!!

**எஸ். வி. எஸ். செல்வநாயகம்.**
வவுனியா

# தமிழ்சினிமாவில் ஆங்கில மெட்டுகள்

கீழைத்தேய சங்கீதமும் மேலைத்தேய சங்கீதமும் கலந்து வரும் புதுவித "டப்பா"ப் பாட்டுக்களே இந்தியப் படங்களில் இப்பொழுது இடம் பெறுகின்றன. இப் பாடல்களுக்கும் மற்றைய "லகுசங்கீத"ப் பாடல்களுக்கும் உபயோகிக்கப்படும் இசைக்கருவிகள் தாமும் பெரும்பாலும் மேனுட்டுக்கே உரித்தானவை.

தமிழ்த் திரைப்படங்கள் ஹிந்தி மெட்டுக்களில் அமைவது ஒரு "பாஷண"கச்சிறிது காலத்துக்குமுன் இருந்தது. இப் பாடல்களை இரசித்து வந்த மக்கள் காலக்கிரமத்தில் அவற்றை வெறுக்கலாயினர். இசையமைப்பாளர்களும் இந்த இந்தி மெட்டுக்களை விடுத்து ஆங்கில மெட்டுக்களைத் தழுவலாயினர். இதனல் இப்பொழுது பெருகிவரும் ஆங்கில மெட்டுப் பாடல்கள் மக்கள் விருப்பின் பிரதிபலிப்பாய் விளங்குகின்றன என்று சொல்லலாம்.

காலத்தின் போக்கிற்கிணங்கவே எதுவும் மாறுவதியற்கை. எனவே, திரைப்பட இசையிலும் மாறுதல் உண்டாகியிருப்பதில் ஆச்சரியம் எதுவுமில்லை. ஆனல் கர்நாடக சங்கீதத்தைப் படங்களில் புகுத்த முன்வரின், படிப்படியாக மக்களின் இரசிகத் தன்மை உயர இடமுண்டு. இப்பொழுதுங்கூட சில இசையமைப்பாளர்கள் முக்கியமாக மகாதேவன், இராமநாதன் ஆகியோர் உள்ளத்தைக் கவரக்கூடிய முறையில் கர்நாடக சங்கீதத்தினைப் புகுத்தி வருகிருர்கள்.

புனிதமான கர்நாடக சங்கீதம் ஒருநாளும் திரைப்படப் பாடல்களாகிய "டப்பா"ப் பாடல்களால் பாதிக்கப்படமாட்டா. எனவே, திரைப்படப் பாட்டுக்கள் சில "டப்பா" சங்கீதமாய் இருப்பதில் பாதகமில்லை. ஆகவேதான், ஆங்கிலமெட்டுப் பாடல்கள் தமிழ்த் திரைப் படங்களில் பெருகிவருவதையிட்டுக் குறை கூறமுடியாது.

தமிழ்த் திரைப்பட இரசிகர்களுக்குஆங்கிலப்படங்கள் தெரியாதிருப்பதே மேற்சொன்ன கூற்றுக்குக் காரணம். அப்படித்தான் அவர்கள் கேட்க நேரிடினும் அவற்றில் அதிக கவனஞ் செலுத்துவதில்லை. ஈற்றில் ஒரு வேண்டுகோள். கர்நாட சங்கீத ராகங்களைக் கொண்ட பாடல்களாக சினிமாப் பாடல்கள் பொருட்படும். அதேநேரத்தில் கவர்ச்சிகரமான மேனுட்டு மெட்டுப் பாடல்கள் சிலவும் நுழையட்டும். "டப்பா" பாட்டுக்களின் கலப்பிலும் கவர்ச்சியிருக்கத்தானே செய்கிறது! மேலும் மேனுட்டு இசையின் ஒரு பிரிவாகிய "மக்கள் சங்கீத"த்தில் கீழைத்தேய இசைக் கலப்பு இருக்கும் பொழுது, கீழைத்தேய இசையின் "மக்கள் சங்கீத"மாகிய சினிமாப் பாடல்களில் மேலைத்தேய இசைக்கலப்பு இருப்பதில் தவறில்லையே.

**எஸ். சிவகுமாரன்**
வெள்ளவத்தை


உங்கள் கட்டடங்களுக்கு வேண்டிய சகலவிதமான

## இரும்புச் சாமான்களுக்கு

எங்களிடம் விசாரியுங்கள்

★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
★ உருண்டைக் கம்பிகள் ,,
★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
★ தீந்தை, வார்னிஸ் வகைகள்
★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

## சண்முகம் ஸ்ரோர்ஸ்

உரிமையாளர் : ஆ. சண்முகராசா
222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன் : 697



## வரி விளம்பரம்

சிறந்த முறையில் "ரைப் பிறைற்றிங்" சொல்லிக்கொடுக்கப்படும். ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சுருக்கெழுத்தில் பட்டம் பெறுவதற்கு ஜோஸ்அன்ரூவை ஆலோசியுங்கள்—4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடனும், குறைந்த செலவிலும் சுருக்கெழுத்துப் படிப்பதற்கு, ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் .

### விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் வினியோகம் செய்யப்பட வேண்டுமானல் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது—வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் வீனஸ் சோப் —கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும் **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

திறமான றங்குப் பெட்டிகள், சூட்கேஸ்கள், சப்பாத்து வகைகளுக்கு **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே.கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

பட்டு,பருத்தி, புடைவைகள், தையல் வேலைகளுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் - **கணேசன் ஸ்ரோர்ஸ்,** 78, கே.கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.


வள்ளுவன் தன்னை உலகினுக்கே — தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு

# உலகம் புகழும் வள்ளுவன்

— ம. ம. —

திருக்குறள் தமிழ்கூறும் நல்லுலகின் தனிப்பெரும் செல்வம். அதனை இவ்வுலகுக்களித்துச்சென்ற திருவள்ளுவர் தெய்வப் பிறவி எனில் அது மிகையாகாது. அவர் கூறிய நல்லுரைகள் ஒரு துறையைப்பற்றியதல்ல; ஒரு பொருளைப்பற்றியதல்ல; ஒரு நாட்டவர்க்கோ, இனத்தவர்க்கோ அல்ல. வள்ளுவர் வாசகம் உலகத்தின் கண்ணுள்ள எல்லாத் துறை பற்றியும், உலகோர்க்கு அறிவூட்டுவதுடன், அவர் மொழிகள் எல்லா நாட்டவர்க்கும், பொதுவானவை.

வள்ளுவர் புகழ் பாடுவதுடன் நாம் நின்றுவிடுதல் ஆகாது. அவருடைய போதனைகளை நம் வாழ்க்கையிலும் பின்பற்ற எம்மாலான முயற்சிகள் செய்யவேண்டும். திருக்குறள் கூறும் நல்லுரைகளை உலகம் முழுவதுமே பின்பற்ற வேண்டும். சிறுவயதில் இருந்தே தமிழ்மக்கள் வள்ளுவரின் குறள்களைப் படிப்பார்களேயானல், அவர்களின் வாழ்க்கைக்கு அவை பெரும் உதவிபுரிந்து, அவர்களை நல்வழிப்படுத்தும் என்பதில் ஐயமேயில்லை.

திருவள்ளுவர் திருநாளை இம்முறை சுழிபுரத்தில் தமிழ் மறைக் கழகத்தார் கொண்டாடுகின்றனர். இவ்விதம் ஆண்டுக்கொரு முறையாவது திருவள்ளுவரின் நினைவை நாம் ஞாபகப்படுத்திப் போற்றுவது வரவேற்கத் தக்கதே. இப்படிக் கொண்டாட்டங்கள் நடத்துவது நல்லதே என்ருலும், திருக்குறளைப் பணக்காரன், ஏழை என்று பாராது ஒவ்வொருவருடைய இல்லத்திற்கும் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். தமிழ் நாட்டு நல்லறிஞர்களைக் கொண்டு அதனுடைய சிறப்பையும், மகிமையையும் பொது மக்களுக்கு விளக்கிக் காண்பிக்க வேண்டும். பொதுமக்கள் எல்லோரும் இப் பொது நூலின் தன்மையை, அதன் உண்மையை நன்கு உணர வழிகோல வேண்டும்.

வள்ளுவர் நம் உள்ளங்களில் என்றென்றும் வாழ்வார். அவருடைய குறள்களுள் ஒரு குறளுக்கேற்பவாவது நாம் நமது வாழ்க்கையை நடாத்தினேமேயானல், அதுவே நம் வாழ்க்கையில் நாம் ஈட்டிய அரும்பெரும் சாதனை என்று நாம் இறும்பூதெய்தலாம். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' மட்டுமல்ல, உலகமும் அவன் அளித்துள்ள அறிவுரைகளை அள்ளியள்ளிப் பருகவேண்டும். அப்பொழுது, அவர்கள் வாழ்வு அறிவொளியுடன் மிளிரும்; அவர்கள் இதயங்களில் அன்பின் பேரொளி வீசும். உலக சமாதானம் நிலவும்.

# சாதிப் பூசல்களை வாலிபர்கள் ஒதுக்க வேண்டும்

யாழ்ப்பாணம்

வாலிபர்களுக்குக் கல்வியை நேர்மையுடன் புகட்டுவதோடு நேர்மை, நீதி, சீரிய வாழ்க்கை முதலிய நற்பண்புகளும் அவசியம் போதிக்கப்படல் வேண்டும். சாதிப்பூசல்கள் மிகுந்த இக்காலத்தில், நம் வாலிபர்கள் அவற்றை ஒதுக்கித்தள்ள முற்படவேண்டும். பரீட்சையிற் சித்தியடைவதற்காகக் கல்வி கற்காது, தத்தம் அறிவு வளர்ச்சிக்காகவே கல்வி கற்கவேண்டும். உத்தியோகம் பெறுவதற்காகக் கல்வி கற்ற காலம் மலை ஏறி விட்டது. கல்வியின் தரம் மாற்றியமைக்கப்பட வேண்டும். இவ்வாறு காரை நகர் இந்துக்கல்லூரிப் பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அசைஸ் கமிசனர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கூறினர்.

விழாவிற்குத் தலைமை வகித்த சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி கல்லூரிக்குக் காரணகர்த்தராகத் திகழ்ந்த சுயம்பு அவர்களின் ஞாபகம் எக்காலமும்என்றும் நின்று நிலவுமெனக்கூறினர். (ந. நி.)

# சிறுபான்மைத்தமிழர் பொதுநிர்வாகசபைக்கூட்டம்

யாழ்ப்பாணம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் பொது நிர்வாக சபைக் கூட்டமொன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசியற் கட்சிகளில் அங்கத்தவரர்யிருப்பவர்கள் முக்கிய நிர்வாகிகளாக இருக்கக்கூடாதெனும் விஷயம்பற்றிக் காரசாரமாக விவாதம் நடைபெற்றது. எவ்விதமான முடிவும் செய்து கொள்ளாமற் கூட்டம் முடிவுற்றது.

# சுழிபுரத்தில் திருக்குறள் மாநாடு

சுழிபுரம் விற்ரோரியாக் கல்லூரியில் மே 22-இல் ஆரம்பமாகியுள்ள தமிழ் மறைக் கழகத்தின் ஏழாவது மாநாடு 23-ஆம், 24-ஆம் நாட்களில் நடைபெறும்.

மூன்று நாளும் முறையே தமிழ் மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம், பேராசிரியர் திரு. க. ச. அருணந்தி, வடமாகாணக் கல்வி உத்தியோகத்தர் திரு. சி. உ. சோமசேகரம் என்போர் மாநாட்டுக்குத் தலைமை தாங்குவார்கள். மாநாட்டில் மூன்று நாளும் பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

திருவாட்டிகள் அமிர்தாம்பிகை சதாசிவம், சத்திதேவி துரைசிங்கம், பண்டிதர் க. கிருட்டிணபிள்ளை, ஆசிரியர் கு. வி. செல்வத்துரை, வழக்கறிஞர் திரு. வே. நாகலிங்கம், வித்துவான் பொன். முத்துக்குமாரு, வித்துவான் க. கி. நடராசன் முதலிய பேரறிஞர்களுஞ் சொற்பொழிவாற்றுவார்கள்.

# ஸ்ரீ நாகவிகாரை புனருத்தாரண யோசனை

யாழ்ப்பாணம்

கடந்த வருடம் மே மாதம் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின்போது சேதமடைந்த ஸ்ரீ நாகவிகாரையை ஏனைய தொழிற் சங்கங்களுடன் சேர்ந்து புனருத்தாரணஞ் செய்தல் வேண்டும் என்று அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (ந. நி.)

# திபேத்தில் சீனம் நடவடிக்கை எடுத்த காரணமென்ன?

## ஆச்சார்ய கிருபளானியின் குற்றச்சாட்டு

### ‘பீபிள்ஸ் டெயிலி’ கூறும் சமாதானம்

**இந்திய —சீன உறவு, திபேத்திய புரட்சி காரணமாகவும் தலாய்லாமா இந்தியாவில் தஞ்சம்புகுந்ததாலும் மிகவும் நெருக்கடியாகியுள்ளது. இந்தியாவின் பாதுகாப்புக்கே ஆபத்து வந்திருப்பதாயும் அஞ்சப்படுகிறது. இவ்விஷயமாக ஆசார்ய கிருபளானி விடுத்துள்ள எச்சரிக்கையும், பீகிங்கின், “பீபிள்ஸ் டெயிலி” பத்திரிகை கூறும் சமாதானமும் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.**

“இந்தியாவின்பால் சீனம் என்றும் நட்புடன் இராது. இந்தியாவுடன் நட்பாக இருக்க விரும்பும் எந்த நாடும் முச்சந்திக்குச்சென்று நம்மீது ஊளை இடாது” என்று பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் ஆசார்ய கிருபளானி இந்திய லோக் சபையில் கூறினர். “மேற்கத்திய ஏகாதிபத்திய வல்லரசுகள் செய்ததற்கும், திபேத்திலே சீனம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைக்கும் வேற்றுமை இல்லை. இது மற்ற ஆசிய நாடுகளுக்கு ஓர் எச்சரிக்கையாகும்” என்றார்.

“சமீபகாலமாகச் சீனம் அதிக ஆத்திரப்படுகிறது. அதன் மனச்சாட்சி சரியில்லாததற்கு இது அடையாளமாகும். திபேத்தின்மீது சீனம் ஆதிபத்திய உரிமை கொண்டாடுவது காலாவதியானதும் உளுத்துப்போனதுமான விஷயமாகும். ஒரு திருடன் பொலீஸ்காரனை அடித்தது போன்றது, பஞ்சசீலக் கொள்கைக்குச் சீனத்தின் திபேத்திய நடவடிக்கை. ஆசியாவின் கருத்துக்குச் சீனம் பதிலளிப்பதாயின் இவ்வித நடவடிக்கையை அது எடுத்திராது” என்றார்.

### சீனத்தின் பதில்

பீகிங்கிலிருந்து வெளியாகும் “பீபிள்ஸ் டெயிலி”யில் “திபேத்திய புரட்சியும் நேருவின் வேதாந்தமும்” என்று நீண்டதோர் கட்டுரை வெளியாகியுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

“இந்தியா விஷயத்தில் இதுவரை சீனம் குறுக்கிட்டதில்லை. இனியும் குறுக்கிடாது. இந்தியாவின் பாதுகாப்பு விஷயமாகக் கவலைகொண்டிருக்கும் இந்திய தேசாபிமானிகளுக்கு எல்லாம் நாங்கள் மனப்பூர்வமாக உறுதிகூறுகின்றோம்.

சுயாட்சிபெற்ற திபேத்திய பிரதேசம் ஜனநாயகத்துடன் சுபிட்சமாக, பல தேசிய சமூகங்களடங்கிய பெரிய சீனக் குடும்பத்திலிருப்பது, சீன—இந்திய நட்பைப் பெரிதும் பலப்படுத்துவதாக இருக்கும். இந்திய குடியரசுக்கு அதனல் எவ்வித ஆபத்தும் தொல்லையும் இராது.

சமதர்ம சீனம் சமாதானமான, நட்புக் கொள்கையை என்றும் கைவிடாது. நம் இரு தேசங்களையும் சேர்ந்த 110 கோடிமக்களின் நட்பும் என்றென்றும் அசைக்க முடியாதது, இமயமலை எப்படி அசைக்க முடியாததோ அப்படியே அதுவும்.

“சீன மக்களைப் போலவே இந்திய மக்களும் சீன இந்திய நட்பை எப்போதும் பேணி வந்திருக்கிறார்கள். சீன விஷயமாகக் கிளப்பிவிடப்படும் அவதூறுகள், இருதேச நட்புறவுகளுக்கும் விஷமூட்டுகின்றன. உண்மை வெளிப்பட்டு, இருதேசப் பிரமுகர்களும் பொது முயற்சி எடுக்கையில், இந்த விஷமான அவதூறுகள் மறையுமென்றே நம்புகின்றோம். சீனமும் இந்தியாவும், இருதேச மக்களும், ஆசியாவிலும் உலகிலும் சமாதானத்தை நிலை நாட்ட, நட்புமுறையில் தொடர்ந்து ஒத்துழைப்பார்கள்.” என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அப்பத்திரிகை மேலும் எழுதுவதாவது: மார்ச் 17ந் திகதி முதல் ஏப்ரல் மாதம் முடிய ஸ்ரீ நேரு, திபேத்தைப்பற்றி லோக் சபையில் 7 முறை பேசியுள்ளார். ஏப்ரல் 27ந் திகதி அவர் பேசுகையில், திபேத்திலே மாறுதல் வேண்டாத ஒரு சமூகம் இருப்பதாயும் சீர்திருத்தம் என்ற பெயரால் தங்களுக்கு என்ன ஏற்படுமோ என்று பயப்படுவதாயும் குறிப்பிட்டார். இது மிக முக்கிய விஷயம். இங்குதான் நமது விவாதம்ஆரம்பிக்க வேண்டும்.

### திபேத்திய “அடிமை சமுதாயம்”

திபேத்திய சமுதாயம், அடிமை—ஆண்டை முறையானது. நிலமும், கால்நடைகளும், நிலப் பிரபுத்துவத்துக்கே சொந்தம். அடிமைகளின் முதலாளிகள் மூன்று விதமானவர். மொத்தம் 12 லட்சம் திபேத்தியர்களில் அந்த முதலாளிகள் 100க்கு 5 விகிதமானவர்கள். அதாவது சுமார் 60 ஆயிரமுள்ளனர்.

உழைப்பாளிகளுக்கு நிலம் கிடையாது. மேய்ச்சல்காரர்களுக்கு கால் நடை இல்லை. முதலாளிகளுக்காகவே அவர்கள் உழைக்க வேண்டும். தலைமுறை தலைமுறையாக இப்படித்தான் வருமானத்தில் 70 சத விகிதம் முதலாளிக்குப் போய்விடும். அதிக வட்டிக்குப் பாட்டாளிகள் கடன்பட்டே வயிற்றைக் கழுவ வேண்டும். கடனைத் திருப்பிக் கொடுக்க முடிவதில்லை. அடிமைத் தனம் பரம்பரையாக நீடிக்கிறது.

அடிமைகளுக்கு அரசியல் உரிமையோ நடமாடும் உரிமையோ இல்லை. சிறிது வெளியேசெல்ல வேண்டுமானலும், முதலாளியின் அனுமதிபெற வேண்டும்.

சுமார் 300 ஜமீன் குடும்பங்கள் பரம்பரை திபேத்தில் உள்ளன. நிலவுடைமைக்குத் தக்கபடி அவர்களது மதிப்பும். நிலச் சுவாந்தாருக்கும் அடிமைக்கும், மலைக்கும், மடுவுக்குமுள்ள வேற்றுமை. முதலாளியைக் கண்டால், அடிமைதூர விலகிச்செல்ல வேண்டும். அல்லது தலைவணங்கி, நாக்கை வெளியே நீட்டித் தங்கள் மரியாதையைத் தெரிவிக்க வேண்டும்.

ஓடிப் போகும் அடிமைகளை முதலாளி சித்திரவதை செய்யலாம். சவுக்கடி, கண்ணைப்பிடுங்குவது, மூக்கை அறுப்பது, கைகளை வெட்டுவது, முழங்கால் சில்லியை வெட்டுவது முதலிய கொடுமையான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன.

மடாலயத் தலைவர்களும் அடிமைகளை வைத்து, இவ்விதம் வேலை வாங்கி வருகிறார்கள். எளிய லாமாக்களும் சுரண்டப்படுகிறார்கள். அங்கு சிறைச்சாலைகளும் உண்டு. இஷ்டப்படி அடிமைகளையும் எளிய லாமாக்களையும் தண்டிக்கலாம்.

### தலாய் லாமா

தலாய் லாமாவும் அங்கு பெரிதும் மதிக்கப்படுவதில்லை. அவரை ஒரு பொம்மையாக ஆட்டிவருகிறார்கள். அவசியமாயின் தலாய் லாமாவைக்கொலையும் செய்து விடுவர். உதாரணமாக 11வது தலாய் லாமா 1855-ம் வருஷம் பொடாவா அரண்மனையில் 18 வயதில் திடீரென மாண்டார். 1875இல் 12வது தலாய் லாமா 20வது வயதில் அதே அரண்மனையில் திடீரென இறந்தார்.

1923இல் 9வது பஞ்சன் லாமா உயிர்தப்பிஓடிவிட்டார். 1947இல் தலாய் லாமாவின் ஏஜெண்டான ராப்டன் ஹுடுக்கு சிறையில் சித்திரவதையாகக் கொல்லப்பட்டார். அதே ஆண்டில் இப்போதுள்ள தலாய் லாமாவின் தகப்பனர், விஷமிட்டுக் கொல்லப்பட்டார். 1950இல் புத்தகொடா விஷமிடப்பட்டு மாண்டனர். இவ்வளவு வளரும் குற்றங்களும் திபேத்திய ஆட்சிக் குழுவினரால் வெளிநாட்டுக் கையாள்களால் செய்யப்பட்டன. ஆகவே திபேத்தில் பிற்போக்கான கொடுங்கோல் தான் நடந்து வந்துள்ளது. திபேத்திய மக்களில் பெரும்பாலோரும் இதிலிருந்து விடுதலை பெறுவதையே ஆவலுடன் எதிர்பார்த்தனர். அவர்கள் புரட்சியை வரவேற்றனர். அவர்களுக்காக அனுதாபப்படுவதா? அல்லது கொடுமை செய்தவர்களுக்கா?

60 ஆயிரம் உயர்தர வகுப்பினரிலும் பலர் சீர்திருத்தத்தை வரவேற்கின்றனர். என்று கூறி திபேத், சீனத்தின் உள்நாட்டு விஷயமென்றும், திபேத்தில் சீனம் 8 ஆண்டுகளாக மிகவும் பொறுமை காட்டி, மிக நிதானமாகவே நடவடிக்கையை எடுத்ததாயும், முதலில் சுட்டது திபேத்திய கலகக்காரர்களே என்றும், சீனத்திலே பல சிறுபான்மை சமூகங்களுக்கும் சுயாட்சி பகுதிகளை வகுத்திருப்பதாகவும், திபேத்தில் அடுத்த நடவடிக்கை தவறுவிடின், சீனத்தில் நடந்த புரட்சியும் குற்றமாகுமென்றும் திபேத்தில் கலகம் அடக்கப்பட்டு இப்போது எங்கும் அமைதி நிலவுவதாயும், திபேத் விஷயத்தில் இந்தியா தலையிடுவது, பஞ்சசீலத்துக்கு முரணுகுமென்றும் குறிப்பிட்டுள்ளனர்.

“பிரதமர் நேருவுக்கு சீனத்தின்மீது கெட்ட எண்ணமில்லை. சீன—இந்திய நட்பை அவர் வற்புறுத்தி வருகிறார். இதில் எங்களுக்குச் சந்தேகமில்லை. ஆனல் திபேத் விஷயமாக அவர் கருத்து வேற்றுமை கொண்டுள்ளார். இந்த வேற்றுமைகளைக் குறைக்கலாமென்றே நம்புகிறோம்.


1954 அக்டோபரில் பிரதமர் நேரு சீனத்துக்கு விஜயம் செய்தபோது “சீனமும் இந்தியாவும் மகத்தான தேசங்கள். பொதுவான பிரச்சனைகள் இரண்டுக்கும் உண்டு. முன்னேற்றப் பாதையில் செல்லத் தீர்மானித்துள்ளோம். இதை உணர்ந்து ஒத்துழைப்பதில், ஆசியா மட்டுமன்று உலக க்ஷேமமும் பொறுத்திருக்கும். உலக நெருக்கடிகளைக் கருதி, நம் இரு நாடுகளும் சமாதானத்துக்காக ஒத்துழைக்கவேண்டும்” என்று கூறினர். இதன் உண்மையை இரு தேசங்களும் என்றும் உணர்ந்து நடக்கவேண்டுமென்பதே எங்கள் விருப்பம்.”

இதற்கிடையே கல்கத்தாவில் திபேத்தைப்பற்றிய ஒரு மகாநாடு நடத்த ஏற்பாடாகி வருகிறது. இவ் விஷயத்தில் உணர்ச்சி வசப்படாமல் மிக கவனமாக இருக்கவேண்டுமென்றும், சீன இந்திய நட்புறவுக்குப் பாதகமேற்படாமல்பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் லோக் சபையில் பிரதமர் நேரு எச்சரித்தார்.

### பாகிஸ்தான்

இதற்கிடையே சீன ஆபத்தைச் சமாளிக்க, பாகிஸ்தானும், இந்தியாவும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், பாகிஸ்தானின் காஷ்மீர், முதலிய கோரிக்கைகளுக்கு இந்தியா இணங்கினல், இந்த ஏற்பாட்டைச் செய்யலாமென்றும், பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி தெரிவித்துள்ளார்.


எங்களிடம்



பவுண் மார்க் ஓடுகள்
மான்தலை மார்க் ஒற்றைப்பீலி இரட்டைப் பீலி ஓடுகளும்

★

நெல்லு, எள்ளு, அரிசி
முதலியனவும்
சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

R. சிவகுமாரன்
76, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்

பலவித சிற்றுண்டி பலகார வகைகளுக்கும்
சுத்த சைவ போசனத்திற்கும்
சிறந்த இடம்!



விசேஷ பரிசு
(Special Grade)
1952—1957



மலாயா கபே
உரிமையாளர்: M. K. கதிரவேலு
36, 38, பெரியகடை யாழ்ப்பாணம்

அடிமைப் பண்புள்ளவர்களினுடைய காதலுக்குச் சிறீதனத்திலும் ஒரு கண் இருக்கும்

# தேடி வந்த செல்வம்

— கசின் —

## 4

நாங்கள் தவருன ஒரு காரியஞ் செய்யும்பொழுது, இயற்கையில் தோன்றும் சத்தங்கள், காட்சிகள் எல்லாம் எங்கள் மனச்சாட்சியோடு சேர்ந்து எங்கள் காரியத்தைத் தடுக்கும். பல்லி சொற்பலன் இந்தவகையிலேதான் எழுந்தது. தான் செய்வது சரியா, என்று பல்லி எங்கள் மனச்சாட்சியுடன் சேர்ந்து நின்று எங்களைச் சிந்திக்கச் செய்கிறது. உண்மையில் சொன்னது மனச்சாட்சியே யன்றிப் பல்லி யன்று.

எனது தோளில் அவள் கிள்ளியதும் எதிர் ஆசனத்தில் இருந்தவர்கள் சிரித்தார்கள். நாங்கள் திடுக்கிட்டோம்.

அவர்கள் தங்களுக்குள் ஏதோ பேசிச் சிரித்தார்கள்; என்பது பிறகுதான் எங்களுக்குத் தெரிந்தது. அத்தருணம் புகைவண்டி குருநாகல் நிலையத்தில் போய் நின்றது. அந் நிலையத்தில் எங்கள் பெட்டிக்குள் இருந்த எல்லோரும் இறங்கி விட்டார்கள்.

சற்று முன்பு, 'நான் உன்னை விரும்பவில்லை என்று சொல்லவில்லையே' என்று அவளிடம் சொன்னேன். இவ் வார்த்தைகள் எனது சம்மதத்தை அவளுக்குத் தெரிவித்துவிட்டன. இது சரியா? நான் அவளைப் பற்றி ஒன்றும் அறியாமல் அவளை விவாகஞ் செய்யச் சம்மதிக்கலாமா? என்று சிந்தித்தேன்.

அவளும்தான் திடீரென இப்படி வாயாடித்தனமாகக் கேட்டதையிட்டுச் சிந்திக்கிருள் என்று தெரிந்தது. அவள் தனக்கு நாரி வலிக்கிறதென்று, சொல்லி எதிராசனத்தில் படுத்தாள்.

அவள் இவ்வளவு விரைவில் என்னோடு சினேகிதமாகி, தன்னை விவாகஞ் செய்வீர்களா? என்றும் கேட்டுவிட்டாளே. ஒரு பெண்—தமிழ்ப் பெண் எத்தனைவருடங்கள் பழகினுலும் தன்னை விவாகஞ் செய்யும்படி கேட்பாளோ? இந்தக் கேள்விக்கு என்னுல் விடைகாண முடியவில்லை.

அவள் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருந்தாள். அவள் முகத்தைப் பார்க்கும் பொழுது கள்ளங் கபடம் அற்றவளாக இருந்தாள். அவள் மறுவில்லாத சந்திரன்போன்று தெளிவாக அந்த மாலை வெளிச்சத்தில் விளங்கினுள். அவளை என்னுல் சிறிதாவது பெண் தன்மை அற்றவள் என்று நினைக்க முடியவில்லை.

அவள் இரண்டாகப் பின்னி விட்டிருந்த கூந்தலில் ஒன்று, கீழே விழுந்து பெட்டியின் அடித்தட்டில் கிடந்து ஆடியது. மிகவும் பக்குவமாகப் பேணிப் பின்னி விட்டிருந்த கூந்தல் கால்மிதிக்கும்தரையில் கிடந்து புரளுவதைஎன்னுல் சகிக்கமுடியவில்லை.

புகையிரதம் ஓட, ஓட அவள் கூந்தல் தரையில் அங்கும் இங்கும் புரண்டுகொண்டிருந்தது. பின்னிவிடப்பட்ட அக் கூந்தலை நுனி விரல்களால் பட்டதும் படாததுமாகப் பிடித்துத் தூக்கி மேலே வைத்தேன்.

இச் செயலுக்கு, அவள் உடனே எழுந்து 'என்ன செய்தீர்கள்' என்று புன்முறுவலுடன் கேட்டாள்.

'உங்கள் நீண்ட கூந்தல் எத்தனை சிரத்தையுடன் பின்னி விடப்பட்டது. எத்துணைப் புனிதமானது; அது தரையிலே கிடப்பதைப் பார்க்கச் சகிக்க முடியவில்லை. அதைத் தூக்கி மேலே வைத்தேன்.'

'ஓ! எனது கூந்தலில் உங்களுக்கு இவ்வளவு அபிமானமா? கூந்தலுக்கே இப்படியானுல், நான் தரையில் இருந்தால் உயிரை விட்டிடுவீர்கள் போலிருக்கிறதே?" அவ் வார்த்தைகளை அவள் சாதாரணமாகத்தான் சொன்னுள். இவை உண்மையாக நிரூபிக்கப்படக்கூடிய சந்தர்ப்பம் பின் நிகழப் போகிறதென்று அப்பொழுது எங்களுக்குத் தெரியாது.

"ஆம்; ஒவ்வொரு பொருளையும் எந்த இடத்தில் வைக்க வேண்டுமோ, அந்த இடத்தில் வைப்பதுதான் நாகரிகம்" என்று நான் அவள் வார்த்தைகளுக்கு விடைபகர்ந்தேன்.

இத்தருணத்தில் யாழ்தேவி மாகோ நிலையத்தில் போய் நின்றது. அந்த நிலையத்தில் ஒருவரும் எங்கள் பெட்டிக்குள் ஏறவில்லை. அவள் கதையைத் தொடர்ந்தாள்.

'உங்களுக்கு வருடம் என்ன வருமானம் கிடைக்கிறது?' என்று அவள் கேட்டாள்.

'அது இறைவனைப் பொறுத்தது. வேலை செய்வது என் கடமை; பலன் கொடுப்பது அவர் கடமை.'

'சென்ற வருஷம் எவ்வளவு நெல் விற்றீர்கள்?' அவள் விடாது கேட்டாள்.

'சென்ற வருஷம் நானூறு புசல் நெல் விற்றேன். நாலாயிரத்து எண்ணூறு ரூபாய். நான் எல்லாமாக ஒரு வருடத்தில் நாலாயிரம் ரூபா எனது உத்தியோக காலத்தில் சம்பளமாகப் பெறவில்லை. இதில் அரைவாசி நெல் விற்ருலும் எனக்குக் கஷ்டமில்லை. இதைவிட மாதாமாதம் கோழி, ஆடு, காய்கறித் தோட்டம் முதலியவற்ருல் வரும் வருமானம் எவ்வளவு என்று கணக்குப்போடவில்லை.'

'இதைவிட ஆடு கோழி முதலியவற்ருல் வருமானம் வருகிறதா?' என்று அவள் அதிசயப்பட்டாள்.

'ஆடு, கோழி முதலியவற்ருல் வரும் வருமானம் நிச்சயமானது. நெல் வருமானம் காலத்துக்குக் காலம் மாறும்.'

'நீங்கள் உண்மையாக ஒரு செல்வர் போலல்லவா இருக்கிறது.'

'தடையென்ன; சுதந்திரமான சீவியம். சந்தோஷமான வாழ்க்கை,' இதுதான் எனக்கு வேண்டியது.

'உண்மை; இவ்விதமானதொரு வாழ்க்கையில் கிடைக்கும் இன்பம் பட்டினவாழ்க்கையில் உண்டா?' என்று அவள் என்னைக் கேட்டாள். அவளுடைய கேள்வி எனக்கு உற்சாகத்தை ஊட்டியது.

'நான் ஓர் உழவுயந்திரம் வைத்திருக்கிறேன்; எனது மரக்கறி வகைகளைச் சந்தைக்குக் கொண்டுபோக 'வான்' ஒன்று வாங்கப்போகிறேன்'

'அப்படியானுல்......' என்று தொடங்கி அவள் மேலே சொல்லாது நிறுத்தினுள். 'நீங்கள் என்ன சொல்ல வந்தீர்கள் என்று எனக்குத் தெரியும்' என்று கூறினேன்.

'என்ன என்று சொல்லுங்கள் பார்ப்போம்?'

'எனக்கும் கார் ஓட்டப் பழக்குவீர்களா? என்று நீங்கள் கேட்க நினைத்தீர்களோ, அன்ருே.'

'உங்களுக்குச் சாத்திரம் கூடத் தெரியும்போல் இருக்கிறதே.' என்று அவள் சொல்ல நான் வெற்றிப்புன்னகையோடு அவளைக் குறிப்பாகப் பார்த்தேன்.

அவள் தனதுகையை நீட்டி என்னை ரேகை சாஸ்திரம் பார்க்கும்படி வேண்டினுள்.

நான் அந்தக் கையை உற்றுப் பார்த்தேன். ரேகைகள் உறுதியாகவும், தெளிவாகவும் இருந்தன. எனக்கு ரேகை சாஸ்திரம் தெரியாது. ஆனுல் அவளுடைய குங்குமக் கை பார்க்கப்பார்க்க அழகாயிருந்தது.

'நீங்கள் இப்படி உற்றுப் பார்ப்பதானுல் நான் காட்டமாட்டேன்' என்று கோபித்துக்கொண்டே கையை இழுத்தாள்.

அவளுடைய கோபம் நியாயமானது. நான் அவளோடு விரைவாக நெருங்கிப்பழகியது தான் நியாயமற்றது. அவள் என்னை 'விவாகஞ் செய்வீர்களா?' என்று கேட்டபின் எனது நடவடிக்கையில் வித்தியாசமிருப்பதை அவள் அவதானித்தாளோ, என்னவோ தெரியாது. ஆனுல் எனக்கு ஒரு தடுமாற்றம் நெஞ்சில் புகுந்து எனது உற்சாகத்தைக் குறைத்திருக்கிறது.

அவள் கோபம் நியாயமானது. அதைத் தணிப்பது என் கடன். நான் எழுந்து சென்று, "தேவி, என்னை மன்னித்தருள வேண்டும்,'' என்று நாடக பாணியில்மொழிந்தேன்.

'பக்தா மெச்சினேன்; எந்தக் கட்டத்திலும் உனது விரதத்தைக் கடைப்பிடிக்கும் வீரத்தைக்கண்டு நான் மெச்சினேன். தேநீர் குடிப்பதில்லை; விவாகம் செய்துகொள்வதில்லை; இவற்றைவிட வேறு என்னென்ன விரதங்களைக் கடைப்பிடிக்கிருய்; பக்தனே நான் அறியக்கூடியதா?' இவ்வளவு வார்த்தைகளையும், என்னைப் பாராமலே நான் கூறிய அதே நாடகபாணியில் கூறிவிட்டுத் தனக்கு வந்த சிரிப்பை மறைப்பதற்காகத் தனது முகத்தை மேலும் திருப்பிக்கொண்டாள்.

'தேவி! தங்களுக்குத் தெரியாமல் தங்களின் உதவியில்லாமல் நான் ஒரு விரதத்தை அனுட்டிக்க முடியுமா? என்னை மேலும் சோதிக்க வேண்டாம், தங்கள் முகாரவிந்தத்தை அடியேன் தரிசித்துய்யுமாறு கிருபா நோக்கம் செய்தருள வேண்டும்; தேவி, தங்கள் பாதங்களைத் தொட்டு வணங்குகின்றேன்' என்று கூறி, நாடக பாத்திரம் போன்று இயைந்த அசைப்புடன் குனிந்தேன். அப்பொழுது அவள் எனது கையிரண்டையும் பிடித்துக்கொண்டு குலுங்கிக்குலுங்கிச் சிரித்தாள்.

—தொடரும்

## பொறுமை

"பழிக்குப்பழி" என்பது காட்டுமிராண்டிகளின் நியாயம் என்கிருர் மேனுட்டு ஆசிரியர் பேக்கன்; நம் தீந்தமிழ் நாட்டுத் தெய்வத் திருவள்ளுவரின் பொன் மொழியைக் காண்போம்;

" ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்"

தமக்குத் தீங்கு செய்தவனுக்குப் பதில் தீங்கு செய்பவனுக்கு உண்டாவது ஒரு நாளை இன்பமே. அத்தீங்கைப் பொறுத்தார்க்கு உலகம் அழியுமளவும் புகழ் உண்டாம். இது வெறும் ஏட்டுச் சுரக்காய் அல்ல. நம் நாட்டு மக்களின் பண்பாடு. வாழ்வில் கையாண்டு, என்றும் புகழ் பெறும் மக்கள் பலர் இருந்திருக்கின்றனர்.


'ஹென்றி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்றி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினுலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.



இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

ஹெப்பற்ருே - B12
(Hepato - B12)

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
பாண்டு, இரத்தமின்மை
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:

புதியமலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி
268, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்

# கு. ப. ரா. வின் சிறுகதைகள்

— க. நா. சுப்ரமண்யம் —

### 3

ஒவ்வொரு இலக்கியாசிரியனுமே தெரிந்தோ தெரியாமலோ, சுயப்பிரக்ஞையுடனே, பிரக்ஞையே இல்லாமலோ தனது தனித்வத்துக்கு சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்கிற இலக்கிய உருவம் தருகிருன். கு. ப. ரா. தமிழில் எழுத ஆரம்பித்த நாட்களில் தமிழ்ச் சிறுகதைக்கு ஒரு இடம் இருந்தது. அது காரணமாக, தோன்றிக் கொண்டிருந்த பத்திரிகை யுகத்தின் முன்ேடியாக, சேர்க்கை சந்தர்ப்ப விசேஷத்தால் தனது இலக்கிய முயற்சிகளுக்கு கு. ப. ரா. சிறுகதை உருவம் தந்திருக்கிருர் என்று சொல்லலாம். வேறு பல உருவங்களிலும் அவர் சோதனை செய்து பார்த்தும், வசன கவிதை, சிறு நாடகம், கட்டுரை போன்ற இலக்கியத் துறைகளில் பெற்ற வெற்றிகளைவிடக் கணிசமான வெற்றி பெற்றுர் அவர் சிறுகதை என்கிற இலக்கியத்துறையிலே.

சிறுகதை என்கிற உருவ அமைதி கு. ப. ரா. வின் சிறுகதைகளிலே எப்படிச் சிறப்புப் பெற்றிருக்கிறது என்று விமரிசன ரீதியில் கவனித்தோமானுல், நமக்கு இரண்டொரு விஷயங்கள் தெரிய வருகின்றன. செக்காவ், மோபாஸான், ஓஹென்றி என்கிற மூன்று பெரும் சிறுகதைப் பகுதிகளிலே, கு. ப. ரா. மோபாஸான் பகுதியைச் சேர்ந்தவர் என்பது மேலெழுந்த வாரியாகப் படிப்பவர்களுக்கும் கூடத்தெரியவரும். வேறு பகுதிகள் சாத்தியமில்லையா, அவசியமில்லையா என்கிற ஆராய்ச்சி இங்கு அவசியமில்லை. கு. ப. ரா. ஓரளவு சுயப்பிரக்ஞையுடன் தான் சிறுகதைக்கு மோபாஸான் தந்த உருவ அமைப்பை ஏற்றுக்கொண்டு தன் சிறுகதைகளைச் சிருஷ்டித்திருக்கிருர் என்று எனக்குத் தோன்றுகிறது. ஓ ஹென்ரியைப் போலச் சம்பவத் திருப்பத்திலோ, செக்காவில்போல குணபாத்திர ஆழ்ந்த மோதலிலோ கு. ப. ரா. வுக்கு ஈடுபாடில்லை என்பது வெளிப்படை. மனித உறவுகளில், அதுவும் முக்கியமாக ஆண் பெண் உறவு முறைகளில், மோபாஸானைப் போலவே, கு. ப. ரா. வுக்கும் மன ஈடுபாடு இருந்தது. அந்த உறவுகள் பலவற்றை அவர் சிறுகதையாக்கித் தந்திருக்கிருர்.

மோபாஸானின் சிறுகதை உருவ அமைதிகளிலே சிறப்பானதாகச் சொல்ல வேண்டியது நல்முத்துப் போன்ற ஒரு பளபளப்பும், அழகான, தீர்ந்த, மாற்றமுடியாத வடிவும்தான். இதை நாம் கு. ப. ரா. வின் சிறுகதைகளிலும் காணமுடியும். மோபாஸானின் பாதையைப் பின்பற்றியவர் கு. ப. ரா. என்று சொல்வதிலே அவருக்கு இழுக்கு ஒன்றுமில்லை. சிறுகதை என்பது சமீபத்தில் ஏற்பட்ட ஒரு இலக்கிய உருவம். அதிலே சிறப்பாக மூன்று பகுதிகள், மூன்று தனிப்பாணிகள் காணக்கிடக்கின்றன. அதிலே மோபாஸான் பாணியொன்று. அதைப் பின்பற்றி கு. ப. ரா. தன் சிறுகதைகளுக்கு தமிழ் உருத் தந்து தமிழ் இலக்கியவுலகில் தனக்கென்று ஒரு ஸ்தானம் ஏற்படுத்திக் கொண்டார்.

தான் தேடித் தன் தனித்வத்தைக் காட்ட எடுத்துக் கொண்டபடி விஷயத்துக்கு கு. ப. ரா. தந்த இலக்கிய உருவம் பல சிறுகதைகளில் சிறப்பாகவே காணமுடிகிறது. விடியுமா என்கிற சிறுகதையின் உருவமும், ஆற்ருமை என்கிற சிறுகதையின் உருவமும், அதனதன் வழியில் சிறப்பானவை. கு. ப. ரா, வுக்கே தனியாக ஏற்பட்டவை. இதேபோல மின்னக்கலையும், பண்ணைச் செங்கானும் தனி உருவம் பெற்றவை. நடுத்தெரு நாகரிகமும் கனகாம் பரமும் சிறப்பான உருவம் பெற்றவை.

கு. ப. ரா. வின் உருவச் சிறப்பைஅளப்பதற்குப் பர்ஸனுடிலி எனப்பதில் சொன்ன அம்சங்கள் பூராவையும் முதலில் கலந்து கொள்ள வேண்டும். அந்த அம்சங்கள் காரணமாக அவர் தேர்ந்தெடுத்த (themes) விஷயச் சேர்க்கைகளை அளக்க வேண்டும். அதற்குப் பிறகே தான் கு. ப. ரா. வின் சிறுகதை உருவ அமைதி நமக்கு ஒரு வகையாகப் புலனுகும்.

விடியுமா என்கிற சிறுகதையில் கு. ப. ரா. ஏக்கத்தையும் லக்ஷியத்தையும் மென்மையையும் குழைத்து ஒரு நிரந்தரமான உருவத்தை நமக்குச் சிருஷ்டித்துத் தந்திருக்கிருர். இந்த உருவம் லேசாக, சாதாரணமான ஒரு லாகவத்துடன் வந்திருக்கிற மாதிரித் தோன்றுகிறதே தவிர, அது லாகவமானதுமல்ல, லேசானதுமல்ல, சாதாரணமானதுமல்ல. கதையின் ஆரம்பத்தை ஏற்றுக் கொண்டு விட்டால் அவர் கதை கு. ப. ரா. கையில் இப்படி வளர்ந்து, இப்படி நகர்ந்து, இந்த முடிவுக்குத்தான் வந்தாக வேண்டும் என்று ஒரு (inevitability) தப்பமுடியாமை, தவிர்க்க முடியாமை இருக்கிறதே அதைத்தான் சிறப்பான ஒரு இலக்கிய அம்சமாகச் சொல்லவேண்டும். இந்தத் தப்ப முடியாமையும், தவிர்க்க முடியாமையும் ஒரு முழுமையான தனித்தன்மையுடன் சேர்ந்து உருவாகிறபோது தான் இலக்கியம் பிறக்கிறது என்று நாம் உணருகிறேம். இப்படித் தமிழ்ச் சிறுகதையில் இதுவரை ஒரு ஏழெட்டுப் பேரிடம் இலக்கியம் பிறந்திருக்கிறது என்று சொல்லலாம். அதில் கு. ப. ரா. வும் ஒருவர்.

கு. ப. ரா. வின் சிறுகதைகளிலே நடுத்தெரு நாகரிகம் என்பதிலும் இந்த உருவ அமைதியையும், (inevitability) யையும் காண முடிகிறது. அதே போலப் பல சிறுகதைகளின் பெயர்களைக் கூறலாம். தாய் என்கிற சிறுகதையில் கடைசித் திருப்பம் இருக்கிறதே, அது அற்புதமாக, தவிர்க்க முடியாத ஒரு வகையில் அமைந்திருக்கிறது. அதுவே அந்தச் சிறுகதையை இலக்கியமாக்குகிறது என்று சொல்லலாம்.

### 4

விஷய அளவிலும் கு. ப. ரா. வின் சிறுகதைகளுக்குத் தனிச் சிறப்பு உண்டு. சாதாரணமாக மறுமலர்ச்சிக் கதைகளிலெல்லாம் மனைவி காபி கொண்டு வந்து வைத்துக்கொண்டு நிற்பாள் என்று கல்கி போன்ற பத்திரிகைக் கதையாளர்கள் கேலி செய்ததற்கு ஒரு விதத்தில் கு. ப. ரா. தான் முக்கிய காரணமாக இருந்தார் என்று சொல்லலாம். ஒரு சிறிய விஷயத்தைப் பெரிசாக எடுத்துச் சொல்லி, அதை ஒரு இலக்கிய உருவமாக்கி, உருட்டித் தரும் காரியத்தை கு. ப. ரா. தன் சிறுகதைகள் பலவற்றில் செய்திருக்கிருர். உருவச் சிறப்பு மட்டும் போதுமா இலக்கியத்துக்கு, விஷயச் சிறப்பும் கனமும் தேவையில்லையா ? என்று நினைப்பவர்கள் நம்மிடையே பலர் உண்டு. அவர்களுக்கு கு. ப. ரா. வின் சிறுகதைகள் அவ்வளவாகத் திருப்தி தராது என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்ருல் கு. ப. ரா. வின் சிறுகதைகளில் வருகிற விஷயங்கள் எல்லாமே ஓரளவுக்கு ஆண் பெண் உறவு முறைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டவை என்று சொல்லலாம். கனகாம்பரம் என்கிற சிறுகதை அழகாகத்தான் இருக்கிறது ஆனுல் அது என்ன சொல்கிறது என்று கேட்டால், சற்று யோசித்து ஒன்றும் சொல்லவில்லை என்று தான் சொல்ல வேண்டிவரும்.

இலக்கியம் ஒன்றுமே சொல்லாமலும் இருக்கலாம் என்பது அடிப்படையான நோக்குகளில் ஒன்று என்பதை இலக்கிய விமர்சன ரீதியில் ஏற்றுக் கொண்டால் தான் கு. ப. ரா. வின் சிறுகதைகளுக்கு முக்கியம் உண்டு என்று ஏற்றுக் கொள்ள முடியும். இதைப் பலம் என்றும், பலஹீனம் என்றும் விவாதித்து முடிவு கட்டலாம்.

பலமோ, பலஹீனமோ-இது தான் கு. ப. ரா. என்று சொல்வது மிகையாகாது. மௌனியின் கதைகளிலே காணப்படும் ஆழமோ, புதுமைப் பித்தன் சிறுகதைகள் சிலவற்றிலே காணப்படும் கனமோ சிந்தனைத் துடிப்போ, பிச்சமூர்த்தியின் சிறுகதைகளில் காணப்படும் ஆழ்ந்த அனுபவமான தத்துவச்சரடோ, லா. ச. ராமாமிர்தத்தின் மனே தத்துவப் பின்னலாழமோ, தி. ஜானகிராமனின் ஆழ்ந்த கேலிச் சிரிப்போ, அழகிரிசாமியின் சிறுகதைகளில் ஒரு குலத்தையே உருவகப்படுத்தி முடிக்கப்போகும் பாத்திரங்களையோ, கு. ப ரா. வின் சிறுகதைகளில் காண இயலாது.

விஷயத் தொனியோ, சூழ்நிலை விவரணையோ, பாத்திர சிருஷ்டியோ கு. ப. ரா. வின் தனிச் சிறப்பல்ல. அவர் செய்ததெல்லாம், சில குறிப்பிட்ட மனேபாவ அவசரங்களுக்கு சிறுகதை உருவம் தந்தது தான். இந்த மனேபாவ அவசரங்கள் யாருக்காவது உவப்பாக இல்லை, பிடித்தமாக இல்லை என்ருல் அது அவர்களுடைய துரதிருஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும். அந்த மட்டில் அவர்களுடைய இலக்கிய ரஸனை அனுபவத்தில் சொட்டை விழுந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்,

### 5

கடைசியாக கு. ப. ரா. வின் தமிழ் நடையைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டியது மிகவும் அவசியம். அவர் செய்ய முயன்ற காரியங்களைச் சாத்தியமாக்குவதற்குப் போதுமான நடை அவசியம் இருந்தது. இந்த விஷயத்தில் அவரை மௌனியையும், புதுமைப்பித்தனையும் விடவே திறமைசாலி என்று சொல்ல வேண்டும். பின்னவர்கள் இருவரும் தங்கள் வார்த்தைகளுக்குள் அகப்பட மறுக்கிற பல விஷயங்களைச் சொல்ல முன் வந்துவிட்டு, சொல்ல முடியாமல், வாசகனை ஓரளவு அந்தரத்தில் தவிக்க விட்டுச் சென்று விடுகிருர்கள். கு. ப. ரா. அப்படிச் செய்வதே கிடையாது. சொல்ல வந்தது பூராவையும் நின்று நிதானமாக வார்த்தைகளில் கொட்டி அளந்து காட்டிவிடுகிருர். பல இடங்களில் இந்தக் காரியத்தை மிகவும் அழகாகவே செய்திருக்கிருர் என்றும் சொல்லலாம்.

பேச்சிலும், உபமானங்களிலும் சில சமயம் கு. ப. ரா. வின் வசனத்திலே கவிதை குறுக்கிட்டு வீணக்கி விடுகிறது என்று நான் நினைப்பதுண்டு. எப்படி, எங்கே என்று விளக்க இங்கு இடமில்லை. ஆனுல் மொத்தத்தில் சொல்லப்போனுல் கு. ப. ரா. வின் நடை மிகவும் நாஸுக்கானது. அவரது தனித்வத்தை வெளிப்படுத்துவதற்கே போலஒரே சமயத்தில் மென்மையையும், பலத்தையும் கொண்டது. தமிழ் வசன நடைக்கு ஒரு புது கனத்தையும், பரிமாணத்தையும் தந்தவர் என்று கு. ப ரா வைப் போற்றலாம். முக்கியமாக அவருடைய காணுமலே காதல் என்கிற சிறுகதைத் தொகுதியில் அவருடைய சரித்திரச் சிறுகதைகளில் நடை மிகவும் அழகாகவும் அந்தமாகவும் வந்திருப்பது காணக் கிடக்கிறது. மற்றச் சிறுகதைகளிலும் நடை விஷயத்தில் குறுக்கிட்டு, சிறுகதையின் அமைதியைக் கெடுக்காமல் தெளிவான நீரோடை போல ஓடுகிறது என்று சொல்லலாம். சாதாரணமாக, கு. ப. ரா. தன் குரலை உயர்த்துவதேயில்லை என்று தான் சொல்ல வேண்டும்

பின்னுல் ஒரு அர்த்தம் தொனிக்க, அதுவும் ஆண் பெண் உறவு விஷயங்களில் இப்படித் தொனிக்க வார்த்தைகளை உபயோகிப்பதில் கு. ப. ரா. வுக்கு ஈடு இன்றுவரை தமிழில் தோன்றவேயில்லை என்று தான் சொல்ல வேண்டும். இந்தத் தொனி என்பது கு. ப. ரா. வின் நடைச் சிறப்புகளில் ஒன்று. குரலை உயர்த்தாமல் அவர் சொல்லுகிற வார்த்தைகள் இதனுல் ஒரு தனிப்பலமும் அந்தரார்த்தமும் பல இடங்களில் வர்ணமும் பெற்று நம்மைக் கவருகின்றன.

கு. ப. ரா. வின் சிறுகதைகள் தமிழ் இலக்கியத்தில் சிறப்பான ஒரு பகுதி. தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியிலே அவருக்குச் சிறப்பான ஒரு பங்குண்டு. பல சிறுகதைகளில் அவர், முன்னரோ பின்னரோ எட்டிபலரும் தொடாத பல சிகரங்களை எட்டித் தொட்டுக் காட்டியிருக்கிருர். அவருடைய சிறுகதைகளையும், மற்ற இலக்கியத்துறை எழுத்துக்களையும் இலக்கிய விமரிசன ரீதியில் மதிப்பிட்டுப் பார்க்க அவசியம் இருக்கிறது. அதனுல் தமிழில் இலக்கியம் வளரும். அவருடைய சிறந்த சிறுகதைகள் ஒரு (selections) ஸெலக்ஷன் வரவேண்டியது மிகவும் அவசியம்—தமிழில் இலக்கிய வளர்ச்சிக்கு மிகவும் உடனடியான தேவை. அதேபோல பல துறைகளிலும் அவர் செய்துள்ள சேவை கணிக்கப்பட்டு நிரந்தரமான உருப் பெற வேண்டியதும் மிகவும் அவசியம், சமீப காலத்தியப் பழமையை (மற்றப் பழமையுந் தான்) மதிப்பிட்டு அறிந்து கொள்ள நாம் மறுத்தால், தமிழ் இலக்கியம், பத்திரிகை எழுத்துக் குட்டையிலே தேங்கி, வளம் பெருது போய் விடும் என்பதில் சந்தேகமில்லை.


தொலைபேசி: 252.

தந்தி: பாரத்போட்டோ

சிறந்த போட்டோக்களுக்கு

பாரத் ஸ்ருடியோ

படம் பிடிப்பவர்கள்

கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.

**இலங்கை அரசியல் திட்டத் திருத்தம் 2**

இலங்கைச் சட்டக் கல்லூரியில் அரசியல் சட்ட விரிவுரையாளராகப் பணியாற்றும்
திரு. ஜே. ஏ. எல். கூரே எல். எல். பி. சமீபத்தில் சட்ட மாணவர் கழகத்தில் ஆற்றிய விரிவுரையின் தமிழாக்கம் இது.
அவ்விரிவுரையின் இரண்டாவது பகுதி இவ்வாரம் வெளியாகியுள்ளது.

# மேற்சபையை நீக்கிவிட்டு
## வேறுவழிகளைக் கையாளுவதே நன்று

முன்னர் நடைமுறையிலிருந்த டொனமூர் அரசியல் முறையிலும், சுவிட்சர்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளிலும் இருப்பதுபோல் சட்டசபையே நிர்வாக உறுப்பாகிய மந்திரிசபையை நியமிக்கும் முறை இலங்கைக்குப் பொருத்தமானதாக இருக்கும் எனச் சிலர் கருதக்கூடும். இத்துடன் மந்திரிசபையின் பதவிக்காலமும் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தைப் போல் வரையறுக்கப்பட்டதாக இருக்கவேண்டுமா என்பதை நன்கு பரிசீலனைசெய்து முடிவு செய்யவேண்டும்.

சட்டசபையைக் கலைக்கும் அதிகாரம்பற்றி அரசியல் சட்ட வல்லுனரிடையே அபிப்பிராயபேதம் நிலவுவதால், புதிய அரசியல் திட்டத்தில் சனாதிபதி தமது இஷ்டம் போல் பாராளுமன்றத்தைக் கலைப்பதற்குரிய சந்தர்ப்பம் ஒன்றையும் விதிக்காமல்விடுவதே விரும்பத்தக்கது.

### மேற்சபை

மேற்சபை விஷயம் இன்னொரு சிக்கலான அம்சமாக இருக்கிறது. பிரசித்திபெற்ற அரசியல் சட்டநிபுணராகிய பகொற் என்பவர் ஒரு சிறந்த கீழ்ச்சபை இருக்குமானால் மேற்சபை அவசியமானது என வாதிக்க முடியாதென்றும் ஆனால் பிரித்தானிய பிரதிநிதிகள் சபைக்கு (கொமன்ஸ்) மறுபரிசீலனை செய்யும் சபை ஒன்று மிகவும் உபயோகமானதாக இருக்குமென்றும் கூறியிருக்கின்றார்.

ஒரு மேற்சபை சிறந்த தொண்டாற்ற வேண்டுமானால் கட்சி அரசியல் அச்சபையிலிருந்து விலக்கப்பட்டிருத்தல் அவசியம். தனிப்பட்ட திறமைக்காகவே அங்கத்தவர்கள் நியமிக்கப்படவேண்டும். நாட்டின் பல்வேறு பிரிவினரின் பிரதிநிதிகளும் சபையில் இடம் பெறவேண்டும். இப்படிப்பட்ட ஒரு சபையிடம்தான் அரசாங்கத்தவரும், எதிர்க்கட்சியினரும், பொதுமக்களும் நம்பிக்கையும் மதிப்பும் உடையவராக இருப்பார்கள். அத்துடன் சபை நிறைவேற்றும் கடமைகளிலும் அக்கறையுள்ளவராகவும் இருப்பார்கள். கட்சிச்சார்பற்ற ஒரு சபை கூறும் ஆலோசனைகளைக் கேட்பதற்கு எந்த அரசாங்கமும் ஆர்வமுடையதாக இருக்கும்.

### ஓர் எடுத்துக்காட்டு

இலங்கையின் செனேட் சபைக்கு அங்கத்தவர்கள் நியமனம் பெறும் முறையில் பல குறைபாடுகள் இருக்கிறபோதிலும் சபையில் நிகழ்ந்த சில விவாதங்கள் உயர்ந்த தரத்தை அடைந்திருக்கின்றன எனக் கூறிப் பெருமைப்படலாம். உதாரணமாக, தகுதிவாய்ந்த அதிகாரியை (Competent Authority) கண்டித்து பாராளுமன்றத்தின் சலுகைகளை வற்புறுத்திச் சென்ற வருடம் செனேட் சபையில் நடைபெற்ற விவாதம் உலகிலுள்ள எந்த சனநாயக சட்டசபைக்கும் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கும். கட்சிச் சார்பற்ற மேற்சபை அல்லாத ஒரு மேற்சபை திருத்தியமைக்கப்படும் அரசியல் திட்டத்தில் இடம்பெற வேண்டும் என வாதிப்பது கஷ்டம்.

கட்சிச்சார்பற்ற மேற்சபைக்கு அங்கத்தவர் நியமனம் பெறவேண்டிய முறையை நிர்ணயிப்பதும்கஷ்டமான காரியமாகவே இருக்கின்றது. திறமைவாய்ந்தவரை மேற்சபை அங்கத்தவராக நியமிக்கும் பொறுப்பு, சபாநாயகரின் தலைமையில் பிரதம மந்திரியும், எதிர்க்கட்சித்தலைவரும் வேறு சிலரும் அடங்கிய ஒரு குழுவினிடம் இருக்கவேண்டும் என வேறு நாடுகளில் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இன்னொருமுறை தொழிற்படும் சங்கங்கள் மேற்சபைக்கு அங்கத்தவரைத் தெரிவுசெய்தலேயாகும். கல்வி, தொழில், விவசாயம், கைத்தொழில், சமூக சேவை போன்ற துறைகளில் தொண்டாற்றிவரும் சங்கங்கள் மேற்சபைக்கு அங்கத்தவரைத் தெரிந்து அனுப்பலாம். இது போன்ற ஒரு நியமனமுறையைத் தீர்மானிப்பது சாத்தியமற்றதாகக் கருதப்பட்டால் மேற்சபையை நீக்கிவிட்டு, சட்டங்களை மறு பரிசீலனை செய்வதற்கு வேறு வழிகளை அரசியற் திட்டத்தில் புகுத்துவதே நன்று.

### அரசாங்கசேவை அதிகாரசபை

இப்போதைய அரசியல் திட்டத்தின் இன்னொரு சிக்கலான அம்சம் அரசாங்கசேவை அதிகார சபை (Public Service Commission) ஆகும். சுதந்திரமான இச் சபையின் அதிகாரத்துக் குட்பட்டுக் கடமையாற்றிவரும் அரசாங்க உத்தியோகத்தினரின் செய்கைகளுக்குச் சம்பந்தப்பட்ட மந்திரிகளே பொறுப்புடையவர் எனக் கூறுதல் நியாயமானதாகுமா என மந்திரிகள் பல முறை கேள்விகளை எழுப்பியுள்ளனர். இந்த முரண்பட்ட நிலையிலிருந்துவருவதால் மந்திரிகள் அரசாங்க உத்தியோகத்தரைப் பகிரங்கமாகக் கண்டித்துத் தாம் பொறுப்பில்லை என உணர்த்தி வருவதையும் காண்கிறோம். உத்தியோகத்தரின் செய்கைகளுக்குப் பாராளுமன்றத்தில் பதிலளிக்கவேண்டியவர் மந்திரிமாரே என்ற காரணத்தால் அரசாங்கசேவை அதிகாரசபைமீதும் தமது செல்வாக்கைப் பிரயோகித்து வலோற்காரப்படுத்தியும் வருகின்றனர்.

இந்த நிலையைச் சீர்ப்படுத்துவதற்கு அரசாங்கசேவை அதிகாரசபையை முற்றாக நீக்கவேண்டும் என சிபார்சு செய்தல் வசதியானதாகும். ஆனால் அத்தியாவசியமான மந்திரிமாரின் பொறுப்பையும், மிகவும் அவசியமானதாகக் கருதப்படும் அரசாங்கசேவையின் சுதந்திரத்தையும் ஒருமைப்படுத்துவதற்கு வகை செய்தல் மிகவும் கஷ்டமான காரியமென்பதில் சந்தேகமில்லை.

சாம்ராச்சிய நாடுகளுட் சில, உதாரணமாக தென்னாபிரிக்காவும், சமீபகாலத்தில் இந்தியாவும், இச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதில் வெற்றியடைந்திருக்கின்றன. இந்நாடுகளில் உத்தியோகத்தரின் நியமனம், பதவியேற்றம், இடமாற்றம், பதவி நீக்கம், ஒழுங்கு நடவடிக்கை ஆகிய விஷயங்கள் குறித்து அரசாங்க சேவை அதிகாரசபை அரசாங்கத்துக்குச் சிபார்சுகள் செய்யலாம் என்றும், இச் சிபார்சுகளை நிராகரிக்கவோ மாற்றஞ் செய்யவோ நாட்டின் பிரதம நிர்வாக அதிகாரியின் சம்மதத்தைப் பெறவேண்டும் என்றும் விதிகள் இயற்றப்பட்டிருக்கின்றன. அதிகாரசபையின் சிபார்சை அரசாங்கம் ஏற்காவிட்டால் அரசாங்கசேவை அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையில் அவ் விபரங்கள் குறிப்பிடப்படும். இவ்வறிக்கை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படுதலால் பாராளுமன்றம் அரசியல் காரணங்களுக்காக அதிகார சபையின் விவகாரங்களில் அரசாங்கம் தலையிட்டிருப்பதைக் கண்டனஞ் செய்ய வாய்ப்புக் கிடைக்கின்றது. பொதுமக்களின் கண்டனத்தையும் அரசாங்கம் எதிர்பார்க்கவேண்டி நேரிடும்.

(அடுத்த இதழில் முடியும்)


**பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?**

**ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்**

**பொலிடோல் :** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ் :** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று :** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதிந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சீரிசையன் :** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**தைகருகாபாமற்று :** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல் :** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை :** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீனிடுயா நச்சுப்பசை :** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள் :** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

**மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்**

K. S. செல்லையா, ரோயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மன்னன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்டோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக் கொள்க.

தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம் :

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**

தபால் பெட்டி இல. 743.

**கொழும்பு 8.**


### தபாற்பகுதிமீது புகார்
#### கடிதம் கிடைப்பதில் தாமதம்

கடிதங்கள் உரியவரிடம்செல்ல நாலு நாட்களுக்குமேல் செல்லுகின்றனவென இலங்கைத் தபாற்பகுதிக்குப் புகார் நாட்டின் பலபாகங்களிலிருந்தும் கிளம்பியுள்ளது. தபாற்பகுதியைச்சேர்ந்த உத்தியோகத்தர் இதுபற்றித் தாம் தக்க நடவடிக்கைகள் கையாளப் போவதாகக் கூறியுள்ளார். கடிதங்கள் அனுப்பப்படும் கந்தோர்களில் ஒருவித தாமதமும் இல்லை என அறியப்படுகிறது. இத் தாமதத்துக்குக் காரணமென்னவெனில், முதலிலேயே கந்தோருக்கு வந்துசேரும்கடிதங்களைப்பாகுபாடுசெய்வதை நடுவிலே விட்டுவிட்டு, பின் வந்த கடிதங்களைப் பாகுபாடுசெய்ய முற்படுவதேயாகும். இதனால் முன் வந்த கடிதங்கள் நாட்கணக்காகக் கவனிப்பாரற்றுக் கிடந்துவிடுகின்றன. இதுபற்றித் தபாற்பகுதி தகுந்த நடவடிக்கை எடுக்குமெனவும், இனிமேல் கடிதங்களின் போக்குவரத்தில் தாமதம்ஏற்படாது கவனித்துக் கொள்ளுமெனவும் தெரிகிறது.

### தோட்டப்பாடல்கள் தொகுதி விரைவில் வெளியிட முடிவு

மலைநாட்டுத் தமிழ் எழுத்தாளர் மன்றம் சமீபத்தில் வட்டகொடையில் கூடியபொழுது, மன்றம் வெளியிட எண்ணியுள்ள சிறுகதைத் தொகுதிக்குக் கிடைத்துள்ள சிறுகதைகள் ஆராயப்பட்டன. இத் தொகுதியில் பிரசுரிப்பதற்கென அனுப்பப்படும் கதைகள் ஜூலைமாத இறுதிக்குள் வந்து சேரவேண்டும் என்றும், கதைகள் மலைநாட்டு மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்கவேண்டும் எனவும், சிறுகதை இலக்கியத்தையொட்டிக் கதைகள் எழுதப்பட்டிருக்க வேண்டும் எனவும் மன்றம் தீர்மானித்தது. சிறுகதைகளைத் தெரிவு செய்வதற்கென ஒரு குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மலைநாட்டுத் தோட்டப்பாடல்கள் தொகுதியொன்றை உடனடியாக வெளியிடுவதென்றும், இந்தப் பாடல்களைப் பரிசீலனை செய்யவும், சித்திரந் தீட்டவும், திரு. கே. கணேஷ், திரு. சிதம்பரநாத பாவலர், திரு. ந. அ. தியாகராசன் ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

கவிதைத் தொகுதியின் பூர்வாங்க வேலைகள் ஜூன் மாத இறுதிக்குள் முடியுமென்றும், பின்னர் தொகுதி அச்சேறும் என்றும் தெரிகிறது.

## மண்டபம் இனி இந்திய

# இராணுவ முகாமாக மாறும்?

நமது கொழும்பு நிருபர்

**சென்ற பல ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம், இந்தியாவில் வைத்து நடத்திவந்த மண்டபம் முகாமை மூடிவிடும்படி இந்திய அரசாங்கம் வற்புறுத்திவந்ததற் கிணங்க இலங்கை அரசாங்கம் அந்த முகாமை மூடி இடத்தை இந்திய அரசாங்கத்துக்கு விற்றுவிட்டு வெளியேறத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகிறது.**

இதற்கு முதற்படியாகவே இந்தியாவிலிருந்து தனுஷ்கோடி மார்க்கமாக ரயிலில் இலங்கை வருபவர்கள், இனி மண்டபத்தில் குவாரன்டைன் பர்மிட் காட்டவேண்டிய அவசியமில்லை என்று தீர்மானித்துள்ளது.

அந்த இடத்தை இந்தியா இனி இராணுவ காவல் முகாமாகப் பயன்படுத்தலாமென்றும் கூறப்படுகிறது.

தனுஷ்கோடியில் கடல் நீர் அடிக்கடி பெருகிவிடுவதால், இனி தலைமன்னார் கப்பல், மண்டபப் பக்கம்வரை செல்லுமென்றும் அங்கு ஒரு புதிய இறங்குதுறை அமைக்கப்படலாமென்றும் தெரிகிறது.

---

நாடக விமர்சனம்

# பக்த நந்தனார்

சீர்திருத்தம், புதுமை என்று சொல்லிக்கொண்டு ஒரே கருத்துக்கொண்ட பல சமூகக் கதைகள் பல்கிப் பெருகி நாடகமாக உருவாகி வரும் இந்நாளில்; ஆத்மீகத் துறைக்கு வழி காட்டுவதுடன் ஆண்டவன் மீது கொள்ளும் பக்திக்குமுன் எந்தச் சமூகப் பூசலும் அற்றொழிந்துவிடும் என்ற இலட்சியம் பொதிந்த **பக்தநந்தனார்** நாடகம் திருமலை சண்முக வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் அரங்கேற்றப்பெற்றது.

புராணகாலக் கதையாக— பலருக்குத் தெரிந்ததாக இருந்தாலும் அதனைப் புது மெருகுடன் ஒளிரச் செய்யலாம் என்பதை அன்று காணக்கூடியதாகவிருந்தது.

முத்தமிழ்மணி சி. எஸ். எஸ், மணிபாகவதர், கலைஞர் ஸ்ரீனிவாசன் ஆகியவர்களை முக்கிய பாத்திரங்களான நந்தன், வேதியனாகக் கொண்ட இந்நாடகம் பல உபநடிகர்களின் ஒத்துழைப்பினால் மகத்தான வெற்றியைப் பெற்றுவிட்டதென்றே கூறவேண்டும்.

திரைநீக்கஞ் செய்தவுடன் செல்வன் யோகநாதனின் நர்த்தனத்துடன் ஆரம்பமாகிய நாடகம் முடிவுவரை ஒரே பக்திச் சுவை பரிமளித்துக் கொண்டே இருந்தது.

மிகப் பிற்போக்கான சமூகத்தைச் சேர்ந்த நந்தன் சேரியில் நடக்கும் அனாச்சார பூசையைக் கண்டித்தது, வேதியரிடம் திருநாளைப் பார்க்க விடை கேட்டது, வேதியர் காலில் விழுந்தபோது அதனைத் தடுத்து அவரை மீண்டு வணங்கியமை ஆகிய காட்சிகளி லெல்லாம் நந்தனாராக வேடந்தாங்கிய மணிபாகவதரின் நடிப்புத் திறன் அவரை நந்தனாராகவே யாக்கிவிட்டது.

வேதியனாகத் தோன்றி— ஆண்டே எனும் மிடுக்குடன், அடிமைகளை அதிகாரம் செய்த ஸ்ரீ நிவாசனின் நடிப்பின் உச்சக் கட்டமாக அமைந்தது நந்தனது காலைப்பற்றிப்பிடித்த காட்சியாகும்.

சேரியின் பூசாரியாக, அந்த சமூகத்தினரின் பேச்சு வழக்கில் வதுனைக்களைச் சரளமாகப்பேசிய கணபதிப்பிள்ளை யவர்கள் தனது தேர்ந்த நடிக அனுபவத்தை வெளிக்காட்டிவிட்டார்.

மற்றும் சேரியில் நடந்த அரிச்சந்திர நாடக ஒத்திகை நகைச் சுவையை அளித்ததோடு— சபையின் ஆழ்ந்த இரசனையையும் வெளிக்குக் கொண்டுவந்து விட்டது. அதில் பங்குகொண்ட அனைவரும் தமது பாகங்களை விரசமின்றிய சுவையில் இயக்கியது, தேர்ந்த நட்டுவாங்கத்தின் திறன்போலும்.

நந்தன் தில்லையின் வாசலில் நின்று "அம்மையே அப்பா" என்று பாடும்போது நந்தி விலகியமை — கோவிலின் தோற்றம் ஆகியவை தத்ரூபமாக அமைந்திருந்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக பாத்திரங்களின் உண்மையான உருவத்தைத் தமது ஒப்பனைத் திறன் (மேக்கப்) மூலம் வெளிக்கொணர்ந்த தனிச் சிறப்பு திரு. முருகானந்தம் அவர்களையே சாரும்.

காலத்துக்குப் பொருத்த மற்ற கருத்து — பழகிப்போன கதையிது என்றெல்லாம் இரசிகர்கள் கூறிக்கொண்டாலும் கலையம்சங்கள் நிறைந்த நாடகங்களை என்றுமே இரசிகர்கள் அனுபவிக்கின்றனர் என்பதற்கு **பக்தநந்தனார்** ஓர் எடுத்துக்காட்டாகும்.

**திருமலையான்**

---

## விஞ்ஞானத்துக்கு மனிதன் அடிமை!

யாழ்ப்பாணம்.

இந்நாட்டுத் தமிழ் மக்கள் மீண்டும் புத்துயிர் பெற்று வாழ வழியுண்டோவெனில் நிச்சயமாக அவ்வாறு வாழ முடியுமென்பதை நிரூபிக்கத் தக்கவாறு பரமேஸ்வரக் கல்லூரியையும், இராமநாதன் கல்லூரியையும் யாழ்ப்பாணத்தில் சேர் பொன். இராமநாதன் அவர்கள் மிகுந்த தீர்க்கதரிசனத்துடன் நிறுவினார்கள். இவ்வாறு யாழ்ப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரியின் இலட்சிய ஜயந்திக்குத் தலைமைதாங்கிய திரு. சு. நடேசபிள்ளை தமது உரையிற் குறிப்பிட்டார். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாய மொருநாளுமில்லை என்பது எமது சித்தாந்தமாகும். ஆகவே கடவுளை மெய்யன்புடன் வழிபடுவோர்க்கு ஏனையோர்க்கு அடிமைப்பட நியாய மெதுவுமில்லையெனக் கூறினார்.

### மனிதனும் விஞ்ஞானமும்

பல்வேறு வழிகளிலும் தமிழன் கஷ்டமுறுங் காலத்தில் தமக்கென ஒரு இலட்சியத்தை வகுத்து அதன் பெயரால் விடாமுயற்சியுடன் பாடுபட வேண்டும். மக்கள் கடவுளிலும் பார்க்க விஞ்ஞானத்தையே அதிகம்நாடுகின்றனர். விஞ்ஞானத்தை அடிமைகொண்டுவிட்டதாக இறுமாப்படையும் மனிதர் தம்மை அதே விஞ்ஞானம் அடிமையாக்கிவிட்டது என்ற உண்மையை உணரவில்லை என சேர். கந்தையா வைத்தியநாதன் தமது பேச்சிற் குறிப்பிட்டார்.

### மூன்று நாட்கள்

சென்ற வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய இந்நாட்களில் சமயம், இலக்கியம், விஞ்ஞானம், பண்பாடு முதலியன பற்றி திரு. மு. ஞானப்பிரகாசம், பண்டிதர் க. கி. நடராசன், திரு. ந. மாணிக்க இடைக்காடர், திரு. வி. செல்வநாயகம் (விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்), திரு. கே. நேசையா, டக்டர் சி. யே. எலியேசர் ஆகிய அறிஞர்கள் அரிய விரிவுரைகள் ஆற்றினர். மூன்று நாட்களிலும், யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீ காந்தா, சேர். கந்தையா வைத்தியநாதன், திரு. சு. நடேசபிள்ளை ஆகியோர் தலைமை தாங்கினர்.

இசைப் புலவர் என். சண்முகரத்தினத்தின் இசைக்கச்சேரி, பரமேஸ்வரக் கல்லூரி மாணவரின் மார்க்கண்டேய நாடகம், இராமநாதன் கல்லூரி மாணவிகளின் பரத நாட்டியம் சபையோருக்கு அரிய விருந்தாக அமைந்திருந்தன.

---

**போதி மரநிழலில் ஞானஒளி பெற்ற புத்த பிரான், பரிநிர்வாணம் எய்திய புனித நாளாகிய வைகாசி விசாகம் (21-5-59) பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் ஒரு பெருநாளாகும்.**

# ஞானப் பேரொளி

— கவியரசன் —

அன்புறையும் திருவுருவாய் அறத்தைக் காக்கும்
அருமறையின் கொள்கலமாய் அவனி மாந்தர்
துன்பதனைத் துடைத்துநிதம் தூய்மைப் பேற்றை
துய்த்திடவே வழிவகுத்த துறவார் வாழ்வும்
என்பினையும் பிறர்க்கீயும் இயல்பும் கொண்டு
இருநிலத்தில் தியாகமதின் ஒளியாய் நின்றே
மன்குலத்தை இரட்சித்தே வானோர் பாங்கை
மல்கியநற் புத்தனையே வழுத்தி வாழ்வோம்.

சீலமதை ஓதி நின்றே சிறுமைச் செய்கை
தீய்ந்திடவே தெய்வீக ஒளியைக் காண
வாலவெழிற் பருவத்தே பொங்கும் யாவும்
மாயையெனக் கண்டோர்ந்து மண்ணோர்க்காக
கோல எழில் மனையுடனே செல்வம் யாவும்
குறையுளதாம் எனநீக்கிக் கானிற் சென்று
ஞாலமது சத்தியத்தை நயந்தே போற்ற
நன்னெறியை வகுத்திட்டான் ஞானப் புத்தன்.

இந்தவுல கத்தினிலே இருக்கும் எல்லா
இன்னுயிரும் பேணுவதே அறமா மென்று
சந்ததமும் போற்றியன்று சாந்தி தன்னை
தந்திடு நல் ()நறிபலவும் சாற்றிச் சென்ற
அந்த மகான் அடிவணங்கி அருளார் சீலம்
அனைவருமே உளமேற்றி வாழ்வோ மாயின்
எந்தவித இடரதுவும் எம்மை யிங்கே
இழிநிலைக்கே இறக்கி விடா என்றே ஓர்வோம்.

தஞ்சமென வந்தவரை ஏற்றுத் தம்மின்
தகைமைபெறும் அன்பதினால் தாங்கிப் போற்றி
அஞ்சலெனக் காத்திங்கு அவர்க்கு வேண்டும்
அத்தனையும் செய்துநிதம் அருளைக் காட்டில்
எஞ்சலிலா இன்ப நிலை எமக்கே கிட்டும்
என்றுணர்ந்தே புத்தனவன் இருதாள் ஏத்தி
பஞ்சசீலம் என்னுமுயிர் பாதைக் கூடே
படிமிசையில் உயர்ந்த நெறி படர்ந்தே வாழ்வோம்.

---

இந்தியா-பாகிஸ்தான் தகராறு

## இரு நாட்டுத் தலைவர்களுடனும் உலக வங்கித் தலைவர் பேச்சுவார்த்தைகள்

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே: (1) காஷ்மீர் (2) எல்லைகள் (3) சிந்து நதித் தண்ணீர் பங்கீடு (4) பிரிவினை காரண நிதி பங்கீடு முதலியன காரணமாகச் சென்ற பதினொரு வருட காலமாக நிலவும் சிக்கல்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

சிந்துநதி நீர் பங்கீடு சம்பந்தமாக எழுந்துள்ள தகராற்றை தீர்த்து வைப்பதற்குக் கடந்த ஏழு வருட காலமாக உலக வங்கி முயற்சிகள் செய்து வருகின்றது. உலக வங்கியின் தலைவரான திரு. இயுஜீன் பிளாக் 12-5-59இல் புது டில்லிக்கு வந்து இந்திய அரசாங்கப் பிரமுகர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திவிட்டு 16-5-59 தொடக்கம் கராச்சியில் பாகிஸ்தான் அரசாங்கப் பிரமுகர்களுடன் கலந்தாலோசனைகள் செய்து வருகின்றார். உலக வங்கித்தலைவரின் முயற்சி பயனளிக்குமா என்பது அடுத்த சில நாட்களில் தெரிந்து விடும்.

இந்தியா, பாகிஸ்தான் என்ற பிரிவுகள் ஏற்பட்டதன் காரணமாக இரு நாடுகளுக்கு மிடையே நிதிக் கொடுக்கல் வாங்கல் சிக்கல் இன்னும் தீர்த்துவைக்கப்படவில்லை. 1948இல் பாகிஸ்தான் இந்தியாவுக்கு 300 கோடி ரூபாய் வழங்கவேண்டும் என இந்திய அரசாங்கம் தெரிவித்திருந்தது. இந்தியா, பாகிஸ்தானுக்கு 180 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என பாகிஸ்தான் நிதிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் 7-5-59இல் கூறியிருக்கின்றார். இந்த நிதிக் கொடுக்கல் வாங்கல் தகராறு சம்பந்தமாக கலந்தாலோசனை செய்து முடிவுக்கு வருவதற்காக இந்திய நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் பாகிஸ்தான் நிதி மந்திரியாகிய ஜனாப் முகம்மது ஷாகிப்பை புதுடில்லிக்கு வருமாறு அழைத்திருக்கின்றார்.

[ 15ஆம் பக்கம் பார்க்க ]

**உங்கள் கார் பற்றறிகளைத் திறமான முறையில் "சார்ச்" செய்வதற்கும் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஸ்பிறே பெயின்றிங் வேலைகட்கும் உகந்த இடம்.**




**சுந்தரம்ஸ் பற்றறி சேவிஸ்**

402 கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு வைகாசி மீ 9 உ (23-5-59)


## இலங்கை அரசியல் நெருக்கடி

பிலிப் குணவர்த்தனவும் வில்லியம் ஸில்வாவும் தங்கள் அமைச்சர் பதவிகளை ராஜினாமாச் செய்ததுடன், அவர்களது வி. எல். எஸ். எஸ். பி. (புரட்சி வாத சமசமாஜக் கட்சி) யைச் சேர்ந்த அனைவரும் அரசாங்கக் கட்சியிலிருந்து விலகிவிட்டதால், இலங்கை அரசியலில் ஒரு புதிய பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

1956ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிலிப்பின் புரட்சிவாத சமசமாஜக் கட்சி, தகநாயக்காவின் 'பாஷா பெரமுனே' இம்மூன்று கட்சிகளும் சேர்ந்து எம். ஈ. பி என்ற மக்கள் முன்னணிக் கட்சியை அமைத்து பொது அறிக்கையையும், வேலை திட்டத்தையும் தயாரித்து அதை அடிப்படையாகக் கொண்டு, மக்களின் ஆதரவை வேண்டினர். தேர்தல் மூலம் போதிய பலம் கிடைத்ததின் மீது, ஸ்ரீ பண்டாரநாயக்காவின் தலைமையில் எம். ஈ. பி மந்திரி சபையும் அமைக்கப்பட்டது. பல பல வேற்றுமைகள் ஏற்பட்டும் சென்ற மூன்று ஆண்டுகளாக இம்மந்திரி சபை ஒரு விதமாக நடைபெற்று வந்தது. சமீப காலமாக இவ்வேற்றுமைகள் அதிகரித்து, முடிவில் ஒரு கட்சியே விலகிவிட்டதால், இம் முக்கூட்டு எம். ஈ. பி மந்திரி சபையின் அமைப்பும் வெகுவாகக் குலைந்துவிட்டது.

வி. எல். எஸ். எஸ். பி கட்சியினர் மட்டுமன்றி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவரும், உதவி வர்த்தக அமைச்சருமான ஸ்ரீ ராஜபக்ஸவும் அரசாங்கத்திலிருந்து விலகியுள்ளார். இன்னும் சிலர் விலகலாமென்றும் கூறப்படுகிறது. இத்தலையங்கத்தை எழுதும் சமயத்தில், அரசாங்கத்தை ஆதரிப்பவர் தொகை நாற்பத்தேழாகவும், எதிர்க்கட்சியின் தொகை ஐம்பத்திரெண்டாகவும் இருக்கின்றது. என்றாலும், அரசாங்கக் கட்சிக்குப் பார்லிமெண்ட் சபையிலே பெரும்பான்மையோரின் பலம் இருக்குமென்றும், அவசியமாயின் சில எதிரிகளின் ஆதரவைப் பெற்று, ஆட்சியை, இன்னும் இருபது மாதங்களுக்கு நடத்திவிடலாமென்றும் நம்பப்படுவதாகத் தெரிகிறது.

இந்த நிலையில் குற்றம் யாருடையதென்பது குறித்து நாம் ஆராயத் தேவையில்லை. ஆனால் இந்நாட்டில் ஜனநாயகம் சீராக வளரவும், மேலான அரசியல் சம்பிரதாயங்கள் ஏற்பட்டு, நாடு அமைதியாக முன்னேறவும் என்ன செய்யவேண்டுமென்பதுச் குறித்துச்சிந்திக்க வேண்டியது எல்லாத் தேசாபிமானிகளின் கடமை. 'கபினெட்' முறை எனும் மந்திரி சபையிலே பொறுப்பு எல்லா அமைச்சர்களுக்கும் கூட்டானதென்றும், முக்கிய மந்திரிகள்கருத்து வேற்றுமை காரணமாக விலக நேரிடின் மந்திரி சபையே ராஜினாமாச்செய்து, புதிய மந்திரி சபை அமைக்கப்பட வேண்டுமென்பதும் பார்லிமெண்டரி ஜனநாயக சம்பிரதாயம். அதன்படி பார்த்தால், பிரதமர் பண்டாரநாயக்கா, தாம் உள்ளிட்டு தமது மந்திரி சபை அனைத்தின் ராஜினாமாவையும், கவர்னர் ஜெனரலிடம் இப்போது சமர்ப்பித்து, புதிய மந்திரி சபையை அமைக்க முற்படவேண்டியிருக்கும்.

ஆனால் இச்சமயம் இரு மந்திரிகள் மட்டுமன்று தேர்தல் காலத்தில் கூட்டாகச் சேர்ந்திருந்த ஒரு கட்சியே, அரசாங்கத்திலிருந்து விலகியதால் எம். ஈ. பி. என்ற கட்சியே குறைந்துவிட்டது. பொதுமக்கள் சென்ற தேர்தலில் வாக்களித்தது எம். ஈ. பி. கூட்டுக் கட்சிக்கேயாகும். அக்கட்சி குறைந்துவிட்ட நிலையில், மீண்டும் பொதுத் தேர்தல் நடத்தி பொதுமக்களின் தீர்ப்பையும், அவர்களது ஆதரவையும் பெற வேண்டியது அவசியமென்று கூறுவதில் நியாயமுண்டு.

இந்நிலையில் பிரதமர் பண்டாரநாயக்கா என்ன செய்யப் போகிறார்? மேற்குறித்த இரு வழிகளில் ஒன்றைக் கையாளுவாரா? அல்லது, பார்லிமெண்ட் சபையிலே பதவி முதலிய ஆசைகள் காட்டி இன்னும் சிலரது ஆதரவைப் பெற்று,. இந்தப் பார்லிமெண்டின் ஆயுட்காலம் வரை,தானே பிரதமராக இருந்து, ஆட்சித் தேரை ஓட்டப்போகின்றாரா? நாட்டின் அரசியல் நிலைமை நிச்சயமில்லாதிருக்கின்றது.எந்தச் சமயமும் எதுவும் ஏற்படலாம். பிரதமரின் கடமையும் பொறுப்பும் நிச்சயம் சுலபமானதல்ல.

இந்த 'காபினெட்' மந்திரி சபை ஆட்சி, சர்வாதிகார ஆட்சியில் முடியுமென்றும்அதை மாற்றவேண்டுமென்றும் அவரே கூறி, அரசியல் சீர்திருத்தக் கமிட்டிக்குச்சில புதிய யோசனைகளைச் சமர்ப்பித்திருக்கின்றார். இந்நிலையில் கேவலம் மேலதிகமான பலத்தை எப்படியோ திரட்டி, இந்த 'சர்வாதிகார' ஆட்சியை நடத்துவதாயின், பொது மக்களிடையே அதிருப்தி அதிகரிக்கவும், நாட்டில் அமைதியும் முன்னேற்றமும் ஏற்படாமற்போகும்.

இதே சமயம் வகுப்பு வெறியர்களும், சுயநலமிகளும் நாட்டில் சமதர்மம் ஏற்பட முடியாமல் தடுக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கெல்லாம் இடம் கொடாமல் இலங்கை ஜனநாயக முறையில் சமதர்மப் பாதையில் முன்னேறிச் செல்லப் போகிறதா? அல்லது ஒற்றுமையின்றி, ஜனநாயகப் பொறுப்பை வகிக்க முடியாமல், நாடு அமைதி கெட்டு, பெற்ற சுதந்தரத்தையும் இழக்கப்போகின்றதா? இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த அரசியல் நெருக்கடி, பிரதமருக்கு மட்டுமன்றி, இங்குள்ள ஒவ்வொருவருக்கும் விடுத்துள்ள ஒரு சவாலும் சோதனையுமாகும்.

## குருநாகல் மாநாடு

குருநாகலில் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மாநாடு, நாட்டில் ஒற்றுமை ஏற்படுத்தவோ, மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவோ பொருளாதாரச் சங்கடங்களைத் தீர்க்கவோ எவ்வித வழியும் காட்டவில்லை.

இக் கட்சி ஆரம்பமாக்கப்பட்டபோது, பல தமிழர்கள் இதில் சேர்ந்திருந்தனர். சிங்களம் தமிழ் இரண்டும் அரசாங்க மொழிகளாக இருக்குமென்றே இக் கட்சியின் அமைப்பு அறிக்கையில் கூறப்பட்டது. ஆனால், சென்ற பொதுத் தேர்தலுக்கு முன்னால், இதன் மொழிக் கொள்கையைத் திடீரென மாற்றியதும், அதில் இருந்த தமிழர், இனி அக் கட்சியில் மானம் மரியாதையுடன் சேர்ந்திருக்க முடியாதென்று கண்டு விலகினர். தமிழர் விலகியபின் அதுவும் ஒரு வகுப்புவாதக் கட்சியாகிவிட்டது. தமிழர் மீண்டும் அக் கட்சியில் சேருவதற்கான எவ்வித முயற்சியையும் பிரதமர் உள்ளிட்டு யாரும் எடுக்கக் காணோம்.

மொழிச்சிக்கலைத் தாம் நியாயமாகத் தீர்த்துவிட்டதாகப் பிரதமர் இம் மாநாட்டிலும் பல்லவி பாடியுள்ளார். இது நியாயமாகத் தீர்ந்ததா என்பதற்குத் தக்க அத்தாட்சி, தமிழர் இக் கட்சியில் மீண்டும் சேர முயல்வதுதான். தமிழர் யாரும் அக் கட்சியின்நிர்வாகத்தில் இல்லாததுடன், தமிழ்ப் பகுதிகளுக்குப் பிரதமரும் மற்ற அமைச்சர்களும் இன்னும் தாராளமாகச் செல்ல முடியவில்லை.

இக் கட்சியின் சென்ற மாநாட்டுக் கூட்டத்தில், வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டுமென்று தீர்மானித்தது வாழ்க்கைச் செலவுகுறைவதற்குப் பதில், உயர்ந்துள்ளது. அரிசி, சீனி இவற்றின் விலையை ஓரளவு குறைத்தது உண்மையே. ஆனால், சாண் ஏறினால் முழம் சறுக்கும் அதைப்போல், தேங்காய் முதலிய மற்ற உணவுப்பொருள்களின் விலை பெரிதும் ஏறி, ஏழை மக்களின் கஷ்டத்தை அதிகரித்துள்ளது. வேலையில்லாக் கஷ்டமும் குறைந்தபாடில்லை.

மற்றச் சில நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் நிலைமை மேலாக இருப்பதாகக் கூறலாம், ஆனால் இது சொற்ப ஆறுதலாகும். குருநாகல் மாநாடு, மந்திரி சபை நெருக்கடிச் சூழ்நிலையில் கூடியதால் கவனமெல்லாம் அந்த நெருக்கடிப்பக்கமே திரும்பி இருந்தது என்றாலும் இக் கட்சி, எதிர்காலத்தில் உருப்படியான காரியங்களைச் செய்து மக்களின் ஆதரவையும் நம்பிக்கையையும் பெறவேண்டுமாயின், நாட்டில் சமூக ஒற்றுமை ஏற்படவும், எல்லாச் சமூகத்தவருக்கும் ஆட்சியில் கண்யமான பங்கு பெறத்தக்கவிதமாக அரசியலை மாற்றவும் முன்வரவேண்டும்,

## 'குவாரண்டைன்'

இந்தியாவிலிருந்து ரயில் மார்க்கமாக இலங்கைக்கு வருகிறவர்கள் இனி மண்டபத்தில் 'குவாரண்டைன் பர்மிட்' காட்டவேண்டிய அவசியமில்லை என்றும், அந்த பர்மிட் இல்லாமலே தனுஷ்கோடி வழியாக இலங்கைக்கு வரலாமென்றும் செய்துள்ள ஏற்பாடு, இருதேச பிரயாண சங்கடங்களில் ஒன்றை நீக்குவதாகும். அந்தமட்டில் இது நல்லதே.

இனி மண்டபம் முகாமை நாம் வைத்திருக்கத் தேவையில்லை. அதை மூடிவிடுவதால் இலங்கைக்குச் செலவு மிச்சமாகும். இதே சமயம் உலகில் பல நாடுகளிலும் இலங்கையிலுள்ளதுபோல் 15 நாள் குவாரண்டைன் கண்காணிப்புக்கிடையாது. இலங்கையிலிருந்து இந்தியா செல்லும் பலர்களுக்கும் இந்த நிபந்தனை இல்லை. சுகாதார அத்தாட்சிப் பத்திரங்கள் இருந்தால் அவையே போதுமென்று பல நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. அதே முறையை நாமும் பின்பற்றுவதால், இங்கு வரும் யாத்திரிகர்களின் கஷ்டம் குறையும், அவர்கள் அதிகமாக வரவும் வழிசெய்யும். பரீட்சார்த்தமாக சில மாதங்களுக்கு இதைச் செய்து பார்த்து, தொத்து நோய் ஆபத்து இல்லாவிடில், 'குவாரண்டைன்' கண்காணிப்பை அடியோடு கைவிட்டு விடலாம்.

## தமிழர் சரித்திர ஆராய்ச்சி

பிரிட்டிஷ் ஆட்சி இலங்கையில் நிலவிய காலத்தில் பள்ளிக்கூட மாணவர்கள் பிரிட்டனைப் பற்றியும் அதன் அயல் நாடுகளைப்பற்றியுமே சரித்திர நூல்களிற் படித்துவந்தனர். சொந்த நாட்டைப்பற்றிய வரலாற்றை அவர்கள் அறிந்துகொள்ளும்வகையிற் கல்வித் திட்டம் அப்போது அமைந்திருக்கவில்லை. பொய்யும் புனைசுருட்டும் நிறைந்த பிறநாட்டுச் சரித்திரங்களை அறிந்துகொள்வதுடன் அவர்கள் திருப்தியடைய வேண்டியிருந்தது. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் தானும் தமிழினத்தின் பண்டைய வரலாற்றினைப் பற்றிய உண்மைகளை அறிந்துகொள்வது கஷ்டமாகவேயிருக்கின்றது. இக்காலத்துச் சிங்களச் சரித்திர நூலாசிரியர்கள் சிலர் தமிழினத்தை எள்ளி நகையாடும் வகையில் நூல்களை எழுதுவதிலும் உண்மைகளைப் போர்த்து மூடுதலிலுமே கவனம்செலுத்தி வருகின்றனர். இந்த நிலைமை மாற வேண்டுமாயின் ஈழத் தமிழறிஞர்கள் ஒன்றுசேர்ந்து இலங்கைத் தமிழரின் வரலாற்றினைத் தக்க சான்றுகளுடன் எழுதி வெளியிட முன்வர வேண்டும். இவ்வகையிற் சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பெற்ற ஈழத்தமிழர் சரித்திர ஆராய்ச்சிக் கழகம் முயற்சி செய்வது பாராட்டற் குரியது. சென்ற புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இக் கழகத்தின் கூட்டத்தில் டக்டர் எச். டபிள்யூ. தம்பையா யாழ்ப்பாணச் சரித்திரம் சிறந்த முறையில் எழுதப்பட வேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டிருந்தார். சரித்திரத்தில் ஈடுபாடுமிகுந்த அறிஞர்கள் இத்துறையில் ஆர்வத்துடன் உழைப்பதற்கு ஈழத்தமிழர் சரித்திர ஆராய்ச்சிக் கழகம் வழிகாட்டுமென நம்புகின்றோம்.

## 'வெசாக்' விசாரம்

சென்ற வியாழக்கிழமை புத்தபெருமான் பிறந்த தினம். "தர்ம துவீபம்" என்று கூறப்படும் இலங்கையிலே சென்ற வருஷம் 'வெசாக்' முடிந்ததும் தான் கலவரங்களும் படுகொலைகளும் நடைபெற்றன.

அதேபோல் இந்த வருஷமும் ஏதும் ஏற்படுமோ என்று கொழும்பில் வசிக்கும் ஒரு யாழ்ப்பாணத் தமிழர் கவலை தெரிவித்தார். கல்கிசைப் பகுதியில் பாதிப்பேருக்குமேல் தமிழர்களாக வசித்துவந்ததாயும், இப்போது அங்கு தமிழர் மிகமிகக் குறைவென்றும், மந்திரி சபை கலைந்து அரசியல் நெருக்கடி அதிகரித்தால், முடிவில் தென்பகுதிகளிலும் மலைநாட்டிலுமுள்ள தமிழர்தான் தாக்கப்படுவார் என்றும், இதற்கு என்ன செய்யலாம் என்றும் விசாரப்பட்டார்.

* * *

ஆனால் பிரதம மந்திரியோ இனி இலங்கையில் அவ்வித வகுப்புக் கலவரங்கள் எதுவும் நடைபெறாதென்றே தாம் நம்புவதாகக் குருநாகல் மகாநாட்டில் தெரிவித்தார். இதை அந்த நண்பரிடம் எடுத்துச் சொன்னதும், "நாட்டில் அவ்வித வகுப்புக் கலவரங்கள் நடக்காமற் தடுக்கவேண்டிய கடமையும் பொறுப்பும் பிரதமரைச் சேர்ந்தது. இதற்காக அவருக்கு விசேஷ அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. யாராவது விஷமம் செய்தால், அவர்களை அடக்கிப்போடுவேன் என்று பிரதமர் கடுமையாக எச்சரிக்கவேண்டியிருக்க, கலவரம் நடவாதென்றே தாம் நம்புவதாக ஏதோ பாட்டி போலக் கூறுவது இந்நாடு செய்த துரதிருஷ்டம்" என்றார்.

* * *

சென்ற மூன்று வருடங்களாக வெசாக் பந்தல்கள் கொழும்பூரிலே வரவரக் குறைந்து வருகின்றன. சென்ற வருடத்தைவிட இம்முறை பந்தல்கள் மிகவும் குறைவாம்.

இப்போது இந்த "தர்ம துவீப"த்தில் பலரும் புத்தரைப்பற்றி நினைப்பதற்குப் பதிலாக பிலிப்பையும், தஹாவையும், பண்டாவையும்பற்றியே அதிகம் நினைக்கிறோம். புத்தர் சொன்ன உபதேசமென்ன? அதன்படி நடக்கிறோமா? என்பதுபற்றிச் சிந்திப்பதற்குப் பதில், மந்திரிகளின் அரசியல் ஜாதகத்தைப்பற்றியும், அவர்களது திருவாய்மொழிகளைக் குறித்துமே விவாதிக்கிறோம்.

நம் தலையெழுத்தெல்லாம் இந்த அரசியற் கிரகங்கள் கையில்தானே உள்ளது! புத்தம் சரணம் கச்சாமி! தர்மம் சரணம் கச்சாமி!"

* * *

மறுநாள் (நேற்று) வெள்ளிக்கிழமை திருவள்ளுவர் பிறந்த பொன்னாள். தமிழர் மட்டுமல்ல ருஷியர் கூட போற்றுகின்றார்கள், வள்ளுவரையும் அவரது அருமைக் குறளையும். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து" என்று பாரதியார் கூறிய வாக்கு உண்மையாகிறது.

ருஷிய மொழியிலே பெயர்க்கப்பட்டுள்ள திருக்குறளைக் கொழும்புக் காட்சியிலே சென்றவாரம் வைத்திருந்தனர். "திருக்குறள் எனும் அறிஞர், திருவள்ளுவர் என்ற புகழ் பெற்ற நூல் எழுதியுள்ளார்" என்று அப் புத்தகக் காட்சியைப் பற்றிய பிரசுரத்தில் தவறாக எழுதியிருந்தனர். புத்தகத்துக்கு ஆசிரியர் பெயரையும் ஆசிரியருக்குப் புத்தகத்தின் பெயரையும் மாறாட்டமாகக் கொடுத்தாலும் ருஷியர்கள் இதை மொழி பெயர்த்துப் படிப்பதுகுறித்துத்தமிழராகிய நாம் பெருமைப்பட வேண்டுமல்லவா?

திருவள்ளுவரின் பிறந்த நாளைத்தமிழராகியநாம் கொண்டாடுகிறோம். பல பள்ளிக்கூட

(9-ம் பக்கம் பார்க்க)

# தொழிலாளர் கிளர்ச்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்த முடிவு வெளியானதும் பிலிப், ஸில்வா உள்ளிட்டு 5 வி. எல். எஸ். எஸ். பி. அங்கத்தவர்களும், அரசாங்கக் கட்சியிலிருந்து விலகினர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும், இரு அரை மந்திரிகள் உள்ளிட்டு, ஏழுபேர்கள் விலகினர். இந்த ஏழுபேரும் பிரதமரிடம் விசுவாசம் உள்ளதாகச் சென்றவாரம்தான் உறுதிமொழியில் கையொப்பமிட்டனர்! என்றாலும் அவர்கள் இடது சாரிகள்பக்கம் அனுதாபமுள்ளதால் அரசாங்கக்கட்சியிலிருந்து விலகினர். எதிர்க்கட்சியில் சேராமல் எம். ஈ. பி.—எல். எஸ். எஸ். பி. என்ற பெயரில் தனியாகப் பார்லிமெண்டில் இருக்கப் போவதாகவும், பிரதமரிடம் தாங்கள் விசுவாசமாயிருந்து, பிற்போக்கு நடவடிக்கைகளை மட்டும் எதிர்க்கப் போவதாயும் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த 12 பேர்களும் பிரிந்ததால், அரசாங்கக் கட்சி பலவீனமடைந்தாலும், எதிர்க்கட்சியிலிருந்து சிலர் கட்சி மாறி வருவதால், அரசாங்கத்தேரை 20 மாதங்களுக்கு ஓட்டிவிடக் கூடியபலம் நமக்கு இருக்குமென்று பண்டாரநாயக்கா நம்புகின்றார்.

## பொதுத் தேர்தல் வேண்டும்

கூட்டு மந்திரிசபை குலைந்ததால் சபையைக் கலைத்து பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமென்றும் இதுதான் பிரிட்டனிலுள்ள ஜனநாயக சம்பிரதாயமென்றும் யு. என். பி. கட்சியைச் சேர்ந்த ஜே. ஆர். ஜயவர்த்தன கூறுகிறார். அரசாங்கக் கட்சியில் சேர்ந்துள்ள நாவலப்பிட்டி மெம்பர் ஆர். ஈ. ஜயதிலகா அரசாங்கக் கட்சியில் சேர்ந்து விட்டாலும், பொதுத்தேர்தல் நடத்துவதே தமது சொந்தக் கருத்தென்கிறார். பெரும்பான்மை எம். பிக்களுக்கும் இக் கருத்து என்றாலும், பிரதமருக்கு அவ்வித எண்ணம் எதுவும் இல்லை. இப் பொதுத்தேர்தல் நடந்தால் மீண்டும்தெரிவுசெய்யப்படுவது சந்தேகம் என்ற பீதி அவர்களுக்கு உண்டு.

## வலது சாரி வெற்றி

இது வலது சாரிக்குப் பெரிய அரசியல் வெற்றி. சென்றவாரம் குறிப்பிட்டது போல் இடது சாரிகள் பக்கம் பிரதமர் எங்கு சாய்ந்துவிடுவாரோ என்று வலது சாரிகள் அஞ்சி, அதைத் தடுக்கவே பெருமுயற்சிசெய்தனர். அவர்களது அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது.

இந்தமாதிரிக் கண்டதும் இதுவரை அரசாங்கத்தை ஆதரித்துவந்த கம்யூனிஸ்டுகள், மனம்மாறினர். இனி தொழிற்சங்க நடவடிக்கைகளை எடுத்துக் கிளர்ச்சி செய்யப் போவதாகவும், இடது சாரிகள் இனி கட்டுப்பாடாக ஒன்றுபட வேண்டுமென்றும், பீட்டர் கெனமன் அறிவித்தார்.

டாக்டர் என். எம். பெரேராவும், பிலிப்பும் நெருங்கி விட்டனர். அரசாங்கத்திலிருந்து பிரிந்து வந்தவர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சமசமாஜக் கட்சி தீர்மானித்துள்ளது.

## வேலை நிறுத்தக் கிளர்ச்சி

பிலிப் கோஷ்டியினர் ராஜினுமாச் செய்த தினத்திலேயே துறைமுகத்தில், வேலை நிறுத்தம் கிளம்பியுள்ளது. இனி இந்தக் கிளர்ச்சிகள் அதிகம் பரவலாம். ஆனல் அரசியல் காரணங்களுக்காக வேலை நிறுத்தங்கள் நடந்தால் அதை சட்டவிரோதமாக்கி அடக்க, சமீபத்தில்தான் பாதுகாப்புச் சட்ட மூலம் பிரதமர் போதிய அதிகாரம் பெற்றிருக்கிறார். இதற்கு பிலிப்பும் ஆதரவாக இருந்திருப்பதைக் குறித்து அவர் இப்போது வெளியில் சொல்ல முடியாவிடினும் மனத்துக்குள் வருந்தக்கூடும். அவர் மீது, உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சொய்ஸா அவதூறு குற்றம் சாட்டி தொடர்ந்துள்ள வழக்கு இம் மாதக் கடைசியில் விசாரணைக்கு வருகிறது.

விவசாய மந்திரியாக இருக்கையில் நெற்காணி சட்டத்தை நிறைவேற்றினர். சென்ற வகுப்புக் கலவரத்தின்போது சமாதானத்தை ஏற்படுத்தவும், கொழும்பில் அகதிகளாக வந்த தமிழருக்கு உதவி, பாதுகாப்பு அளிக்கவும் அவர் பல நல்ல சேவை செய்தார். கைத்தொழில் மந்திரியாக இருந்த வில்லியம் ஸில்வாவின் நிர்வாக காலத்தில், காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் இரண்டாவது சூளை எற்படுத்த ஒழுங்கு செய்யப் பெற்றது. வாழைச்சேனைகாகிதத்தொழிற்சாலையில் மீண்டும் வேலை தொடர்ந்து நடத்தவும் ஏற்பாடுகள் செய்தார். வகுப்பு வெறியை அடக்கத் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்திய அவ்விருவரும் அரசாங்கத்தை விட்டு விலகியதாலும், ஸ்ரீமதி ராஜரத்ன முதலியவர்கள் மீண்டும் அரசாங்கக் கட்சியில் சேர முன்வந்துள்ளதாலும், வகுப்பு வேற்றுமை உணர்ச்சி இனி அதிகரிக்குமோ என்று தமிழ் வட்டாரங்களில்அஞ்சப்படுகின்றது.

## புதிய மந்திரிசபை அமைப்பு

உணவு விவசாய மந்திரிகள் ராஜினுமாச் செய்தால் அந்த இலாகாக்களை முறையே ஸி. பி. டி. ஸில்வா, முனசிங்கா இவ்விருவரும் பொறுப்பேற்றும் தற்காலிக அமைச்சர்களாக விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். மந்திரி சபையில் சில பதவிகள் காலியாகியுள்ளதால், பதவி அமைப்புடன் சிலர் அரசாங்கக் கட்சியில் சேர முன்வருகின்றார்கள்.

பார்லிமெண்டின் இந்தக் கூட்டம் அடுத்தவாரம் முடிகின்றது. அதன் பிறகு, புதிய மந்திரி சபையைத் திருத்தி அமைக்கப்போவதாயும், புதிய வேலைத்திட்டத்தைத் தயாரிக்கப் போவதாகவும் பிரதமர் அறிவித்துள்ளார். மந்திரி சபையில் இனி பிளவு இன்றி கூட்டுப் பொறுப்புடன் கட்டுப்பாடாகப்பதவிஆற்றவேண்டுமென்றும் முற்போக்கான காரியங்களைச்செய்ய வேண்டுமென்றும் மூன்று வாரங்களுக்குப்பின் கூடிய மந்திரி சபைக் கூட்டத்தில் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

தொழில் மந்திரி இலங்கரத்ன தமது இலகாக்களிற் சிலவற்றை மாற்றவேண்டுமென்று கூறியதைப் பிரதமர் ஒப்புக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

சில தனிப்பட்ட பள்ளிக்கூட நிர்வாகங்களை அரசாங்கமே நிர்வாகிகளின் சம்மதத்துடன் பொறுப்பேற்கவும், நாட்டில் ஒரேவிதகல்விமுறையைப் படிப்படியாக ஏற்படுத்தவும், மந்திரி சபையின் இந்தக்கூட்டம் தீர்மானித்ததுடன், உணவுப் பொருள்களின் விலையைக்குறைத்து வாழ்க்கைச்செலவைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்றும் தீர்மானித்தனர்.

## எல். எஸ். எஸ். பி.

இலங்கை சமசமாஜக் கட்சியினர்வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்போதுள்ள "லொடலொட்டை மந்திரி சபை" யை நீக்கி, சமசமாஜ அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்றும், தேசிய ஒற்றுமையை வளர்த்து, சமதர்ம அடிப்படையில், அபிவிருத்தித் திட்டத்தை நடத்திவைக்கக் கூடிய அரசாங்கமே நாட்டின் அவசர தேவையென்றும் குறிப்பிட்டுள்ளனர். இலங்கை அரசியலில் பரபரப்பு அடங்கினதும் இனி என்ன ஏற்படுமோ என்று மக்களிடையே கவலை அதிகரித்துள்ளது.

## தமிழ் எம். பி. க்கள்

சென்ற வருஷம் ஏப்ரல் மே மாதங்களில் தான் நாட்டில் வகுப்பு வெறியும் ரத்தக் களறியும் ஏற்பட்டது. அவை நடந்த ஒரு வருட காலத்துக்குள்ளாக எம். ஈ. பி. சபையில் பிளவு ஏற்பட்டு அது குலைய நேரிட்டதைப் பார்க்கிறோம்.

இந்த நெருக்கடியான சமயத்தில் பார்லிமெண்டிலுள்ள தமிழ் எம். பிக்கள்என்ன செய்யப் போகிறார்கள்? சமஷ்டிக் கட்சி எம். பிக்களை, கட்சித் தலைவர் கொழும்புக்கு அழைத்து கலந்து பேசியதாகத் தெரிகிறது.அரசாங்கக் கட்சியை ஆதரிக்குமாறு ஒரு எம். பி. வந்து கேட்டதாக ஒரு செய்தி கூறியது. தாங்கள் பிரதமரிடம் பேசவில்லைஎன்று திரு எஸ். ஜே. வி. மறுத்திருக்கின்றார். மற்ற தமிழ் எம்.பி. க்கள் எல்லாரும் நெல்லி மூட்டை அவிழ்ந்தது போல் தனித்தனியேசிதைந்து ஒற்றுமையில்லாமல் பிரிந்திருக்கிறார்கள். • முஸ்லிம் எம். பிக்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஒருமுகமாகத் தங்கள் சமூக பாதுகாப்புக்கான முறையில் காரியம் செய்கின்றனர். தமிழ் சமூகத்துக்குப் பெரிய சோதனை ஏற்பட்டுள்ள இப்போதும் கூட, தமிழ் எம். பிக்களிடையே ஒற்றுமையும், ஒத்துழைப்பும் ஏற்படவில்லை. இது பெரிய துரதிருஷ்டமாகும்.

வவனியா பிரதிநிதி, பார்ட்டி சபை தேர்தலில் மூன்று வனடுகளில் போட்டியிடுவதில் தமது கவனத்தைத் திருப்பி இருக்கின்றார். பார்லிமெண்ட் வேலையும் பொறுப்புமே எம். பிக்களுக்கதிகமுண்டு. அதுவும் சோதனைக்கு உட்பட்டுள்ள தமிழ் சமூகத்தை ஒன்றுபடுத்தி ஆக்க வழியில் பல முக்கிய வேலைகள் செய்யவேண்டியிருக்க,அரசியல் அனுபவம் மிக்க வவனியா பிரதிநிதி, பட்டின சபை தேர்தலில் மூன்றுவார்டுகளில் போட்டியிட்டு, தமது காலத்தையும் முயற்சிகளையும் வீணுக்கி வருவது தமிழ்சமூகத்தின் துரதிருஷ்டமாகும். தமிழ் சமூகத்தின் எதிர்கால தலைவிதி நிர்ணயிக்கப்படும் இச்சமயத்தில் தங்களின் பல பிரதிநிதிகளும் ஒன்றுபட்டு ஒத்துழைத்துத் தங்கள் நலவுரிமையைப் பாதுகாக்க கட்டுப்பாடான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், பழைய மனஸ்தாபங்களையும், வேற்றுமைகளையும் மறந்துவிட்டு, புதிதாக ஒத்துழைக்க முன்வரவேண்டுமென்றே தமிழ் பொதுமக்கள் ஆவலுடனும் கவலையுடனும் எதிர்பார்க்கின்றார்கள்.

# பூஜ்யம் தபால்

அறிஞர் ஸி. என். அண்ணத்துரை, எம். எல். ஏ.,
தி. மு. க. தலைவர்,
சென்னை.

அண்ண!

வணக்கம். சென்னை நகர சபைத் தேர்தலிலே தங்கள் கட்சி முதல்முதலாக முன்வந்து போட்டியிட்டு, பெரும் வெற்றி பெற்றதற்காக என் பாராட்டுகள். மேயர் தேர்தலிலும் தங்கள் கட்சி வெற்றிபெற்றதற்கு 'டபிள்' பாராட்டு.

இந்த வெற்றியின் பயனகத் தங்கள் கட்சியின் புகழ், டில்லிக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கு அப்பாலும் பரவி விட்டது. அடுத்த சட்டசபைப் பொதுத்தேர்தலில் தங்கள் கட்சியே வெற்றிபெற்றுத் தாங்கள் முதல்மந்திரியாகவும் வரக்கூடும் என்று காங்கிரஸ் வட்டாரங்களிலும்கூட (வெளியில் சொல்லமுடியாவிடினும்) அஞ்சப்படுவதாக அறிகின்றேன். மகிழ்ச்சி.

தங்கள் கட்சி ஈட்டிய இந்த வெற்றி, உண்மையில் தங்கள் அரசியற் கொள்கைகளுக்குக் கிடைத்த வெற்றியல்லவென்றும், காங்கிரஸ் ஆட்சியில் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அதிருப்திதான் இதற்குக் காரணமென்றும் சில அரசியல் வட்டாரங்களிற் சமாதானம் கூறப்படுகிறது. இது எப்படியாயினும், தங்கள் கட்சியின் வெற்றி, காங்கிரஸ் கட்சியை விழிக்கச்செய்து, அக் கட்சியிலுள்ள ஊழல்களை நீக்க ஓரளவாவது பயன்படுமாயின் இதுவும் பொதுமக்களுக்கு நல்லதாகுமல்லவா?

தங்கள் கட்சி இப்போது சென்னையில் இருமுனைப் போர்களில் ஈடுபட்டுள்ளதாக அறிகிறேன். ஒன்று, கோவையிலே சட்டசபைக் கூட்டம் உதகமண்டலத்தில் நடத்தப்படக்கூடாதென்று கூறி, உதகையில் நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தைப் பகிஷ்கரித்தது. (2) "ஆகாஷ் வாணி" என்று இந்திய ரேடியோவின் பெயரைச் "சென்னை வானெலி" என்று மாற்றவேண்டும் என்றும், "ஆகாச வாணி" என்ற பெயர் இருக்கும்வரை, அதில் பேச முடியாதென்றும் சென்னையின் புதிய தி. மு. க. மேயர் மறுத்துவிட்டது. புதிய மேயரின் பேச்சைக் கேட்க முடியாது பற்றி, இங்கு என்னைப் போல் பலருக்கு ஏமாற்றம்.

இவ்விரு விஷயமாகவும் எங்கள் இலங்கையிலே இருக்கும் நிலையை அறிய நீங்கள் மகிழ்ச்சியடையலாம். இந்தக் கோடை வெயிலிலும்கூட, எங்கள் பார்லிமெண்ட் கூட்டம் கொழும்பில்தான் நடைபெறுகின்றது. உலகின் பலபகுதிகளிலிருந்தும் பலர் எங்கள் நுவரேலியாவுக்கு வந்து கோடையைக் கழித்தாலும், எங்கள் எம். பி. கள் தியாகவுள்ளத்துடனே கொழும்பு வெயிலிலேயே வெந்து, பொதுமக்களுக்காகத் தங்கள் கடமையை நெற்றி வியர்வை நிலத்தில் விழச் செய்து வருகின்றார்கள், (2) இலங்கை ரேடியோவின் பெயரை "இலங்கை வானெலி" என்றே அழைக்கின்றோம்.

ஆனல் ஒன்று. கோடை வெயிலில் மூளை சரியாக வேலை செய்யாதென்றும், அதுதான் இலங்கையிலே வருஷாவருஷம் ஏப்ரல், மே மாதங்களில் நெருக்கடிகள் ஏற்பட்டு வருவதாயும் கோடையிலே பார்லிமெண்ட் கூட்டம் நுவரேலியா, கண்டி இவ்விடங்களில் நடைபெற்றால் குளிர்ச்சியானதும் தம் நிலையில் நிதானமாகக் காரியங்கள் செய்யலாமென்றும்' வருஷாவருஷம் பொதுமக்களின் மண்டைகளும் உடையாதென்றும் ஒரு கருத்து நிலவுகின்றது.

இதே சமயம் கொழும்பு ரேடியோவுக்கு "வானெலி" என்று பெயர்கொடுத்தாலும், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு இவ்விடங்களிலிருந்து கலைஞர்களை வரவழைக்கப் பணமில்லை என்று சாக்குக்கூறி, தமிழ்க் கலைஞர்கள் வாயில் மண் போடப் படுகின்றது. "ரேடியோ ஸிலோன்" என்று பெயர் இருந்தபோது, தமிழ்க் கலைஞர்கள் ஏராளமாக வந்து, வானெலி மூலம் கலைவிருந்து அளித்தனர்.

சென்னையில் நிலைமை முற்றிலும் வேறு என்பதை அறிவேன். என்றாலும் ஒரு சந்தேகம். முன்னர் "ஆகாஷ் வாணி" என்ற பெயர் மைசூர் ரேடியோவுக்கே இருந்தது. மைசூர் திராவிட நாட்டைச் சேர்ந்தது. மைசூர் வழங்கிய பெயரை, டில்லி ஏற்று, "ஆல் இந்தியா ரேடியோ" என்ற பெயரை மாற்றியது, மைசூருக்கு அதாவது திராவிட நாட்டுக்கு ஒரு பெருமையென்றும் கருதியிருந்தேன்.

தங்களது "ஆகாச வாணி" எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பிக்குமுன், தாங்கள் கன்னட மைசூர் தெலுங்கு ஆந்திரா, மலையாள கேரளம் முதலிய திராவிட நாடுகளைக் கலந்தீர்களோ? அங்குள்ள தி. மு. க. வுக்கு இந்த இயக்கம்பற்றிய கருத்து என்னவோ?

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு :-

இலங்கையிலுள்ள தி. மு. க. விடம் சென்னை தி. மு. க. வட்டாரம் பெரிதும் மனத்தாங்கல் கொண்டிருப்பதாயும், முதலில் கொள்கை விளக்கம் கேட்டுவிட்டு, பின்னர் இவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமா என்பதைப்பற்றி முடிவுசெய்யப்படலாமென்றும் ஒரு செய்தியைப் படித்தேன்.

இங்கே தி. மு. க. கட்சியிற் பிளவு ஏற்பட்டிருப்பின் அதில் வியப்பில்லை. பிளவில்லாத கட்சியே எங்கள் இலங்கையிற் கிடையாது. மேலும், "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்ற கோஷம் ஈழநாட்டுக்கு அவ்வளவு பொருந்தாதென்பதைத் தாங்கள்அறிவீர்கள். ஏனெனில் எங்களுக்கு வடக்கேஇருப்பது தாங்களும் தமிழ்நாடும்தான். மேலும் இங்கு எந்தத் திசையும் வளரவில்லை. வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு எல்லாமே தேய்ந்துவருகின்றன!

"பூ"

# 'வெசாக்' விசாரம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ங்களில் மாணவர்கள் கூட்டம் போட்டுப் போகின்றார்கள். திருக்குறள் போட்டிகள் நடாத்திப் பரிசுகள் வழங்குகின்றனர்.

ஆனல் வள்ளுவர் வாக்கின்படி நாம் நடக்கிறோமா என்று சிந்திக்கும் தமிழர் எவ்வளவு பேர்? கள்ளுண்ணக் கூடாது என்று கதறி இருக்கின்றார் அவர். ஆனல், கோவிலுக்குச் செல்லுகையிலும் கூட நம்மில் சிலர் குடித்துவிட்டுச் செல்லுகின்றோம்! அட முருகா! அடிபட்ட பின்பாவது, நாம், வள்ளுவர் வகுத்த நெறியிலே நமது வாழ்க்கையைத் திருத்திக் கொள்ள வேண்டாமா? ஒரு குறளின் படியாவது நடக்க வேண்டாமா? தீண்டாமைத் தீமையை ஒழிக்க முன் வந்த தலைவர்கள், வள்ளுவரும், காந்தி அடிகளும் காட்டிய வழியில் மது விலக்குப் பிரசாரத்தில் இனியாவது தீவிரமாக ஈடுபடுவார்களா?

—ஐயாறன்

# இந்தியா பாகிஸ்தான் தகராறு

[7ஆம் பக்கத் தொடர்ச்சி]

சென்றமாதம் இந்தியாவின் கான்பெரா ஜெற் விமானமொன்றைப் பாகிஸ்தான் சுட்டு வீழ்த்தியதால் இந்தியா பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு நஷ்ட ஈடு தருமாறு ஓர் அறிக்கையை அனுப்பியிருந்தது. பாகிஸ்தான் அரசாங்கம் நஷ்ட ஈடு வழங்க மறுத்திருப்பதோடு அத்துமீறிப் பாகிஸ்தான்மீது பறந்து தகாதமுறையில் புகைப்படங்களை எடுக்க முயற்சித்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியது நியாயமான செயலாகும் எனவும் வாதிக்கின்றது.

## ஒரிசாவில் புதிய அரசாங்கம்

திரு. ஹரி கிருஷ்ணமேதாப் தலைமையில் கடமையாற்றிவந்த ஒரிசா இராச்சியத்தின்காங்கிரஸ் மந்திரிசபை பதவியிலிருந்து விலகியிருக்கிறது. அடுத்த சில நாட்களில் புதிய காங்கிரஸ்—கனதந்திர பரிஷாத் கூட்டு மந்திரிசபை பதவியேற்குமெனத் தெரிகின்றது.

## புதிய நிலக்கரிப்படிவுகள்

மத்திய பிரதேச இராச்சியத்தில் புதிதாக நிலக்கரிப் படிவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என மண்ணெய் மந்திரி திரு. கே. டி. மாளவியா லோக சபையில் 6-5-59 இல் தெரிவித்தார்.

நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

ஏ.

கே.

எஸ்.

அன்

சன்ஸ்



நகை

மாளிகை

கன்னதிட்டி, யாழ்ப்பாணம்.

மாதர் பகுதி

# தென் சுமத்திராவில் நிலவும் விவாக முறை

— 'ஆர்சீவி' —

தென் கிழக்காசிய நாடுகளுள் நடுநாயகமாக விளங்கும் சுமத்திரா தேசத்தில் பக்கத்து நாடுகளின் போர்வாடை இன்னும் வீசாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியதே. சுமத்திரா தேசத்தின் தென் பாகம் பாலெப்பாங் நகரைத் தலைநகராகக் கொண்டது. இங்கே இஸ்லாமிய பண்பாட்டின் இதமளிக்கும் பழக்கவழக்கங்கள் மக்களின் வாழ்வை மலரச் செய்கின்றன. இங்குள்ள மக்கள் இந்தோனஷிய மொழியையே பேசுகின்றார்கள். இந்நாட்டில் நிலவிவரும் விவாக முறைகள் பழமையிற் கால் கொண்டவை.

* * *

தென் சுமத்திராவிலுள்ள பாலெம்பாங் என்னும் நகரில் இந்தோனேஷியா தேசத்திலுள்ள பல்வேறு பிரிவுகளைப் போல் புராதன பழக்க வழக்கங்கள் சில மங்கி மறைந்து வருகின்றன. ஆனல் காலம் எனும் கூற்றத்திலிருந்து தப்பிச் சில புராதன பழக்க வழக்கங்கள் இன்றும் நிலவி வருகின்றன. இந்தப் பழக்க வழக்கங்கள் தென் சுமத்திரீய சமூக அமைப்பின் அத்திவாரக் கற்களாக இன்று கருதப்படுகின்றன. இவைதாம் பண்டைக் கால முறைப்படி காதல்கொள்வதற்கும் விவாகம் செய்வதற்கும் தென் சுமத்திரீய மக்கள் ஏற்படுத்திய கிரியைகளும் சடங்குகளுமாகும்.

### வைதீக மனப்பான்மை

இந்தோனேஷிய மக்கள் "ரொக் அன்ட் ரேல்" யுகத்தில் வாழ்ந்தாலும், அனேகமானோர், ஆண் பெண் உறவைப் பற்றி வைதீகமான கருத்துக்கள் கொண்டுள்ளார்கள்.

ஓர் இளைஞன் மணப்பருவமெய்தியவுடன் அதாவது அவனுக்கு இருபது அல்லது இருபத்தொரு வயது ஆகியவுடன் அவனுக்குப் பொருத்தமான ஒரு பெண்ணைத் தேடுவதில் அவன் பெற்றோர் முனைந்துவிடுகிறார்கள். அனேகமாக இவனுக்கு வரப்போகும் பெண்ணை பதினேழு அல்லது பதினெட்டு வயதிலேதான் விரும்புவார்கள். இந்த முறையில் இரண்டு வித விதிகள் அனுசரிக்கப்படுகின்றன. ஆதிகாலம் தொட்டு பெற்றோர்கள் அல்லது அவனது கிட்டிய உறவினர்கள் விவாகம் நிச்சயிக்கும் விதி இன்றும் இருந்து வருகிறது. ஆனல் சில வாலிபர்கள் பெண் தேடும் முயற்சியில் தாங்களே முயன்று விடுகிறார்கள். இந்த முறையும் புராதன பழக்க வழக்கங்களிலொன்றாகத் தானிருந்துவருவது குறிப்பிடத்தக்கது.

### காதல் விஷயம்

ஒரு வாலிபன் தனக்குப் பிடித்த பெண்ணைத் தேர்ந்தெடுத்தாலும், அவன் அவளுடன் பழகுவதையோ அல்லது காதல்புரிவதையோ அவன் பெற்றோரோ அல்லது உறவினரோ சம்மதிக்க மாட்டார்கள். இதனை அவன் விரும்பினல் அவர்களின் கண்காணிப்பில் தான் செய்யவேண்டும். ஏனென்றால் பெண்ணைத் தேர்ந்தெடுப்பதில் சில வாலிபரின் கண்கள் தங்கள் வேலையைச்செய்ய மறுத்துவிடுகின்றனவாம். இதற்கு அவர்கள் கூறும் காரணம் " காதலுக்குகண்ணில்லை"யென்பதுதான்.

பெண்ணைந் தேர்ந்தெடுக்கும் முயற்சியென்றால் அது ஒரு சுலபமான காரியமல்ல. முதலாவதாகப் பையனின் பெற்றோர் பெண்ணின் அந்தஸ்து, குலம், கோத்திரம் போன்ற பலவகை நுணுக்கங்களை ஆராய்வார்கள். பின் அண்டை அயலாருடன் அவன் எப்படிப் பழகுகிறான், அவர்களுக்கு இவனிடம் நன் மதிப்பிருக்கிறதா வென்பதையும் பையனின் பெற்றோர்கள் ஆராய்ந்து அறிவார்கள். கடைசியாக அவனின் வீட்டுப் பழக்கவழக்கங்களையும் விருந்தோம்பும் பண்பையும் அன்னியர்களை உபசரிக்கும் முறையையும் நன்கு கவனிப்பார்கள். இதை எவ்வாறு பையனின் பெற்றோர் செய்துவிடுகிறார்களென்று வாசகர்கள் ஆச்சரியப்படலாம். இதை அவர்கள் தங்கள் தூரத்து உறவினர்கள் மூலம் அறிந்து விடுகிறார்கள். சிலசமயம் பெண்ணின் பெற்றோர்களுக்கு ஏற்கனவே அறிவித்துவிட்டும் இவர்கள் தங்கள் பரிசோதனைகளை நடாத்துவார்கள். இந்தப் பரிசோதனைகளிலே ஒரு பெண் தேர்ச்சியடைந்தால்தான் விவாகப் பேச்சுகள் ஆரம்பமாகும்.

### விவாகப்பேச்சு

இந்த விவாகப் பேச்சை, பையனின் தாயார் உட்பட வேறு இரண்டு மூன்று பெண்கள் பெண்ணின் வீடுசென்று ஆரம்பிப்பார்கள். பையனுடைய வீட்டாரின் வருகை பற்றிப் பெண்வீட்டார்க்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே அறிவித்து விடுவார்கள். பெண்வீட்டிற்குப் பையன் வீட்டார் வரும்பொழுது கையுறையாக ஒரு கூடையில் மாவும் சீனியும் கொண்டு வருவார்கள். பெண்வீட்டாரிடம் பையனின் வீட்டார் "விவாக உத்தேசத்தை" சமர்ப்பிப்பார்கள். இந்த விவாக உத்தேசம் கவி வடிவில் உவமைகள் உபமானங்கள் நிறைந்த அடுக்கு மொழியில் சமர்ப்பிக்கப்படும். பெண் வீட்டார் இதை ஏற்றுக் கொண்டபின் தான் உண்மையான விவாகப் பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

### சீதனம்

இந்தப் பேச்சுகள் அனேகமாக, விவாகத்திற்கு முன் கொடுக்கும் சீர்வரிசைகள் சீதனம் இவை பற்றியே வட்டமிடுகின்றன. இக்காலத்திலே ஒரு பையனுக்குக் கொடுக்கும் சீதனத்தின் தொகை இருபத்தையாயிரம் ரூபாய்.

அடுத்ததாக இந்த விவாக ஒப்பந்தம் நிதார்த்தப்படுத்தப் படுகிறது. இதற்குப்பின் சில நாட்கள் சென்றபின் விவாகம் நடைபெறுகிறது.

இந்தமுறை பையன் வீட்டிலிருந்து பெண்வீடு செல்லும் கோஷ்டியினருடன் ஆண்களும் கலந்து விடுகின்றனர். கையுறையாக, மாவும் சீனியும் உட்பட, சமைக்கும் தளபாடங்களும் சமையலுக்கு அத்தியாவசியமான பொருள்களான உப்பு, புளி ஆகியனவும் கொண்டுவருகின்றனர். இந்தத் தருணத்தில் இரு வீட்டாரின் பேச்சுக்களெல்லாம் எப்பொழுது விவாகம் செய்வது? எப்படிச் செய்வது? என்பதைத் தான் சுற்றியிருக்கும். இந்த நிலையில்தான் மணப்பெண் தன்னுடைய எதிர்காலக் கணவனின் தாய் தந்தையரின் கைகளை முத்தமிடுகிறாள்.

(அடுத்த இதழில் முடியும்)

# நமது நூல் நிலையம்

**பரீட்சித்தலும் புள்ளியிடுதலும்** ஆசிரியர்: ச. சிதம்பரப் பிள்ளை, பி. ஏ., பி. எஸ்ஸி. **வெளியீடு**: ஸ்ரீலங்கா புத்தக சாலை, 234, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம், **விலை ரூ.3.**

அரசினரால் நடத்தப்படும் பரீட்சைப்பேறுகள் சில சமயங்களில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிய ஏமாற்றத்தைக் கொடுக்கின்றன. ஒருமுறை நடைபெற்ற பரீட்சையில் விசேஷ சித்திபெற்ற அநேக மாணவர்கள் மற்றொருமுறை பரீட்சையில் பங்குபற்றிச் சித்தியெய்தத் தவறுகிறார்கள். இப்பிழைக்கு மாணவர்களுக்கு ஓரளவு பங்குண்டென்றாலும், பெரும்பங்கு பரீட்சிப்பவர்களையும் புள்ளியிடுபவர்களையும் பொறுத்ததாகும். புள்ளியிடுபவர்கள் முறைக்கு முறை வெவ்வேறு விதமாக மதிப்பிடுவதனாலேயே பரீட்சை முடிபுகள் ஏமாற்றத்தைக் கொடுக்கின்றன.

இப்பாரதூரமான கஷ்டத்தினின்றும் நீங்குவதற்குப் 'பரீட்சித்தலும் புள்ளியிடுதலும்' என்றநூல் சிறந்த வழிகாட்டியாகும். திறமையுள்ள மாணவர்கள் ஏன் சித்தி யெய்தவில்லை என்பதையும் திறமையற்ற மாணவர்கள் எப்படிச் சித்தி யெய்துகிறார்கள் என்பதையும் இந்நூல் நன்கு விளக்குகின்றது.

பொதுவாக எல்லா ஆசிரியர்களும் சிறப்பாகப் பரீட்சிப்பவர்களும் புள்ளியிடுபவர்களும் இந்நூலைக் கற்றுக் கொண்டால் பரீட்சைகளிலும் அவற்றின் முடிபுகளிலும் காணப்படும் பெருந்தவறுகளில் பெரும் பகுதி தானே நீங்கிவிடும்.

இந்நூலாசிரியர் ஆசிரிய உலகத்தில் ஒரு நட்சத்திரமாவர். அவர்களின் விஷய ஆழம், கருத்தை வெளிப்படுத்தும் ஆற்றல், சிந்தனைச் செம்மை என்பன பாராட்டத்தக்கவை. பரீட்சித்தலும் புள்ளியிடுதலும் சம்பந்தமான பல பேரறிஞர் எழுதிய நூல்களைக் கற்றுத்தம் மதிநுட்பத்தால் இந்நூலை ஆசிரியர் எழுதினர். உதாரணங்களைக் காட்டி விஷயங்களை விளக்குவதும் தெளிவான தமிழில் எழுதுவதும் சிந்தனையின் பலனை தத்துவ முடிபும் வாசகர்களை ஈர்க்குந்தன்மை வாய்ந்தன. எந்தக் கடினமான விஷயங்களையும் இலகுப் படுத்தித் தமிழால் தெளிவாக எழுதலாம் என்பதை இந்நூலைப் படித்தவர்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

பரீட்சைகளைத் தரப்படுத்துதல், புள்ளிகளைப் புடம்பண்ணுதல் முதலிய அதிகாரங்கள் இந்நூல் கல்வியுலகிற்கு இன்றியமையாதன என்பதைக் காட்டுக்ன்றன.

இந்நூலாசிரியர் இன்னும் பல நூல்களை எழுதித் தமிழன்னைக்குச் சிறப்புச் செய்ய வேண்டும்.

செ. துரைசிங்கம்

# 'ஈழநாடு' சிறுவர் பகுதி

- **ஈழநாடு சிறுவர் பகுதியில்** ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.
- உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 30-5-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினல் போதுமானது.
- ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதி**க்கு உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.
- **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**(23-5-59)**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

**ஈழநாடு சிறுவர் பகுதி**யில் என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்.......................................................

விலாசம்...............................................

...............................................

...............................................
கையொப்பம்

...............................................
பெற்றோர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது.............

இங்கே வெட்டவும்

# சிறுவர் பகுதி

## காளேயும் குதிரையும்

ச. இராமச்சந்திரன் [பதிவு எண், 19]

முருகன் என்பவனிடம் ஓர் ஒற்றை மாட்டுவண்டி இருந்தது. அவன் வசித்த ஊர் மக்கள் எல்லோரும் கொல்லர்கள். தினமும் வாள், வேல், அம்பு, கேடயம், கவசம் போன்ற போர்க்கருவிகளே ஏராளமாக ஆயிரக்கணக்கில் செய்து குவிப்பார்கள். அப்படி அவர்கள் செய்து குவிப்பதை முருகனின் ஒற்றை மாட்டுவண்டியில் ஏற்றுவார்கள். அவன் அதை மூன்று மைல் தூரத்தில் இருக்கும் தலைநகருக்கு எடுத்துச் செல்வான். தினமும் குறைந்தபட்சம் ஐந்து முறைகளாவது அவன் வண்டி தலைநகருக்கும் ஊருக்கும் இடையில் பிரயாணஞ்செய்யும்.

அவன் வண்டியை இழுத்து வந்த காளே மிகவும் சோம்பேறி. அதற்கு வண்டியை இழுக்க விருப்பமே இல்லை. ஒவ்வொரு சமயத்திலும் தொந்தரவு கொடுக்கும். ஆனல், முருகனின் சாட்டை அதை அப்படிச்செய்ய அனுமதிப்பதில்லை. "கடவுளே, நான் ஏன் மாடாகப் பிறந்தேன், இந்த முருகன் அசையாது வண்டியில் உட்கார்ந்து என்னை விரட்டுகிருனே, நான் தானே உழைக்கின்றேன், அவன் மட்டும் உழைக்காமல் உண்கிருனே" என்று கடவுளை நினைந்து கதறிக் கண்ணீர் வடித்துவந்தது காளே. முருகனின் வண்டி தினமும் அவ்வூர்க் கோட்டைவழியாகத்தான் போகும். கோட்டையைக் காவல்காக்கும் வீரன் ஒருவனிடம் ஓர் அராபியக் குதிரை இருந்தது. அதன்மீது ஏறிக்கொண்டு அவன் அரண்மனையைச் சுற்றிச் சுற்றி வந்து காவல்காப்பான். காலையிலிருந்து மாலைவரை அரண்மனையைச் சுற்றி வருவதால் குதிரைக்குக் கால்கள் வலிக்கும். வீரன் குதிரையைக் கோட்டைக்கு வெளியே கொண்டு போகமாட்டான். அதனல் குதிரைக்குக் கோட்டைக்கு வெளியே என்ன நடக்கிறதென்பது தெரியாது. ஆனல், பிறர் கூறுவதைக் கேட்டு வெளியே சென்று பார்க்க வேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று.

அதுவுமல்லாமல் அதற்கு உழைக்கப் பிடிக்கவே இல்லை. எந்நேரமும் என்மீது ஒருவன் உட்கார்ந்து கொண்டிருக்கிருன். என்னை விரட்டுகிருன் என்று எண்ணிக்கொண்டே இருந்தது.

"சே, இது என்ன உழைப்பு.........—" என்று அலுத்துக்கொண்ட குதிரைக்கு ஒருநாள் முருகனின் வண்டி மாடு தென்பட்டது.

"ஆகா, இந்த மாட்டுக்கு என்ன துன்பம் இருக்கின்றது! கஷ்டம் இல்லாமல் இந்த வண்டியை எப்படி இழுத்துக் கொண்டு ஓடுகின்றது. ஒரு நாளைக்கு ஐந்துமுறை தானே இதற்கு இப்படிச் செய்யவேண்டும். அதோடு அதன் உழைப்பு முடிந்துவிடுகின்றது. ஆனல் எனக்கு நாள் முழுவதும் உழைக்கவேண்டியிருக்கின்றதே. நான் அந்த மாடாகப் பிறக்கும்படி ஏன் அந்தக் கடவுள் அனுக்கிரகிக்கவில்லை?" என்று கடவுளை நொந்து கொண்டது குதிரை.

அதேசமயம் முருகனின் மாடும், "சே, இது என்ன வாழ்வு, நான் இந்தக் குதிரையாகப் பிறந்திருக்கக்கூடாதா. நாள்முழுவதும் நான் வண்டியை இழுக்கிறேனே" என்று கடவுளை நொந்துகொண்டது. அப்பொழுது, குதிரையில் இருந்த வீரன், வண்டியில் இருந்த முருகனை நோக்கி சுண்ணம்பு கேட்டான். முருகன் சுண்ணும்பைக் கொடுத்தான். இருவரும் சிறிதுநேரம் தங்கள் வாகனங்களை விட்டுக் கீழே இறங்கிப் பேசினர்கள்.

அந்த இடைவேளையில் யாருக்கும் தெரியாமல் கடவுள் தோற்றினர். ஆனல் அவர் உருவம் குதிரைக்கும் மாட்டுக்கும் மட்டும் தெரிந்தது. கடவுள் குதிரையை நோக்கி "உன்னை மாடாக மாற்றிவிடுகிறேன், சம்மதமா?" என்ருர்.

குதிரை மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டிச் சம்மதம் தெரிவித்தது.

கடவுள் மாட்டை நோக்கி "உன்னைக் குதிரையாக மாற்றிவிடுகிறேன், சம்மதமா?" என்ருர்.

மாடு ஆனந்தத்துடன் சம்மதித்தது.

கடவுள் கையைக்காட்டிவிட்டு மறைந்தார். உடனே குதிரை மாட்டின் உடலிலும், மாடு குதிரையின் உடலிலும் போய் மாறிக்கொண்டன.

முருகனும் வீரனும் தங்கள் ஆசனங்களில் ஏறிக்கொண்டார்கள். குதிரை மாட்டின் உடலில் வண்டி இழுத்தது. சிறிதுநேரம் சிரமம் தோன்றவில்லை. பின்புதான் "இதென்ன கழுத்து இப்படி வலிக்கிறதே" என்றது. ஆனல் ஒரு முறைக்கு மேல் வண்டியை இழுக்க முடியவில்லை. ஆனல் முருகன் விடவில்லை, சாட்டையால் விளாசிவிட்டான். போதாததற்கு அன்று நல்ல மழை. முருகன் மழையிலேயே கடுமையாக வேலை வாங்கிவிட்டான்.

குதிரை, பாவம் கண்ணீர் விட்டு அழுதது. "நம்மை ஒரு நாளும் பழைய எஜமான் மழையில் நனைய விடமாட்டாரே" என்றுபழையஎசமானை நினைத்து வருந்தியது. "கடவுளே, உழைக்காமல் உண்ண முடியாது. என்னை மன்னித்து விடுங்கள்" என்று கடவுளை வேண்டிக்கொண்டது குதிரை.

இங்கே இவ்வாறிருக்க, மாடு குதிரையாக மாறியதும் அதன்மீது ஏறி அமர்ந்துகொண்டு விரட்டினன் வீரன். அதற்கு முதலில் இன்பமாக இருந்தது. ஆனல், நேரம் ஆக ஆக அதற்கு முதுகு வலித்தது. இவன் நம்மை ஒரு வினடி கூட உட்கார விடமாட்டேன் என்கிருனே என்று அழுதது மாடு. மாட்டின் துரதிர்ஷ்டம் ஆக இருக்கவேண்டும். ஏனென்ருல் அன்று யாரோ ஒருவன் அரண்மனையிலிருந்து பொருள்களைக் கவர்ந்துகொண்டான். அவனைக் கண்ட காவலன் அவன்பின்னேமாட்டைத்துரத்தினன். அவனையும் சுமந்து கொண்டு ஓடுவது மாட்டிற்குச் சிரமமாக இருந்தது. அது பழைய எஜமான் முருகனை நினைத்து அழுதது. அவன் ஒரு நாள்கூட அதை வேகமாக விரட்டவில்லை. மெதுவாகப் போனலே போதும் என்று விட்டுவிடுவான்.

"கடவுளே! என்னை மன்னித்துவிடு. உழைப்பின் உயர்வை உணர்ந்துகொண்டேன்! உழைத்தால்தான் இன்பம். எல்லாப் பணிகளிலும் துன்பம் இருக்கத்தான் இருக்கிறது" என்று கதறிக் கண்ணீர் விட்டது மாடு. அடுத்தநாள் முருகனும் வீரனும் வெற்றிலைக்குச் சந்தித்தார்கள். அப்பொழுது குதிரைக்கும் மாட்டுக்கும் முன்னே கடவுள் தோன்றினர்.

அவரைக் கண்டதும் மாடும் குதிரையும் மன்னிப்பு வேண்டிக் கதறின. கடவுள் மனம் இரங்கி குதிரையைக் குதிரையாகவும், மாட்டை மாடாகவும் மாற்றி மறைந்தார். உழைப்பின் உயர்வை உணர்ந்த இரண்டு பிராணிகளும் தத்தம் பணியை ஆனந்தமாகச் செய்தன.

செல்வச் சிறுவர்களே!

அறிஞர் வரலாறு பற்றி இப்பகுதியில் வெளிவரும் கதையைப் பாராட்டிக் கடிதங்கள் வந்துள்ளன. எனது மருமக்களும் அறிஞர்களாக வரவேண்டும் என்பதே எனது ஆசை.

இதற்காக நீங்கள் இப்பொழுதிருந்தே முயல வேண்டும். அறிவைப் பெருக்க நல்ல நூல்களைப் படியுங்கள். ஊக்கமாக உழையுங்கள்.

சின்னமாமா

## வந்திடுங்கள்!

— அழகனர் —

(பதிவு எண்: 127)

வெள்ளைநிறைக் கொக்கினமே
வீணுக அலையாதீர்
உள்ளபடி உங்களுக்கு
உண்மையைக் கூறிடுவேன்

பெரிய மீன்வகைகள்
புரண்டு விளையாடும்
அரிய குளக்கரையை
அறிந்திட வந்திடுங்கள்


பட்டெனும் துப்பாக்கிப்
பீடை வாராத
குட்டை குளக்கரைகள்
கூறுவேன் வந்திடுங்கள்

காத்துத் தவம்இருந்து
கால்கள் வலியெடுக்கும்
கூத்து இனிவேண்டாம்
கூறுவேன் வந்திடுங்கள்!

## அறிஞர்கள் வரலாறு : III அணுச்சக்தியின் சிற்பி







**நோபல் பரிசு :—** 1938 ஆம் ஆண்டில் பேர்மி, தனது ஆராய்ச்சிகளின் பயனகப் பிரகிருதி சாஸ்திரத்தில் நோபல் பரிசு பெற்ருர். அணுசக்தி பற்றியும் அணுமையம் பற்றியுமே அவர் தனது ஆராய்ச்சிகளை நடாத்தினர்.

**பிரயாணம் :—** நோபல் பரிசு பெற்றதும், பேர்மியும், அவரது மனைவி மக்களும் அமெரிக்காவுக்குக் கடற் பிரயாணஞ் செய்தனர். நியூயோர்க்கிலுள்ள கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் பதவியொன்றை பேர்மி ஏற்றுக் கொண்டார். முஸோலினியின் சர்வாதிகார ஆட்சியில் இத்தாலியில் வாழ்க்கை மிகவும் கடினமானதாகவிருந்தது. பேர்மி சமாதானத்தையே விரும்பினர்.

**புகலிடம் :—** பேர்மி அமெரிக்காவிற்கு வந்த சில காலத்துள், இரு ஜேர்மன் விஞ்ஞானிகள் அணுமையம் பிளவுபடுத்தக் கூடியது என்னும் உண்மையைப் பரீட்சார்த்த ரீதியாகக் கண்டுபிடித்தனர். இதைக் கேள்விப்பட்ட பேர்மி, தானும் பரீட்சைகள் செய்து அவ்வுண்மையை நிரூபித்தார். இவ்வுண்மை உலகிற்கு எத்தனை பயங்கரமான விளைவுகளை உண்டாக்கக் கூடுமென்பதை அவர் அறிந்தார்.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு இலக்கமும்

201. அ. சி. யோகேஸ்வரன், 29, கல்லூரிவீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
202. ம. இரத்தினசபாபதி, 145, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
203. என். அரசரெத்தினம், புது டிஸ்பென்சரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.
204. வே. பொன்னம்பலம், சாவகச்சேரி வடக்கு, மீசாலை.
205. சு. சரத்சந்திரேஸ்வரி பணியப்பின்னக்கட்டை, இடல்காசின்னை.
206. மு. கார்த்திகேயன், 20, கொழும்புவீதி, அப்புத்தளை.
207. ஆர். மல்லிகாதேவி, 15, பழையவீதி, பலாங்கொடை.
208. இ. வனஜா ருக்மணி, 32, உக்குவத்தைவீதி, இறக்குவானை.
209. ஏ. ஆர். எம். நௌபர், 152, நாகலகம் வீதி, கொழும்பு.
210. க. பால்ராஜ், 60, சூ வீதி, கொழும்பு 13.
211. ச. பத்மநாதன், கிறீஸ்தவக்கல்லூரி, அச்சுவேலி,
212. கே. எஸ். சித்திரவேலு, வேலணை மேற்கு, வேலணை.
213. இளம் விழியன், 11/85, மாச்சம் பாளையம், சுந்தராபுரம் அஞ்சல் கோவைமாவட்டம் தென்னகம், தமிழ்நாடு.
214. யோன். ரி. கே. வி. மகேசுவரன், அர்ச். மரியநாயகி, கல்லூரி மத்துகாமம்.
225. கு. சித்தார்த்தன் மே/பா கே. ரி. சம்பந்தன் திருநெல்வேலி தெற்கு யாழ்ப்பாணம்.
216. ஐ. சிவலிங்கம், 45/2, பாணுங்குளவீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.
217. மா. கணேஷ், நிற்சாமம், சங்கானை,
218. சி. மருநீக்கியார், மே/பா எஸ். சிவபெருமான், வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை.
219. நா. நிர்மலகாந்தன், 7, சொய்சாகலாவீதி, நாவலப்பிட்டியா.
220. வ. ஈஸ்வரதேவி, மே/பா, ந. முருகேசு வல்லிபுரம் ஒழுங்கை, பருத்தித்துறை.
221. ஆர். வேந்தன், சாந்தினிகேதன், யாழ்ப்பாணம்.
222. ச. சரோஜினிதேவி, 'ஆனந்தகிரி' அனலைதீவு.
223. க. ஆறுமுகம், 'இரஞ்சிதா' மீசாலை.
224. எம். ஜி. தங்கராமன், இந்துக்கல்லூரி, சாவகச்சேரி.
225. சு. கணேசசெல்வம், போயிட்டி, காங்கேசன்துறை.
226. ம. சுப்பிரமணியம் 142, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
227. மணிமொழி 86, பருத்தித்துறைவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
228. இரா. சிவநேசன், மே/பா சி. இராசப்பா, ஸ்ரேசன்வீதி, கொக்குவில்.
229. மு. அப்துல்காதர், 20, உலாட்வீதி. பதுளை.
230. க. அம்பிகைபாகன், மணற்பிட்டி, காரைநகர்.

சிறுகதை

# நாகரிகப் பொய்!

மூலம்: சுதர்சன் — தமிழாக்கம் "சாம்பவி"

ஒரு நாள் மதி மயக்கும் மாலை நேரத்திலே பொய்யுருவம் புனைந்து கொண்டு பொய் மனிதனை அணுகியது.

அந்தப் பொய் கறுப்பாயிருந்தது; குரூரமாயிருந்தது! அதற்குக் கணக்கற்ற வாய்கள் வேறு இருந்தன. அது வாய் திறந்து வார்த்தையாடும்பொழுதெல்லாம் தீய சொற்களே வெளிவந்தன.

'நண்பா! நீ எனக்கு உன் நட்பைத் தா. நான் உனக்கு என் நட்பைத் தருகிறேன். நீ என் பேச்சைக் கேட்டு என்னுடன் நட்புரிமை பாராட்ட முன் வந்தால், நான் உனக்கு ஒரு உறுதி மொழி அளிக்கிறேன். நீ உன் அக்கம்பக்கத்தார்களிடையே தலை சிறந்து விளங்குவாய்; தலை நிமிர்ந்து செல்வாய். உன்னை யாராவது எதிர்த்தால் அவர்கள் கழுத்து உன் கையில் வபையாகச் சிக்கித் தவிக்கும். உன்னை வெற்றிகொள்ள ஒருவராலும் ஆகாது. பூமியிலே புல்லைப் போல் நீ தலை தூக்கி வளர்வாய். பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாய் என்று சொல்லும் முதுமொழிக்காவது ஒரு முடிவு இருக்கிறது. அதனால் நான் அப்படி ஆசீர்வதிக்கமாட்டேன். தொற்றுநோயைப்போல் தழைந்து வாழ்வாய் என்றே சொல்வேன். என் சொல் நூற்றுக்கு நூறு தவருமல் பலிக்கும்!' என்று அது மனிதனை நோக்கிக் கூறிற்று.

"அதுசரி முதலில் நீயார்? இந்த உலகத்தில் உனக்கு என்ன வேலை? என்று விளங்கச் சொல். அப்புறம் நாம் நட்பு உறவு பூணுவதைப்பற்றிச் சொல்கிறேன்!" என்ருன், அது பேசிய பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த மனிதன்.

பொய் உண்மை பேசிற்று. "நான்தானே? என் பெயர் பொய் என்பது. நண்பர்களுக்கு உபகாரம் செய்வது ஒன்றே என் வேலை. காரியம் கெடாமல் ஒரு காரியத்தை எப்படியாவது நிறைவேற்றி வைக்கும் வித்தையை நான் நன்கு கற்றுத் தேர்ந்திருக்கிறேன். என்னோடு பழகிப் பார்த்தால் என் திறமை உனக்குப் புலனாகும்!" என்றது.

பொய்யின் இந்தப் பதிலைக் கேட்ட மனிதனுக்கு அதன் முகத்தைப் பார்க்கக் கூடப் பிரியம் இல்லை. எனவே, தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு, "வேண்டாம் உன் சகவாசம், என் முன் நில்லாதே, போ! என் நட்பை நான் உனக்கு அளிக்க முடியாது. அதற்கு வேறு ஆளைப்பார்!" என்று கூறிக் கடிந்து அனுப்பி விட்டான்.

சில நாட்கள் சென்றன.

நாகரிகத் தோற்றம் பூண்டு நாகரிகம் மனிதனைப் பார்க்க வந்தது:

நாகரிகத்தின் முகத்திலே நல்ல களையிருந்தது; நேர்த்தியான வழுவழுப்பு இருந்தது! பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று எண்ணக்கூடிய அளவுக்கு அழகு தவழ்ந்துகொண்டிருந்தது. பேச்சில் தேனையும் சர்க்கரையையும் கலந்து பதமாக்கிய பாகின் இனிமை தாண்டவமாடியது. அது வாயைத் திறந்து பேசும்பொழுதெல்லாம் கேட்போரின் இருதயத்திலே இன்பம் பொங்கிப் பெருகி வந்தது.

அது மனிதனைப் பார்த்து, "என் அருமை நண்பா! என்னுடன் நட்புரிமை பாராட்டுவதாகக் கை அடித்துக் கொடு. அப்புறம் என் சக்தியைப்பார். உலகத்து மக்களின் மத்தியிலே நீ மிக உயர்ந்து விளங்குவாய். உலகத்தாரின் ஆசனங்களைக் காட்டிலும் உன் ஆசனம் உயர்ந்து அரியாசனமாக விளங்கும். நீ போகும் பாதை உலகத்து மக்கள் போகும் பாதையைக் காட்டிலும் விஸ்தாரமானதாகவும் வெளிச்சமுள்ளதாகவும் விளங்கும். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்பதுபோல் உலகத்து மக்கள் உன்னையே பின்பற்ற முற்படுவர். உன் புகழ் ஓங்கி உலகெல்லாம் வளரும். இதில் சிறிதும் ஐயம் இல்லை!" என்றது.

"அது இருக்கட்டும். முதலில், நீயார்? இந்த உலகத்தில் உனக்கு என்ன வேலை? என்பதை விளங்கக் கூறு. அப்புறம் நான் என் முடிவைக் கூறுகிறேன்!' என்று அதன் பேச்சில் மயங்கிய பொழுதிலும் மனிதன் அறிவை இழக்காமல் கேட்டான்.

நாகரிகம் வெகு நாகரிகமாகவே நாசூக்கான பதில் அளித்தது. "என்னை நாகரிகம் என்பார்கள். நாகரிகம் தெரிந்தவர்களிடையே தான் நான் வாசம் செய்கிறேன். அவர்களிடையே காணப்படும் குன்று குழிகளையும் இட்டு நிரப்பிச் சமமாக்கும் கைங்கரியத்திலே நான் ஈடுபட்டிருக்கிறேன். அவர்கள் போகும் பாதையிலே விளக்கு ஏற்றி வைக்கும் பணியையும் நான் ஏற்றிருக்கிறேன். எவனொருவன் என்னைத் தன்னுடையவனாக்கிக் கொள்கிருனே, அவனை இந்த உலகமும் தன்னுடைய வனாக்கிக் கொள்கிறது. இது உலகமறிந்த உண்மை!" என்றது.

அந்தப் பதிலில் மயங்கிய மனிதன் கை நீட்டி நாகரிகத்தின் நட்புரிமையை வேண்டினான். "நண்பா! உன் வரவு நல்வரவு ஆகுக! நான் உன் நட்பை விரும்பி ஏற்றுக்கொள்கிறேன். நீ என்னுடனேயே இரு. என் பாதையைச் செப்பனிட்டுப் பிரகாசமுள்ளதாக ஆக்கு. உலகத்தில் உயர்ந்து வாழ்பவனாகவும் தலை சிறந்து விளங்குபவனாகவும் என்னைச் செய்யவேண்டிய பொறுப்பையும் நீயேதான் ஏற்றுக்கொள்ளவேண்டும்!" என்ருன் இதைக் கூறியவன். நட்புரிமை கொண்டதற்கு அடையாளமாக அதை இறுகத்தழுவி இன்புற்ருன்.

அன்று முதல் நாகரிகம் அவனுடனேயே காதலாயிற்று. மனிதனும் அதற்குத் தன் மதிப்பற்ற அன்பை அளித்தான். அதை ஒரு கணம் கூடத் தன்னைவிட்டுப் பிரியாமல் வைத்துக்கொண்டான்.

நாகரிகமும் தான் சொன்ன சொல்லைக் காப்பாற்றியது. மனிதனது வாழ்வில் காணப்பட்ட மேடு பள்ளங்களை நிரவிச் சமமாக்கியது. அவன் போகும் பாதைக்கு விளக்கு ஏற்றி வைத்துப் பிரகாசம் அளித்தது. மனிதனும் உலகத்தில் தலை சிறந்து விளங்கினான். அவன் புகழ் தூரதூர தேசங்களில் எல்லாம் பரவி அவனுக்கும் பெருமை அளித்தது.

அப்புறம்தான் ஒரு நாள் மனிதனுக்கு ஒரு உண்மை புலனாகியது.

இத்தனை நாளும் தன்னோடு இருந்து வரும் நாகரிகம் உண்மை நாகரிகம் இல்லை, பொய் புனைந்த பொய் உருவம்தான் என்பதை அவன் உணர்ந்தான்.

ஆயினும் அவன் அதை வெறுக்கவில்லை. அளவற்ற அன்புடன் அதை நேசித்தான்; விரும்பினான். ஒருகணம் கூடப் பிரியவொட்டாமல் அதைத் தன்னுடனேயே வைத்துக் கொண்டான். பழகியதோஷம், அதை விரட்டியடிக்கும் துணிவே அவனுக்கு இதுகாறும் உண்டாகவில்லை. இல்லாவிட்டால் மேல் பூச்சு நாகரிகம் இந்த உலகத்தில் ஏன் இன்னும் தலைவிரித்தாடி வருகிறது?

# பழமை!

— க. கணேசலிங்கம் —

பழமையைப் பலர் பலவிதமான கொள்கையுடன் பேணிக் காப்பாற்றுவார்கள். தமது முன்னோர்மீதுள்ள பாசத்தினாற் சிலர் அவர்கள் விட்டுச்சென்ற பொருள்களைப் பேணி வைத்திருப்பார்கள், சிலர் தாம் முன் நல்லாயிருந்த நிலைமையை மற்றவர்களுக்கு மறைமுகமாகக் காட்டிக்கொள்வதற்காகப் பழைய பொருள்களை வீட்டில் பாதுகாத்து வைப்பர். வேறு சிலர், இந்த ஜென்மத்திலே அம்மாதிரிப் பொருள்களைத் தாம் விலைகொடுத்தும் வாங்க முடியாது என்ற நோக்கம் கொண்டு பழமையிற் பற்றுள்ளவர்களாயிருப்பார்கள். இன்னும் சிலர், புதிதாக ஒன்றுமே வாங்கமுடியாது,பழையதையாவது பாதுகாத்துக் கொள்வோம் என்ற சித்தாந்தத்தினால் பழமையைப் போற்றிப் பேணுவார்கள். இப்படிப் பல தரப்பட்ட கொள்கைகளில் இறுதியாகக் கூறிய கொள்கையைக் கடைப்பிடித்தே கைப்பிடிகழன்ற பொருள்களைக்கூட இதுகாறும் காப்பாற்றி வந்துள்ளேன் நான்.

பாடாத ரேடியோ, ஓடாத மோட்டார்கார் இவை என் வீட்டிலும் இருந்தன. அப்படியே என் துணிகளிலும் பழமைப்பற்று வைத்திருந்தேன். என் துணி துவைப்பவனிடம் புதுமைக்காகப் போட்டால் உருமாறித்தான் வரும். இதனால் சட்டை விஷயத்திலும் நான் அசட்டையாக இருந்தேன். என் வீட்டை ஒரு 'மியூஸியம்' என்று ஒரு நண்பன் யாரிடமோ புகழ்ந்திருப்பதாகக் கேள்வி. வீட்டு முன்புறத்திலிருந்து பின்புறம்வரையும் பழமையின் சாயலே படிந்திருந்ததை அவன் அறிந்திருக்க வேண்டும். இதுமட்டுமல்ல என் வீடுதேடி மூலிகைவகைகள் பிடுங்குவதற்காக மக்கள் கூட்டம் வருவதுண்டு. என் வேலி—ஈர்க்குகளால் பின்னப்பட்ட ஓர் வித வலைபோன்றது. இந்நிலைக்கு அதனைக் கொண்டுவந்தவை கறையான் கோஷ்டி என்பதை மறையாது கூறுகின்றேன். இப்படியே பல உயிர்ப் பிராணிகளும் எனக்கும் என் கொள்கைக்கும் உதவியளித்து வந்துள்ளன.

என் மனைவி இருக்கிருளே, அவள் ஒரு புதுமைப்பிரியை. எனினும் இதுகாறும் என்னைப் பிரியாமலே வாழ்ந்துவந்திருக்கிருள். அவள் பிரியப்படுகிருள் என்று ஒருமுறை அவளுக்கு ஒரு தையல் மெஷின் வாங்கிக் கொடுத்தேன். அவள் கூப்பன் கடைக்காரர்மாதிரி சதா எதையாவது வெட்டிக் கொண்டிருப்பாள். இத்தனையையும் ஏன் வெட்டினேம் என்று தெரியாமல் துண்டு துணிகளையெல்லாம் மீண்டும் பொருத்த முற்படுவாள். அப்பொழுதுதான் என் மெஷின் அவள் விரும்பாத சுருக்குகளையெல்லாம் ஏற்படுத்தி நூலளவிலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும். (தைத்து முடிவதற்குள் தானே நூல் அறுந்துவிடும்) இது என்னை எதிர்க்க அவளுக்கு உதவுவதோடு அடுத்தவீடு செல்லவும் வழி வகுக்கும். "தைத்துவிட்டு வருகிறேன்" என்று கூறி அங்கு சென்று கதைத்துவிட்டு வருவாள் அவள்.

வீட்டில் ஒரு அலமாரி உண்டு. இது அலிபாபா காலத்துக் குகையை ஞாபகப்படுத்தும். திறக்கும் மந்திரம் அவளுக்கு மாத்திரம்தான் தெரியும். திறப்பு அவள் கையில். "இறப்பதற்குமுன் அதனுள் என்ன இருக்கிறதென்பதைப் பார்த்துவிட அனுமதி தா" என்ருல் அவள் மறுத்துவிடுகின்ருள். "இரண்டொரு நகைகளையும் நான் வைத்திருப்பது உங்களுக்குப் பொறுக்குதில்லையா? கொண்டுவந்த எல்லாவற்றையும் அழித்துவிட்டீர்கள். இதையாவது வைத்திருக்க விடுங்கள்" என்று கூச்சல் போடுகிருள். அவள் ஸ்ரீதனம் கொண்டுவந்த சீமாட்டி. அவள் கொண்டுவந்ததுதான் இந்த வீடு. அவளின் பணத்தின் ஒரு பகுதியிலேதான் அந்த மோட்டார் கார் வாங்கினேன். அப்பொழுதெல்லாம் நாங்கள் அந்த மோட்டார்க்காரில் மாமனார் வீடு செல்லும்பொழுது (பெட்ரோலுக்குப் பணம் வாங்க) என்மனைவி என்பக்கம் சாய்ந்து "என் அதிர்ஷ்டம்தான் உங்களை நான் அடைந்தது" என்று வாய்விட்டுக் கூறியிருக்கிருள். ஏன், என் பக்கத்துவீட்டுக்காரரும் என் மோட்டார்க்கார் ஓட்டத்தைப் பார்த்து, "அவனுக்கொரு திசை" என்று கூறியிருப்பதை நான் அரைகுறையாகக் கேட்டிருக்கின்றேன். இப்பொழுது திசைமாறிவிட்டது. கைப்பசை இல்லாமல் இருக்கிறேன்! என் மாமனார் இரண்டாம்தரமாகச் ஸ்ரீதனம் தரமறுப்பதால் என் கொள்கையை மேலும் கடைப்பிடிக்க உத்தேசித்துள்ளேன்.

என் பிள்ளைகள்-நான்பெற்ற செல்வங்கள், என் கட்சிக்கு ஆதரவுதர எண்ணுவார்கள். ஆனல் என் மனைவி தனது பேச்சுவன்மையால் தன்பக்கம் இழுத்துவிடுவாள். என் கட்டிலே அவர்களது நடன அரங்கம். வீட்டின் கதவுகளே அவர்களுக்குக் குதிரையில்லாக் குறையைத் தீர்த்து வைக்கும். இந்தச் சவாரியில் ஏற்பட்ட தழும்புகளை அவர்கள் பெருமையாகப் பாதுகாத்து வைத்,

[15ஆம் பக்கம் பார்க்க]


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிருப்பர்

Std. 14.

அருள்வழி

# பாக்கியவான் யார்?

## பயமும் திகிலும் ஏற்படக் காரணம் என்ன?

— ஆ. மோசெஸ் —

உலகில் பணம்படைத்தோரைப் பாக்கியசாலிகளென்போம். அதுபோல், காணி, பூமி, அலங்காரவீடு, முதலிய செல்வச் சிறப்புடையோரையும் பாக்கியவான்களென்போம். கல்வி கற்றுவரும் மாணுக்கன் சோதனையில் சித்தி பெறும்போதும் பாக்கியம் உள்ளவன் என்கிறோம். உத்தியோகம் கிட்டும்போதும்—உயர்வுபெறும்போதும், அங்ஙனமே கூறுவோம். அதிர்ஷ்டசீட்டுவாங்கியவனுக்குப் பெருந்தொகைப் பணங் கிடைக்கும்போது பாக்கியசாலி என்றே புகழுவோம்.

இப்படியான பாக்கியசாலிகளாய் வாழ நாம் யாவரும் விரும்புகின்றோம். எவருக்கும் அதிர்ஷ்டம் வந்தாலோ என்னும் ஆசையுண்டு. ஒருவித குறைவுமின்றி நிறைவுபெற்று வாழவே மனிதன் ஆசிக்கிறான். அவ்வாறு நிறைவுபெற்றால் மனதுக்கு நிம்மதியுண்டா? அதுதானில்லை. மேலும் மேலும் "பாக்கியம்" பெருகவேண்டுமென்ற ஆசை அதிகப்படுகிறதையே காண்கிறோம். இப்படி ஆசைக்கு முடிவில்லாத நிலைமை ஏற்படுகின்றது. இந்த ஆசையால்—பாக்கியசாலிகளாக வேண்டுமென்னும் எண்ணத்தால் உண்டாகும் இன்னல்களுக்கோ அளவில்லை. ஒருவனை யொருவன் சந்தேகிப்பதால்உள்ளத்தில் பல துரோக இச்சைகள் உருவாகின்றன. அப்படி உருவாகும் எண்ணங்களால் ஊழல்கள் மலிந்து உலகம் சீர்கேடடைகின்றது.

ஒவ்வொருவரும் பாக்கியவான்களாக பேராசை கொள்ளும்போது அவனியில் அமைதி ஏற்படுவதெங்ஙனம்? ஒருவனைப்பகைத்துத் துன்பப்படுத்தி மற்றொருவன் பாக்கியசாலி ஆகிறான். இது உண்மையில் பாக்கியவாழ்வுதானா? அல்லது பாவ வாழ்வா? சிந்தித்தால் பாவ வாழ்வு எனக் காண்போம். இவ்வாறான பாவவாழ்வால் பார் முழுவதிலும் பயமும் திகிலுமே ஏற்படுகின்றன.

எவ்வளவு அதிக அதிர்ஷ்டம் பெற்று, உலகத்தில் பாக்கியசாலியாக ஒருவன் வாழ்ந்தாலும் அவன் பாக்கியசாலியல்ல எனத் தெளிவுப்படுத்த யேசு பெருமான், **"ஒருவன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன?"** எனக் கேட்கிறார்.

ஆகவே, ஆத்துமாவைக் கறைப்படுத்தும் இவ்வுலக பாக்கியத்தை நாடி மயங்கி ஜீவிப்போர், ஆத்தும ஆறுதலற்றவர்களாய்—வாடித் தவிப்பார்கள் என யேசு மொழிந்தார். அப்படியானால் பாக்கியவான்கள் யார்? இக் கேள்விக்கும் எம்பிரான் யேசு, மலையுபதேசத்தில் விடை பகர்கிறார்:

"ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராச்சியம் அவர்களுடையது. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதல் அடைவார்கள். சாந்தகுணமுள்ளவர்கள்பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்; நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத்தரிசிப்பார்கள். சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள். நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது. உங்களை நிந்தித்துத் துன்புறுத்திப் பலவித தீமையான மொழிகளையும் உங்கள்மேல் பொய்யாய்ச் சொல்வார்களானால்பாக்கியவன்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்." (மத். 5: 3-11)

இவ்வருள் மொழிகள் நமக்கு அதிக வியப்பை உண்டுபண்ணுவனவாகும். ஆம்; இக்கால உலக வாழ்வுக்கு இவைகள் முரண்பாடானவைகளே. இவைகள் நம் வாழ்க்கையிற் கடைப்பிடித்தொழுக அதிக கடினமானவைகள் தாம்; சந்தேகமில்லை. ஆயின், **ஆத்தும ஆறுதலான பாக்கியம்** அடைய ஆசிக்கும் எவருக்கும் இவை இன்றியமையாதனவாயும் அளப்பிலா ஆனந்த பாக்கியத்தை உண்டு பண்ணுவனவாயுமிருக்கும் என்பதற்கையமின்று.

ஆவியில் எளிமையோடு (அதாவது தாழ்மையோடு) நீதியினிமித்தம் துன்பமடைவோர் பரலோக ராச்சியம் நிச்சயமாகச் சுதந்தரிப்பர் என யேசு கூறுகின்றார். இன்னும் சாந்த குணத்தோடு துயரமனுபவிப்போர் பூமியைச் சுதந்தரித்து, ஆறுதலாக வாழ்வர் என்றும், நீதியின்மேல் பசிதாக முற்றோரும் இரக்க சிந்தையுள்ளோரும் தேவ இரக்கம் பெற்று, திருப்தியடைவர் என்றும், இருதய சுத்தமுள்ளவர்களாய் சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனைத் தரிசித்து - தேவபுத்திரர் என்னும் பட்டம் பெற்று- ராஜாதி ராஜனின் பிள்ளைகளாய் - பெரும் பாக்கியசாலிகளாய் - நித்திய காலம் மகிழ்ச்சியாய் வாழ்வார்கள் என்றும் மொழிந்தருளி - எம்பிரான் தம் அனுபவத்திலும் சாதித்து - உயிரையே உலகோருக்குப் பலியாக அர்ப்பணஞ்செய்தார்.

இவ்வரிய மொழிகளை மக்கள் சிரமேற்கொண்டு தியானித்து, இவைகளின்படி ஒழுகி - எல்லாவித முரண்பாடுகளும், பிணக்குகளும், பகைகளும், குரோதங்களும், சண்டைகளும், சச்சரவுகளும் உலகிலிருந்து அகற்றி, தேவராச்சியமாக உலகைமாற்றி, சகல ஜாதியாரும், பாஷைக்காரரும், நிறத்தாரும், மதத்தாரும் ஐக்கியமாய் - மகிழ்ச்சியாய் வாழ்ந்து பேரின்ப பாக்கியம் அடையும் நாளெந்நாளோ?

# முத்துமாலைக் கதை

ஓர் ஏரி. தெளிவான நீர். ஏரியின் அடியிலே விலையுயர்ந்த முத்துமாலை ஒன்று இருப்பது மேலிருந்து பார்த்தால் யாருக்கும் நன்றாகத் தெரிந்தது. அதை எடுக்கப் பலர் ஆசையுடன் மூழ்கினர். ஆனால் அடியிற் சென்று பார்த்தபோது அந்த முத்துமாலையைக் காணோம். என்றாலும் கரையில் இருந்து பார்த்தால் அது நன்கு தெரிகிறது.

ஒரு பெரியவர் அவ்வழியே வந்தார். அவரிடம் இதைப் பற்றிக் கேட்டனர். முத்துமாலை ஏரிக்கு அடியில் இல்லை என்றும் வேறு எங்கோ இருக்கவேண்டும் என்றும் அவர் சொன்னார். "நீரில் அதன் நிழல்தான் தெரிகிறது" என்று கூறி மேலேபார்த்தார். ஒரு மரத்திலே அந்த மாலை தொங்கிக் கொண்டிருந்ததைக் காட்டினார். ஏதோ ஒரு பறவை அந்த மாலையை எங்கிருந்தோ கொண்டுவந்து அங்கு வைத்திருக்கவேண்டும்.

உண்மையான இன்பம் நம் உள்ளிருக்கும் நித்திய வஸ்துவிடமே உள்ளது. புலன்கள் வழியே தன் நிழலைத்தான் காண்கிறோம். ஒவ்வொரு பிறப்பிலும் இதன் நிழலையே கண்டு, புலன் நுகர்ச்சியாகிற நிழலில்தான் இந்த இன்பம் இருப்பதாக நினைத்து ஏமாறுகின்றோம். நமக்குள்ளேயே உள்ள இந்த இன்பத்தைத் தேடாமல், வெளியில் தேடத் தேட உண்மை இன்பத்தை அடையமுடியாது, பந்த பாசங்களில் தட்டுண்டுதான் கிடக்கவேண்டியிருக்கும்.

# நினைத்தது கைகூடும்

ஒழுக்கம் உயிரினுஞ் சிறந்தது. ஒழுக்கமுடையார் எல்லாமுடையார். ஒழுக்கங்களாவன, கொல்லாமை, கள்ளாமை, பிறர்வசை உரையாமை, பிறர்பொருள் கவராமை, தாழ்மை, பொய்யுரையாமை முதலியனவாம்.

எக்கருமத்தைச் செய்யும் பொழுதும் ஊக்கத்தோடும் சிரத்தையோடும், மனமகிழ்ச்சியோடும் செய்து பழகுதல்வேண்டும். அப்படிச்செய்து பழகிவந்தால் மனவுறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாத்திரசித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்ம சக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும். இவர் பகைவர், இவர் உறவினர் என்ற பாகுபாடு சித்தத்திற் புகுந்து கவலையை உண்டாக்காது.

'எனக்கொரு குறையுமில்லை. என்னிடத்திலே எல்லாரும் அன்பாய் இருக்கிறார்கள். நானும் எல்லாரிடத்திலும் அன்பாய் இருக்கிறேன்' என்று அடிக்கடி நினைந்து நினைந்து சாதிக்கவேண்டும். இப்படியே இடைவிடாமல் பழகிவந்தால் எல்லாமறியும் ஆற்றலும் எல்லாஞ் செய்யும் வல்லமையும் எளிதிற் கைவரும்.

—நற்சிந்தனை

# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | பு. | சூ. | வெ. |
| | இவ்வாரக் கிரகநிலை 25 உ இடப - புத | | செ. |
| | | | |
| சனி | வியா | | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(23-5-59—29-5-59)

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) பணத்துறையில் இவ்வாரம் நல்லதாகும். இரகசியப் பகைவர்களைப் பற்றிக் கவனமாக இருக்கவேண்டும். தொழில் துறையில் செல்வாக்கு அதிகரிக்கும். எல்லாக் கருமங்களிலும், பிரயாசை அதிகரிக்கும் மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கட்கு இடமுண்டு.

**இடபம்** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) இனத்தவர்களுடன் சண்டை சச்சரவுகளுக்கும், தவறான எண்ணங்களுக்குமிடமுண்டு. தேகசுகம் குறைவடையும். மேலதிகாரிகள் அதிக உதவியாயிருப்பர். வார இறுதியில் மகிழ்ச்சிகரமான செய்திகள் எட்டும். மனம் அமைதியாயிருக்க மாட்டாது. மாதா வழியுறவினர் மூலம் தொந்தரவுகளுக்கு இடமுண்டு.

**மிதுனம்** (மிருகசீரிடம் 3, 4-ம் பாதம் திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) புதிய முயற்சிகளில் சித்தியும் எதிரிகள் அழிவும் ஏற்படும். இகழ்ந்து பேசுபவர்களைப் பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். களியாட்டுக்களில் அதிக விருப்பு உண்டாகும். நண்பர்களும் உறவினரும் உதவியாயிருப்பார்கள்.

**கடகம்** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) உமது கருமங்களை நிறைவேற்றுவதற்கு அதிகம் முயன்று உழைக்க வேண்டும். சில கண்டனங்களை எதிர்க்க வேண்டி நேரிடும். நண்பர்கள் அதிக உதவியாயிருப்பர். புதுக் கருமங்களில் ஈடுபடுவதற்கு அதிக ஆர்வம் ஏற்படும். பணத்துறையில் இவ்வாரம் அதிக நன்மையுடையதாகும்.

**சிங்கம்** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) தேகாரோக்கியக் குறைவு இடையிடையே ஏற்படக்கூடும். பெண்களின் நட்பால் அனேக நாட்களாக இருந்துவந்த மன எண்ணம் நிறைவேறும். எதிலும் மன ஆறுதல் இல்லாதிருப்பின் இடமாற்றம் ஏற்படக்கூடும்.

**கன்னி** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம், அத்தம், சித்திரை 1-ம், 2-ம் பாதம்) குடும்பத்தில் புண்ணிய கருமங்கள் நிறைவேறும் பெண்களின் உறவுகளால் தொல்லைகள் தோன்றி மறையும். பெரியோர்களின் தொடர்புகள் ஏற்படும். வியாபாரத் துறையில் முன்னேற்றங்கள் உண்டாகும்.

**துலாம்** (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்) சினேகிதர்களின் உதவி அதிகரிக்கும். குடும்பக் கவலை சிறிது இருந்து வரும். வார இறுதியில் மனம் நிம்மதி அடையும். சத்துருக்களால் தீங்கு விளைந்தாலும் அது பின்னர் நன்மையில் முடியும். தொழில் வியாபாரம் ஆகியன இவ்வாரம் அதிக கவனத்தைக் கவரும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை) பணவிருத்தி உண்டாகும். களியாட்டங்களில் மனம் அதிகமாக ஈடுபடும். மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கள் நிகழும். சத்துருக்களால் தீங்குண்டானாலும் அது பின்னர் நன்மையே தரும். புதிய கருமங்களில் மனம் சதாநாடிக்கொண்டிருக்கும்.

**தனுசு** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) எதிர்பார்க்காத முறையில் சில கருமங்கள் நிறைவேறும். பிரயாண அலைச்சலும், சினேகிதர்களின் உறவால் கவலையுமுண்டு. அன்னியர் நட்பு அதிகரிக்கும். சுகவீனமும் குடும்பச் சிக்கல்களும் தோன்றி மறையும்.

**மகரம்** (உத்தராடம் 2,3,4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) தொழில் முறைகளில் செல்வாக்கு அதிகரிக்கும். பிரயாண அலைச்சலுடன் சினேகிதர்கள் உறவால் கவலையுமுண்டு. இவ்வார முற்பகுதியில் பணச் செலவுகள் சிறிது அதிகரிக்கும். எதிர்பார்க்காத முறையில் சில நற் கருமங்கள் நிறைவேறும்.

**கும்பம்** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்) இனத்தவர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். புது முயற்சிகளிற் சித்தியும் புகழும் உண்டாகும். குடும்பச் சூழலில் மனக்கவலைக்கு இடமுண்டு. நண்பர் அதிக உதவியாயிருப்பர். பெண்பாலார் நட்பு அதிகரிக்கும்.

**மீனம்** (பூரட்டாதி 4-ம் பாதம். உத்தரட்டாதி, ரேவதி) சினேகித வழியால் உதவிப் பேறுகள் கிடைக்கும். வியாபாரத் துறைகளில் முன்னேற்றங்கள் உண்டாகும். குடும்பக் கவலைகள் தோன்றி மறையும். நிலைமாற்றங்களும் அற்ப வருமானமும் உண்டாகும். சினேகிதர் உதவியால் நற் பேறுகள் வந்தடையும்.

சினிமா உலகம்

# நான் சொல்லும் ரகசியம்

**நான் சொல்லும் ரகசியம்** என்ற திரைச்சித்திரம் மாளிகைக்கும், மண் குடிசைக்குமுள்ள தொடர்பை, வேற்றுமைகள் ஒற்றுமைகள் உட்பட, எடுத்துக்காட்டுகிறது. மாளிகைகளில், பணக்காரக் குடும்பங்களில் பிறந்தவர்களுள் நல்லகுணம் படைத்தவர் ஒருவருமே இல்லை என்று ஏழைகளுக்கிடையில் நிலவும் அபிப்பிராயம் தப்பானது என்பதை நிரூபிக்கிறது இப்படம்.

பணக்காரக் குடும்பத்திற் பிறந்தவன் கருணாகரன், அப்படியிருந்தும் அவன் ஏழைகளின் நண்பன். பரந்த நோக்கும் பரோபகாரச் சிந்தையும் கொண்ட சீராளன் அவன். சந்தர்ப்பவசத்தினால் ரிக்ஷாக்காரனாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகிய அவன், ஏழைக்குடும்பத்திற் பிறந்து, மிகவும் கஷ்டப்பட்ட வாழ்க்கையை நடத்தி வந்த மனோரமாவைக் காதலிக்கிறான். இந்தக் காதல் இரு துருவங்களில் நின்ற இருவரின் குடும்பங்களுக்கிடையில் பல சிக்கல்களை உண்டாக்கினாலும், கருணாகரனின் தந்தையுடன் சம்பந்தப்பட்ட ஒரு முக்கிய இரகசியத்தை அம்பலப்படுத்திவிடுகிறது.

கதை ஓரளவுக்குச் சுவையாகவே அமைந்துள்ளது. வழக்கமாகத் தமிழ்ச் சினிமாக் கதைகளிற் காணப்படும் குழப்பம் இதில் அவ்வளவாக இல்லை. அத்துடன் வசனம் பொருத்தமாகவும், சுருக்கமாகவும் உள்ளது. பல இடங்களில் கருத்து நிறைந்த ஹாஸ்யம் வசனத்தில் தொனிக்கின்றது.

கருணாகரனாகவும், ரிக்ஷாக்காரன் முத்துவாகவும் சிவாஜி கணேசன் நடித்துள்ளார். அவர் தன்னுடைய பாகத்தை அதி உன்னதமாக நடித்துவிடுகிறார். எல்லாக்கட்டங்களிலும் அவரது இயற்கையான தனிப் பண்பு சோபிக்கின்றது.

மனோரமாவாக நடித்திருப்பவர் அஞ்சலி தேவி. வஞ்சனை, சூது அறியாத ஏழைக் கிராமப் பெண்ணே உருவெடுத்தாற் போல அவர் விளங்குகிறார். உணர்ச்சிக் கட்டங்களில் அவரது நடிப்பு உள்ளங்களைத் தொட்டிழுக்கிறது.

கருணாகரனின் தந்தை வடிவேலுவாக நடிப்பவர் தங்கவேலு. அசல் தந்தையாகவே அவர் மாறிவிடுகிறார். அடிக்கடி தன் பிள்ளைகளை 'ராசுக்கோல்' என்று ஏசுவதும், மனைவியை மிரட்டுவதும் அவரது கண்டிப்பின் எதிரொலியாகிவிடுகின்றன.

மனோரமாவின் தந்தையாக, மில் தொழிலாளி வேலாயுதமாக வருபவர் எஸ். வி. சுப்பையா. இவர் தாம் ஒரு சிறந்த குணசித்திர நடிகர் என்பதை இப்படத்திலும் நிரூபித்துவிடுகிறார்.

டாக்டர் ஷைலக்காக வந்து சிரிப்பூட்டுகிறார் சந்திரபாபு. அவருக்கு உதவியாக, நர்ஸ் ரோஸியாக வருகிறார் ஜி. சகுந்தலா.

மருமகள் லீலாவாக எம். என். ராஜமும், அகிலாண்டமாக சி. கே. சரஸ்வதியும் தங்கள் பாகங்களைச் சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர்.

பாடல்கள், சிலவற்றைத் தவிர ஏனையவை நன்றாகவே இருக்கின்றன. ஹெலனின் நடனம் பரவாயில்லை.

டைரக்ஷன் நன்றாக அமைந்திருக்கிறது என்றே கூறவேண்டும். கனவுக்காட்சி ஜோடனைகள் அதிகம் இல்லாது அமைந்திருப்பதும், தற்கொலை செய்யும் நோக்கத்துடன் விரைந்து கொண்டிருந்த வேலாயுதத்திற்கு ஓடும் புகைவண்டியில் அவனுடைய இறந்த மனைவியின் உருவம் உபதேசம் செய்வது போன்ற காட்சியும், இயற்கையான காதற் காட்சிகளும் டைரக்டர் ஸ்ரீதர் ராவ் அவர்களின் திறமையை நன்கு புலப்படுத்துகின்றன.

நான் சொல்லும் ரகசியம் என்னவெனில் எல்லாரும் பார்த்து இன்புற வேண்டிய படம் இது என்பதே.

—மின்மினி.




# வீரபாண்டிய கட்டபொம்மன்

### லண்டன் விஜயம்!

**த**மிழ் நாட்டில் வெளியிடப்பட முன்னரே, சிவாஜி கணேசன் நடிக்கும் சரித்திர வீரனின் கதையான 'வீரபாண்டிய கட்ட பொம்மன்' படம், லண்டனில் வெளியிடப்பட்டுள்ளது, தமிழ்ச்சினிமாவில் இதுவரை நடந்திராத புதுமையாகும். இந்த ஏற்பாட்டை, லண்டனிலுள்ள தமிழ்ச்சங்கமே ஒழுங்கு பண்ணியது. தமிழ் நாடெங்கும் 16-ஆம் திகதி பவனி புறப்பட்ட கட்டப்பொம்மன், அதற்கு முன்னதாகவே, 10-ஆம் திகதியன்று, எதிரியின் தலைநகரான லண்டனிலேயே தன் கொடியை நாட்டிவிட்டான்!

இப்படக் காட்சிக்கு லண்டனிலுள்ள ஏராளமான தமிழ் மக்கள் வந்திருந்தனர். அத்துடன், ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அக்காட்சிக்குத் தலைமை வகித்தார். படம் முடிந்த பின்னர் அவர் படத்தின் தரத்தையும், உயர்ந்த நடிப்பையும் புகழ்ந்தார்.

# பணம்! பணம்!! பணம்!!!

**ஹா**லிவூட் உலகச் சினிமாத் துறைக்கே தலைமைப்பீடமாக அமைந்துள்ளது. அங்கு, சில நடிகர்களுக்குக் கொடுக்கப்படும் பணத்தொகையை எண்ணிப் பார்க்கவே அதிசயமாகவிருக்கிறது! பிரபல நடிகர்களான வில்லியம் ஹோல்டனும் ஜோன் வெயினும் ஒரு படத்திற்கு 7,50,000 டொலர்கள் வாங்குகிறார்கள். அதாவது, எங்களுடைய நாட்டுப் பணத்தின் கணக்குப்படி முப்பத்து இரண்டு லட்ச ரூபாய்! பிரபல நடிகை அனீற்றா எக்பேர்க் நாற்பதுத் இரண்டு லட்சம் ரூபாய் வரை கேட்க ஆரம்பித்திருக்கிறாராம். பிரபல டைரக்டர் ஜோன் போர்ட் என்பவர் ஒரு படத்திற்குப் பத்து லட்சம் ரூபாய் பெறுவதுடன், படத்தின் இலாபத்திலும் ஒரு பங்கு பெறுகிறார்.

விளையாட்டுப் பகுதி

# கொழும்பில் யாழ்ப்பாணம் கிறிக்கெற் வீரரின் வெற்றி

கொழும்பு சென்றிருந்த யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்களின் கிறிக்கெற் கோஷ்டி, பொதுப் பள்ளிக்கூடங்கள் கிறிக்கெற் கோஷ்டியைத் தோற்கடித்தது. இலங்கையின் சிறந்த கிறிக்கெட் விளையாட்டு வீரருக்கு 16-5-59 சனிக்கிழமை பரிசுகள் அளிக்கப்பட்டன. அதே தினத்தில், இவ்விளையாட்டும் பரிசளிப்பு விழாவும் பம்பலப்பிட்டி சென்ற். பீற்றேர்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. திரு. டொனவன் அன்றீ அவர்கள் பரிசில்களை வழங்கினார். யாழ்ப்பாணம் கிறிக்கெற் வீரர்கள் அன்றைய தினம் அபாரமாக விளையாடிக் கொழும்பு கிறிக்கெற் ரசிகர்களுக்கு ஒரு நல் விருந்தை அளித்தனர். அவர்கள் பொதுப் பள்ளிக்கூடங்கள் கோஷ்டியைக் கடைசி நேரத்தில் 67 ஓட்டங்களினால் தோற்கடித்து வெற்றிவாகை சூடினர். யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்கள் கோஷ்டிக்காக விளையாடிய எம். சீவரெத்தினம் என்பவர் 77 ஓட்டங்களைப் பெற்று, தன் திறமையை நன்கு வெளிக்காட்டினார். பந்து வீசுவதில் யாழ்ப்பாணப் பள்ளிக் கூடங்கள் கோஷ்டிக்காக எஸ். சண்முகராசாவும், ரி. பரம்சோதியும் திறமையுடன் செய்து ஆளுக்கு மூன்று விக்கெற்களை வீழ்த்தினர்.

பொதுப் பள்ளிக்கூடங்களுடன் விளையாடி இவ்விதம் வெற்றிபெற்ற யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்களின் கிறிக்கெற் கோஷ்டியினர் இலங்கைக் கிறிக்கெற் சரித்திரத்திலேயே ஒரு புதிய சாதனையை ஈட்டியுள்ளனரெனில் அது மிகையாகாது. இந்த வெற்றி யாழ்ப்பாணம் கிறிக்கெற் வீரர்களுக்கு மேலும் மேலும் உற்சாகம் அளிக்குமென்பதற்கு ஐயமில்லை. கொழும்பில் யாழ்ப்பாணம் கிறிக்கெற் விளையாட்டுப் பற்றி இதுவரை இருந்துவந்த தப்பபிப்பிராயம் இந்த வெற்றியுடன் நீங்கிவிடுமென்றே நம்பலாம்.

சனிக்கிழமையன்று விளையாட்டுப் போட்டி முடிவடைந்தபோது அளிக்கப்பட்ட பரிசுகளும், அவற்றைப் பெற்றவரின் விபரங்களும் பின்வருமாறு ;

**1. இவ்வருடப் பள்ளிக்கூடக் கிறிக்கெற் விளையாட்டு வீரர்:**
**ஈ. எல். பெரேரா (றோயல்).**

**2. சிறந்த பள்ளிக்கூடத் துடுப் பெடுத்தாடல் வீரர் :**

[15ஆம் பக்கம் பார்க்க]

# பழமை!

[12ஆம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளார்கள். அவர்களின் உடையைப் பொறுத்தளவில் மாலையில் என்கட்சிக்கு ஆதரவாளர்களாக மாறுவார்கள். ஆனல் மனைவியின் செல்வாக்கு, மறுபடியும் அவர்களை அவள் கட்சியிற் சேர்த்துவிடும்.

என் வேலைக்காரிதான் என் வீட்டில் எனக்கு முழு ஆதரவும் தருகிருள் என்பதை மகிழ்ச்சியுடன் கூறிவிடுகிறேன். அவள் கையிலிருக்கும் விளக்குமாறு இதற்குச் சாட்சி. "கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது" என்பார்களே அந்த நிலை அதற்கு. காலையில் அவளைப் பார்த்தால் இளங்கோவின் ஒரு பாட்டுத்தான் என் நினைவுக்கு வரும். "மெய்யிற் பொடியும் விரித்த சடையும்..." அவள் தலை சீப்பைக்கண்டு பல நாட்கள் ஆகியிருக்கும். ஓர் வேளை திரௌபதைபோல் ஏதேனும் சபதம் செய்துள்ளாளோ என்னமோ எனக்குத் தெரியாது. அவள் தலையணையைப் பார்த்தால் ஏதோ எண்ணெய் கலந்துசெய்த பொருள் என்றே எண்ணத்தோன்றும். அவளின் பாயின் நிலையை என் வேஷ்டியைத் தேடிய அன்றுதான் தெரிந்துகொண்டேன். அன்று குளிர் கூடினமையால் என் வேஷ்டியைக் கொண்டுபோய்ப் போர்த்திக்கொண்டு படுத்திருக்கிருள். காலையில் மறந்து அதைப் பாயுடனேயே சுற்றிவைத்துவிட்டாள். நான் என் வேஷ்டியைக் கண்டேன். பாயுடன் அது ஐக்கியப்பட்டிருந்த நிலையை என்னுல் பிரிக்கமுடியவில்லை. மனமும் வரவில்லை. அவளுக்கே அதனை நான் அன்பளிப்பாக அளித்துவிட்டேன்!

* * *

அலாவுதீனிலும் அற்புத விளக்கிலும் வரும் மந்திரவாதி போன்ற ஒருவன் என் வீட்டிற்கு நானில்லாதபொழுது அடிக்கடி வருவதாக என் வேலைக்காரி கூறியுள்ளாள். என் மனைவிக்குப் பழைய பொருள்களின் மதிப்புத் தெரியாது. அவள் நான் பாதுகாக்கும் பழைய பொருள்களை அவனிடம் கொடுத்துப் புதிய பொருள்களை வாங்குகின்ருளாம். தற்காலப் பெண்களே இப்படித்தான் எதையாவது மாற்றிக் கொண்டிருக்கவே விரும்புகின்ருர்கள்!

காடுமேடெல்லாம் என் பாதமே கதியெனக் கூடிவந்திருக்கின்றது என் செருப்பு. ஆபீஸில் எத்தனை வருடகால 'சேர்விஸ்' எனக்கு என்பதை அவைகளைப் பார்த்து அறிந்துகொள்ளலாம். என் கையிலிருக்கும் பையைப்பார்த்துச் சிலர் "யாத்திரைக்கோ?" என்று கேட்டிருக்கிருர்கள். வீட்டிற்குப் பொருள்கள் வாங்கிக்கொண்டு போகத்தான் இதை ஆபீசுக்குக் கொண்டு போகிறேன். யாத்திரைக்குப் போவதென்ருல் என் முகத்திற் சோக முத்திரையா பதிந்திருக்கும்?

என் ஆபீஸ், யாத்திரிகர்களுக்கு ஏற்ற இடந்தான். அதனை ஒரு மடம் என்றுகூடச் சொல்லிவிடலாம். மேலே காற்ருடி இருக்கும். அது காற்றடித்தால் விழுந்துவிடுமோ என்ற நிலையில் தத்தளிக்கும். இதனுல் அது சுழலுவதை யாரும் விரும்புவதில்லை. வேலையின் தொகையை நினைத்தால் தலை சுழலுமே. பின் அது எதற்குச் சுழலவேண்டும்?

என்முன் இருக்கும் மேசையில் பழமை படர்ந்திருக்கும்: அதுவும் எனக்கு ஆசையாய் இருக்குமென்று துடைக்காமல் விட்டுவிடுவான் எங்கள் ஆபீஸ் பையன். என் ஆபீஸ் ஆதரவாளன் அவன். "டேய்! இது என்ன இப்படிக் கிடக்கு? வாடா இங்கே" இப்படியெல்லாம் நான் அழைக்காததால் தான் என்கட்சிக்கு ஆதரவாயிருக்கிருன். "பழைய படம் வந்திருக்கு ஐயா; பார்க்கேல்லையா?" என்று கேட்கும் ஒரு நண்பன் நிலையில் உள்ளவன் அவன். எல்லோரும் இங்கு மன்னர்கள் என்னைத்தவிர.

சாய்ந்தால் என்கூடவே சாயும் நாற்காலி என் மேசைக்கேற்றதாக இருக்கிறது. அந்த நாற்காலிக்கு நாமேன் அதிக பாரமாக இருப்பானென்று, என் இருகால்களையும் ஆதாரமாகக்கொடுத்து 'ஆறுகாலிகளாக்குவேன் நான். நிலம் சற்றுச் சரிவாக இருந்தால் அது தானே நடந்திருக்கும். நல்லவேளை தட்டையாக இருப்பதால் என்னைத் தாங்கிக் கொள்ள அது இருக்கிறது.

குப்பைக்கூடை ஒன்று என் மேசைக்கருகில் இருக்கிறது. அதிலுள்ள குப்பை ஒரு ஏக்கர் நிலத்திற்குப் பசளைபோட உதவும் என எண்ணுகின்றேன். இதுவே என்கட்சிக்கு அதிக வாக்குகளைப் பெற்றுத்தருகிறது. என் சகஉத்தியோகஸ்தர்களும் என் கூடையையே வாக்குகள் போடும் பெட்டியாக மதித்துப் பேப்பர்களை மடித்துப் போடுவார்கள். அவர்கள் கூடைகளெல்லாம் காலியாகவே இருக்கின்றன. அவர்களின் மண்டைகளைப்போல! இவ்வளவு ஆதரவு தந்தது மட்டுமல்ல என்னை அவர்கள் செல்வாக்குள்ள கூடையின் பெயரைக்கொண்டே (குப்பைக் கூடை) மறைமுகமாக அழைக்கின்ருர்கள். பட்டம் பதவிகளுக்கு நான் ஆசைப்படாமல் சாதாரண 'கிளார்க்'காக இதுகாறும் இருந்து வந்தாலும் என் கொள்கைக்காக நான் பெற்ற பட்டங்கள் அநேகம்.

இறுதியாகப் புதுமையைப் பூச எண்ணுபவர்கள் எவ்வளவு இன்னல்களுக்குள்ளாகின்ருர்கள் என்பதைமட்டும் கூறிப் பழமையின் பெருமையை நிலைநிறுத்த எண்ணுகிறேன்.

எங்கள் ஆபீசுக்கு ஒருமுறை சில புதுமைகளைப் பூச ஒருவன் வந்திருந்தான். மேல்மாடிக்குச் சங்கிலிப்பாலம்போன்ற படிகளில் ஒருமாதிரி ஏறிப்போய்த் தன் வேலைகளை ஆரம்பித்தான். மேல்மாடிக்கும் கீழ்மாடிக்கும் இடையில் பலகைதான் போடப்பட்டிருந்தது. ஆகவே அவன் அங்குசெய்த வேலைகளின் எதிரொலி கீழ்மாடியில் இருந்த எனக்குக் கேட்டது. அந்தச் சப்தங்கள் எல்லாம் என் பழையகார் ஓடும்பொழுது உறுமிக்கொள்வதை எனக்கு நினைவூட்டின. அந்த நினைவு என்னை உல்லாசபுரிக்கு இழுத்துச் சென்றது. என்னை மறந்தேன்; என் ஆபீஸ் வேலையை மறந்தேன். "படார்! ..."ஒரு சப்தம் என் சிந்தனையைக் கலைத்தது. ஒரே அதிர்ச்சி; என் மேசைமேற் காட்சி தந்தான் மேல்மாடியிற் புதுமைபூசச் சென்றவன். அவன் கையில் வைத்திருந்த மையுடன் வந்துவிட்டான். எனக்கும் மைபூச எண்ணினுனே என்னவோ என் உடையெல்லாம் நீலவண்ணமாகக் காட்சியளித்தது. அவனுல் என்ன செய்யமுடியும்! பலகை அவனைக் கைவிட்டது; எதிர்பாராமலே என் மேசையில் வந்து விழுந்துவிட்டான்.

வீடுநோக்கி நான் விறுவிறு என்று ஓடினேன். பக்கத்து வீட்டு ரேடியோ "நீலவண்ணக் கண்ணு வாடா" என்று என்னைப் பார்த்துப் பரிகாசம் செய்வதுபோலப் பாடிக் கொண்டிருந்தது.

## கொழும்பில் யாழ்ப்பா........

[14ஆம் பக்கத் தொடர்ச்சி]

**சறத் சில்வா** (நாலந்தா)

**3. சிறந்த பள்ளிக்கூடப் பந்து வீச்சு வீரர் :**

**எல். ஆர். குணத்திலக்கா** (வெஸ்லி)

**/. சிறந்த பள்ளிக்கூடப் பந்துபிடிக்கும் வீரர் :**

**ஈ. எல். பெரேரா** (ரோயல்)

**5. அதிக ஓட்டங்கள் பெற்ற வீரர் :**

**லையெனல் பெர்னுண்டோ** (சென்ற். பெனடிக்ற்ஸ்).

யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்கள் கோஷ்டிக்கும் பொதுப் பள்ளிக்கூடங்கள் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற **விளையாட்டிற்குப் பரிசுகள் :**

**1. சிறந்த துப்பெடுத்தாடுதல் வீரர்:**

**எம். சீவரெத்தினம்** (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

**2. சிறந்த பந்துவீச்சுவீரர் :**

**எஸ். சண்முகராசா** (சென்ற். ஜோன்ஸ்)

**3. யாழ்ப்பாணம் கோஷ்டியின் சிறந்த துப்பெடுத்தாடல், பந்துவீச்சு, பந்துபிடித்தல் வீரர்கள் :**

**எம். சீவரெத்தினம்** (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி).

**எஸ். சண்முகராசா** (சென்ற் ஜோன்ஸ்)

**என். சிவநாதன்** (சென்.ஜோன்ஸ்)

## ரஸிக ரஞ்சன சபா
## காரசாரமான விவாதம்

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் தற்காலிகச் செயற்குழுவின் கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றது. அதனது இசை விழாக்களில் ஹரிஜன கலைஞர்கள் பங்குபற்றுவது பற்றி நடந்த விவாதம் காரசாரமானதொன்ருகவிருந்தது. பல அங்கத்தவர் கூட்டத்தைவிட்டு வெளியேறினர். இப்போதையத் தலைவர் தற்காலிகச் செயற்குழுவினுல் தெரிவு செய்யப்படவில்லையெனக் கூறப்பட்டது. செயலாளர் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துவிட்டுக் கூட்டத்தை விட்டு வெளியேறினுர். அவரைத் தொடர்ந்து பலர் வெளியேறினர். ஆனுலும், கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. நிரந்தரக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (ந. நி.)

## உடுப்பிட்டி
## இளம் விவசாயக் கழகம்


உடுப்பிட்டி இளம் விவசாயக் கழகத்தினர் சென்ற புதன் கிழமை உடுப்பிட்டி மகளிர் கலாசாலையில் கழக நிதிக்காக ஓர் இசைக்கச்சேரியும் நாடகமும் நடாத்திஞர்கள்.

'பொறுப்பாளி யார்?' என்ற நாடகத்தை யாழ்ப்பாணம் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் வெகு சிறப்பாக நடித்துச் சபையோரின் பாராட்டைப் பெற்றனர்.


மகத்தான 2-வது வாரம்

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை)

பிரின்ஸ் (ஹட்டன்)



வின்ஸர் (யாழ்ப்பாணம்)

நெல்சன் (திருகோணமலை)

சிவாஜி கணேசன், அஞ்சலிதேவி, எம். என். ராஜம், சந்திரபாபு, கே. ஏ. தங்கவேலு

நடிக்கும்

நான் சொல்லும் ரகசியம்

டைரக்ஷன்: ஹெரலன்

மங்களகரமான **2**-வது மாதம்!

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **விஜயா** (மட்டக்களப்பு) **வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)

மற்றும் பதினொரு திரைகளில்

நட்சத்திரங்கள் :

- ★ எம். ஜி. ராமச்சந்திரன்
- ★ பி. பானுமதி
- ★ எம். என். நம்பியார்
- ★ பி. எஸ். வீரப்பா
- ★ எம். என். ராஜம்
- ★ பி. சரோஜாதேவி
- ★ எம். ஜி. சக்கரபாணி
- ★ டி. கே. பாலச்சந்திரன்
- ★ ஜே. பி. சந்திரபாபு
- ★ ஜி. சகுந்தலா
- ★ டி. பி. முத்துலெட்சுமி



டைரக்ஷன் :
எம். ஜி. ராமச்சந்திரன்

சங்கீதம் :
எஸ். எம். சுப்பையா

வசனம் :
கண்ணதாசன்

ஸ்டுடியோ :
வாகினி & விஜயா

பின்னணி :
டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, பி. லீலா, பி. சுசீலா, டி. ராஜரத்தினம், ஜமுனாராணி.

அற்புதக்கலையின் அழகுப் படைப்பு அனைத்தும் நிறைந்த கருத்துக் குவியல்

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்

# நாடோடி மன்னன்

---

மகத்தான **3**-வது வாரம்!

## சென்ட்ரல் - ஓடியன் - லிபேர்ட்டி - ஜோதி

**சென்ட்ரல்** (கொழும்பு) · **ஓடியன்** (மவுண்ட் லவினியா)
தினசரி மாலை 6-00, 9-30 மணி. சனி, ஞாயிறு பிற்பகல் 2-00 மணி. ஞாயிறு காலை 10-00 மணி

**லிபேர்ட்டி** (பதுளை)
தினசரி மாலை 6-00, 9-30 மணி. சனி, ஞாயிறு பிற்பகல் 2-30 மணி.

**ஜோதி** (திருகோணமலை)
தினசரி மாலை 6-00, 9-30 மணி. ஞாயிறு பிற்பகல் 2-00 மணி.

### பிரிவுண்டு நிற்கும் சமூகங்களுக்கும், குடும்பங்களுக்கும் அறிவுரை கூறும் அருமையான சித்திரம்!

**அனைவரும் பார்க்க வேண்டிய படம்!**

★ ★

எஸ். எஸ். ராஜேந்திரன்
பிரேம் நஸீர்
டி. பாலசுப்பிரமணியம்
வி. கே. ராமசாமி
எஸ். வி. சுப்பையா




பி. சரோஜாதேவி
கிரிஜா
சி. கே. சரஸ்வதி

★ ★

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி வெளியிடப்பெற்றது.